www.tamilarangam.net

# சமர்

இதழ் 7



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

உள்ளே ---


1. உங்களுடன் சமர் --------- 3

2. முன்றுவது பாதைக்கான திட்டம் ---- 6

3. வாசகர்களும் நாங்களும் ----------10

4. கருத்துக்கள் மீது விமர்சனங்களைக் கோருகின்றோம் -----------------14

4. பிரஞ்சுவாழ் முஸ்லிம்களின் ஒரு துண்டுபிரசுரம் -------------------18

5. இலக்கியச் சந்திப்பும் மறுக்கப்பட்ட கருத்துச் சுதந்திரமும் ---21

6. இலக்கியச் சந்திப்பும் நீக்ஷிச்சிகள் மீதான எமது நிலையும் ---25

7. இலக்கியச் சந்திப்பும் பிழைப்புவாதப் பிரமுகர்களும் --------37

8. நடைமுறைப் பிரச்சனையில் மார்க்ஸ் கோட்டை விட்டாரா? -------47

9. மௌனத்தின் முடிவும் மரணமே ---------59

என். எல். எவ். ரி யின் வரலாறு

10. தொடர்ச்சி.... ---------------60

11. தேசிய சக்திகள் தொடர்பான விவாதம்-65

12. சமுகப் பிரச்சனைகளைக் கண்டறிவதெப்படி? ---------------70

www.tamilarangam.net

## உங்களுடன் சமர்

இன்றைய தமிழீழப்போராட்டத்தின் தேக்கநிலையும், இந்நிலைக்கு உரிமையுடைய பாசிச சக்திகளின் வளர்ச்சியை முறியடித்து ஒரு சரியான போராட்டத்தை முன்னெடுத்து நெறிப்படுத்த ஒரு தலைமையின் தேவை நம்மெல்லோர் முன்னுள்ளது. இத்தேவையின் பிரதிபலிப்பாகவே ஐரோப்பிய நாடுகளில் பல சஞ்சிகைகளும், தனிநபர் கருத்துக்களும் வெளிவருகின்றன.

அனேகமான இச்சஞ்சிகைகளின் வெளியீட்டாளர்களும், தனிநபர்களும் கடந்தகாலப் போராட்டத்தில் ஏதோ ஒருவகையில் பங்கு கொண்டவர்களாகவே உள்ளனர்.

இவர்களது தேடலும், விமர்சனங்களும் போராட்டத்தை விளங்கப்படுத்தி, நெறிப்படுத்த வேண்டும் என்பதே, சமூக நோக்கம் கொண்டவர்கள் அனைவரினதும் விருப்பாகும்.

இன்று வெளிவரும் கருத்துக்கள் தொடர்பாகவும், குறித்தகருத்துக்களைச் சொல்பவர்கள் தொடர்பாகவும் 'சமர்' கடந்த இதழ்களில் கருத்துச் சொல்ல முற்பட்டது. இக்கருத்துக்கள் தொடர்பாக விமர்சித்த பலரில் ஒரு சாரார் எம்முடன் கடந்தகாலங்களில் கொண்டிருந்த சாதாரண உறவைக்கூடத் துண்டித்துக் கொண்டனர். 'சமர்' பற்றி ஆதாரமற்ற வகையில் வதந்திகளைப் பரப்பும் சக்திகளில் கணிசமான பங்கு மேற்குறிப்பிட்ட நபர்களுக்குண்டு. இவை பற்றி சமரின் நிலையாதெனில், குறித்த எந்த விமர்சனத்தையோ, வதந்தியையோ, எழுத்தில் முன்வைக்காது வெறும் திண்ணைப் பேச்சோடே முடிந்து விடுவது ஆரோக்கியமான விமர்சனமற்றது என்பது மாத்திரமல்லாமல் சோம்பேறித்தனத்தின் வெளிப்பாடுமாகும். சமர் தொடர்பான எக்கருத்தையும் நாம் திறந்த மனதுடன் விமர்சனம், சுயவிமர்சனத்துடன் அணுகத்தயாராயுள்ளது.

கடந்தகாலத்தில் எமது விமர்சனங்கள் தொடர்பான எமது நிலையை தெளிவு படுத்துவது அவசியமானது. எதிர்காலத்தில் கருத்துக் கூறுபவர்கள் யாராக இருப்பினும் எமது விமர்சன அணுகுமுறையைச் செய்யத் தவறின் ஒருசரியான தலைமையை உருவாக்க முடியாதென திட்டவட்டமாக நாம் கூறுகின்றோம். இன்று வருங்காலப் போராட்டத்தை தனிநபர்களில் இருந்தே ஆரம்பிக்கின்ற இன்றைய நிலையில் தனிநபர்களின் கடந்தகாலம் அத்துடன்இன்றைய அவர்களின் கருத்துக்களையும் மீளாய்வுக்குட்படுத்த வேண்டும். இவ்விமர்சனத்தை மறுக்க அல்லது அவர்கள் தொடர்பான விமர்சனத்தை ஜீரணிக்க மறுப்பதென்பது ஒருசரியான அரசியல் தலைமைங்ககப்பால் ஒரு பூலியையோ, அல்லது ஒருசில பிரமுகர்களையோ உருவாக்கவே முயல்பவர்களாக இருப்பார்கள். குறித்த கருத்துக்கள் தொடர்பாக அக்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கருத்தின் முழுப்பக்கத்தையும் எந்த ஒளிவுமறைவுமின்றிச் சொல்லல் வேண்டும். அப்படிச் சொல்லும் போது அவை நாகரீகமில்லை, முற்போககுக்குள் இப்படிப்பட்ட விவாதமா?, இது புலிகளைப் பலப் படுத்தவே உதவும், இது பத்திரிகை தர்மமில்லை, இது முத்திரைக் குத்தல்,....... இப்படிச் சொல்லப்படும் எநத வாதமும் விம ர்சனத்தைத் தடுக்கும் செயற்பாடு மாத்திரமல்லாமல் ஓர் ஆரோ க்கியமான சரியான தலைமையின் உருவாக்கத்தைத் தடுக்க முயலு ம் செயலாகும். ஒரு கருத்தின் மீது பிழையான விமர்சனம் வைப் பின் அதைக்கூட விமர்சிக்கும் உரிமையுண்டு. விமர்சனம் என்பது சமூக இயக்கத்துடன், ஆதாரரங்களுடன் அமைவதாக இருக்க வேண் டும். அப்போது தான் ஒருசரியான தலைமையுருவாகும்.

***********

நாம் எதிர் பார்த்தது போல் 450 வருடங்கள் பழமை வாய்ந்த முஸ்லீம்களின் பாரம்பரியம் மிக்க பாபர் மசூதி, பாரதீயஜனதா, R.S.S விஸ்வ இந்துபரிசத், பஜ்ரங்தால் ஆகிய பிளைப்பு வாத அரசியல், மத வெறிக் கும்பல்களால் பாமர உழைக்கும் மக்கள் வெறியூட்டப்பட்டு மசூதி உடைப்பு நிறைவேற்றப்பட்டுள்ளது.

மனித நாகரிகத்திற்கு சவாலாக நடத்தப்பட்ட இச்சம்பவத்தில் 1100 மனித உயிர்கட்கு அதிகமாகவும், இது சம்பந்தமாக ஏற்க னவே தொடர்ந்து நடந்த தாக்குதல்களில் 3000 மனித உயிர்க ட்கு அதிகமாகவும்பலிகொடுக்கப்பட்டுள்ளது.

வறுமை, பஞ்சம், வேலையில்லாத்திண்டாட்டம், அத்தியாவசியத் தேவைகள் புறக்கணிப்பு, இன ஒடுக்குமுறை, பொலிஸ் அடக்கு முறை ஆகிய முரண்பாடுகளால் வர்க்க ரீதியில் அணிதிரண்டு வரும் பாமர உழைக்கும் மக்களை நிலப்பிரபுத்துவ, தரகு முதளாளித் துவ சக்திகள் பந்தாடிக் கூறு போடும் பிழைப்புவாத அரசியலி ல் இது ஓர் அங்கம் மாத்திரமே.

ஆளும் காங்கிரஸ் பிழைப்புவாதிகள் மசூதி கட்டித் தரப்படுமென அறிவித்ததை நோக்குமிடத்து, எதிர்காலத்தில் தொடரவிருக்கும் பேச்சுவார்த்தையிலோ, உயர் நீதிமன்றத் தீர்ப்பின் மூலமோ, மசூதியையும் ராமர்கோயிலையும் ஒரே நேரத்தில் அமைத்துச் சமன் செய்ய முயற்சிக்கலாம். எது எப்படி அமைந்த போதி லும் ராமர் கோயில் அமைவது உறுதியாகியுள்ளது. இதுகாலவரை யும் சிறுபான்மை முஸ்லீம்கள் ஆங்காங்கே மதத்தின் பேரால் தாக்கப்பட்ட போதிலும், அயோத்தியின் அதிரடி நடவடிக்கை மூலம் போலி மதசார்பின்மை முழு உலகத்திற்கும் முன் அம்பலப் பட்டுள்ளது.

www.tamilarangam.net

பல லட்சக்கணக்கான மக்களின் நம்பிக்கையோடு பிணைந்துள்ள மதம் மக்களின் அறிவுகளை மாத்திரமே காலத்திற்குக் காலம் நமக்குப் பெற்றுத்தந்துள்ளது.

நாட்டைச் சூறையாடவும், மக்களின் வாழ்வை அபகரிப்பதற்கும் புராணகால ராமரை நாடி நிற்கும் இப்பிழைப்புவாதிகளுக்கு உழைக்கும் மக்களால் மாத்திரமே சரியான தண்டனை வழங்க முடியும்.

*****************

முக்கிய அறிவித்தல்

எமது முகவரி மாறியுள்ளதால், எம்முடனான உங்கள் எல்லாத் தொடர்புகளுக்கும் கீழுள்ள புதிய முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்.

SAMAR
87,RUE DE COLOMBES
92600 ASNIERES S/SEINE
FRANCE

சந்தா அனுப்பாது தொடர்ந்து எமது இதழ்களைப் பெற்று வந்தவர்களுக்கும், சஞ்சிகைகள் அனுப்பாத சஞ்சிகையாளர்களுக்கும் கடந்த இதழில் நாம் அறிவித்ததன் படி எமது சஞ்சிகை அனுப்புவதை நிறுத்தியுள்ளோம். சில வாசகர்கள் சஞ்சிகை அனுப்பக் கேட்டுக் கொண்டதற்கு இணங்க அனுப்பி வைக்கின்றோம். அவர்கள் எமக்கு மிகவிரைவில் சந்தாத் தொகையை அனுப்பி உதவுமாறு தயவுடன் கேட்டுக்கொள்கிறோம்.

'சமர்' ஆசிரியர்குழு

வர்க்க சமுதாயத்தில் ஒவ்வொருவரும் ஒரு குறிப்பிட்ட வர்க்கத்தின் உறுப்பினராகவே வாழ்கின்றார், ஒவ்வொரு சிந்தனையிலும் விதிவிலக்கின்றி ஒரு வர்க்கத்தின் முத்திரை குத்தப்பட்டிருக்கின்றது.

நன்றி - 'நடைமுறை பற்றி' (ஜூலை, 1937 மாவோ)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## மூன்றாவது பாதைக்கான திட்டம்

பல வாசகர்களின் வேண்டுகோளுக்கு இணங்க நாம் ஒரு திட்டத்தை முன்வைக்கின்றோம். இத்திட்டம் முடிந்த முடிவுகள் அல்ல. இத்திட்டத்தில் எம் கருத்துக்கு அப்பால், வேறு சிலரால் முன்வைக்கப்பட்ட கருத்தையும் இணைத்தே முன் வைத்துள்ளோம். ஏன் எனின் இவை விவாதத்துக்கு உட்படவும், ஆராய்வை தூண்டவும் உதவும் என்பதால். எனவே இத் திட்டம் தொடர்பான உங்கள் கருத்துகளை சமர் வரவேற்கின்றது.

— சமர் ஆசிரியர்குழு. —

(1)

1. தமிழ் மக்கள் வடக்கு, கிழக்கு பிரதேசங்களை தமது பாரம்பரிய பிரதேசமாகக் கொண்டவர்கள். அவர்கள் ஒரு தேசிய இனத்தவர். பிரிந்து போதல் உள்ளிட்ட சுயநிர்ணய உரிமையுள்ளவர்கள்.

2. பௌத்த சிங்களப் பேரினவாத அரசின் அடக்குமுறையும் அதன் இருப்பு, நோக்கம் என்பன தேசிய இன வளர்ச்சியை சிதைக்கிறது. இந்த திட்டமிட்ட இன அழிப்பிலிருந்து விடுபட தமிழ் மக்கள் ஆயுதமேந்தியப் போராட்டத்தை முன்னெடுக்கவேண்டும்

3. தமிழ் மக்களது தேசிய விடுதலைப் போராட்டம்.
   அ). தேசிய உரிமையை வென்றெடுக்க உறுதியாக விட்டுக் கொடுக்காது போராடுதல்.
   ஆ). இலங்கையரசு, பிராந்திய வல்லரசு, மற்றும் ஏகாதிபத்தியங்களுடன் சமரசம் செய்வதனூடாகச் சாதிக்க முடியாது.
   இ). மக்களின் ஐக்கியத்தாலும், உறுதியாலும், அரசியல் பலத்தாலும் உருவாக்கப்படும் மக்கள் யுத்தத்தால் மட்டும் சாத்தியம்.
   ஈ). தமிழ் தேசிய இனத்தின் அனைத்து ஒடுக்கப்பட்ட வர்க்கமும் இணைந்து, அவற்றிற்குஇடையான முரண்பாட்டைத் தேசிய முரண்பாட்டிற்குள் கீழ்படுத்தி சிநேகபூர்வ வழிகளில் கையாளுதல்.
   உ). போராட்டத்தில் ஐக்கியப்படுகிற அனைத்துப் புரட்சிகர வர்க்கப்பிரிவினரும் தமது சொந்த நலன்கள் அடிப்படையில் தமக்கான தனித்துவமான ஸ்தாபனங்களைக் கொண்டிருக்கும் ஜனநாயகம் உத்தரவாதப்படுத்தப்படுவதாகவும், ஆயினும் இந்நலன்கள் ஐக்கிய முன்னணியின் குறிக்கோ

ளிகளை பாதிக்கா வண்ணம் அதன் நலன்களுக்குக் கீழ்ப்ப பட்டு அணுகப்படுவதாகவும், தனது வளர்ச்சிப் பாதை வகுத்துக் கொள்வதாக இருக்கவேண்டும்.

(2)

1. முஸ்லீம் மக்கள் தமிழ் தேசிய இனத்தின் ஒரு பகுதியினரோ, அல்லது அதற்குக் கீழ்ப்பட்டவர்களோ அல்லர். மாறாக
அ). அவர்கள் தனித்துவமான இனப்பகுப்பைச் சேர்ந்தவர்கள். அல்லது
ஆ). அவர்கள் தனியான ஒரு தேசிய இனத்தவர்கள்.
இவர்கள் எமது போராட்டத்தில் ஊக்கமிகு பங்காளிகளுமாவர். இவர்களிற்கான அரசியலதிகார அமைப்பு முறைகள் பூரண சுயாட்சி அதிகாரம் கொண்டவையாக அமைதல் வேண்டும். அவர்கள் ஐக்கியப்படுவதற்கு மேலாக அவர்களது இணைவு குறித்து முடிவு அவர்களது சுயநிர்ணய உரிமை ஆகும்.

2. மலையக மக்கள் தமிழ தேசிய இனத்தின் ஒரு பகுதியினரோ அதற்கு கீழ்ப்பட்டவர்களோ அல்லர். மாறாக
அ). அவர்கள் தனித்துவமான இனப்பகுப்பைச் சேர்ந்தவர்கள். அல்லது,
ஆ). அவர்கள் தனியான ஒரு தேசிய இனத்தவர்கள்.
இவர்கள் எமது போராட்டத்தில் ஊக்கமிகு பங்காளிகளாக இருப்பர். மலையக மக்கள் வாழும் பிரதேசங்கள் அவர்களதுசொந்தப் பிரதேசங்களாகக் கணிக்கப் படுவதோடு அப்பிரதேசங்களில் பூரண சுயாட்சிஅதிகாரம் கொண்டதும், அவர்களது இன உருவாக்கத்தை வளர்த்தெடுப்பதுமான அரசியல்திகார அமைப்பொன்றினை உருவாக்குதல் வேண்டும்.

(3)

1. சிங்கள மக்கள் தமிழ் தேசிய விடுதலைப் போராட்டத்தின் எதிரிகளோ, தமிழ் மக்களின்எதிரிகளோ அல்லர். அவர்களும் எமது பொது எதிரியால் ஒடுக்கப் படுபவர்களே. ஆயினும் தேசிய ரீதியில் சிங்கள மக்கள் மீது ஆதிக்கம் செலுத்தும் பௌத்த சிங்களப் பேரினவாத சிந்தனைப் போக்கினைக் களைந்தெறியாத வரை அவர்கள் நமது போராட்த்தின் நியாயத் தன்மையைப் புரிந்து கொள்ள முடியாது. எனவே அவர்களை அந்தச் சிந்தனையிலிருந்து விடுவிக்க; நாம் எமது போராட்டத்தை நடைமுறைப்படுத்துவதன் மூலமே அவர்களுக்கு உதவ முடியும். சிங்கள மக்கள் தற்போது ஒருவகை மறைமுக சேமிப்புச் சக்திகளாவர்.

2. தமிழ் மக்களின் தேசிய போராட்டத்தின் வளர்ச்சியில், எமது

www.tamilarangam.net

சுயநிர்ணய உரிமையை அங்கீகரிக்கும் போக்குடன் சிங்கள மக்கள் மத்தியில் இருந்து மக்களாதரவுள்ள புரட்சிகர எழுச்சி ஏற்படும் பட்சத்தில் தமிழீழம் அல்லது தனிநாடு என்ற கருத்து மறு பரிசிலனைக்கு உட்படுத்துவதுடன், ஐக்கிய இலங்கைக்கான புரட்சிகாக போராட வேண்டும்.

(3)
இந்திய வல்லாதிக்க அரசு தமிழ் தேசியவிடுதலையினதும், இலங்கையின் சுயாதிபத்தியத்தினதும் எதிரியாக இருப்பினும் கூட அதனால் ஒடுக்கப்படும் இந்திய மக்களும், அவர்களின் புரட்சிகரமான பகுதிகளும் எமது நட்பு சக்திகளே. அவர்களது ஆதரவு எமது போராட்டத்தின் வெற்றிக்கு கணிசமான அளவு முக்கியமானது ஆகும்.

(5)
1. எமது எதிரிகளையும், நண்பர்களையும் இவ்வாறு வகைப்படுத்தலாம்.

அ). இலங்கை பௌத்த சிங்கள பேரினவாத அரசு தமிழ் தேசிய இனத்தின் முதல் எதிரி.

ஆ). இந்திய வல்லரசு, எதிரியின் கூட்டாளியும், எமது பிராந்திய எதிரியுமாகும்.

இ). அமெரிக்க தலைமையிலான இன்றைய சோவியத் உள்ளிட்ட ஏகாதிபத்தியக் கூட்டினர் எமது சர்வதேச எதிரிகளாவர்.

ஈ). இலங்கை நவகாலனிய அரைநிலப்பிரபுத்துவ அமைப்பாகும்.

உ). தமிழ் தரகுமுதலாளிகளும், தமிழ் நிலப்பிரபுக்களும், எமது எதிரிகள். இவர்கள் போராடுவது போல் செயல்பட்டாலும் இவர்கள் திட்டமிட்டு போராட்டத்தை அழிப்பவர்கள்.

2. அ). தமிழ் தொழிலாளர்கள், விவசாயிகள் உள்ளிட்ட அனைத்து ஒடுக்கப்படும் தமிழ் தேசிய வர்க்கங்களும் எமது சக்திகளாவர்.

ஆ). முஸ்லீம், மலையக மக்கள் ஆகியோர் எமது உறுதியான நண்பர்களும் பங்காளிகளுமாவர்.

இ). சிங்கள மக்கள் நமது மறைமுக சேமிப்புச்சக்திகளாவர்.

ஈ). இந்திய மக்கள், தமிழ் நாட்டு மக்கள் எமது மறைமுக சேமிப்புச்சக்திகளாவர்.

3. அ). அரசியல் கட்சிகள்
தமிழர் விடுதலைக்கூட்டணி, தமிழ் தரகு முதலாளித்துவ நிலப்பிரபுத்துவத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் பிரிவினர்

ஆ). தமிழீழ விடுதலைப்புலிகள்
1. தமிழ் முதலாளித்துவத் தேசியவாதப் போக்கைப் பிரதிநிதித்துவப்படுத்துபவர்கள். அல்லது

www.tamilarangam.net

2. தமிழ் தரகு முதலாளித்துவ நிலப்பிரபுத்துவ பிரிவினரைப் பிரதிநிதிப்படுத்துபவர்கள்.

இ). பிற தமிழ் கட்சிகள்

1. இக்கட்சிகளின் வர்க்க அடிப்படைக் குட்டி பூர்சுவ அடிப்படையே. போராட்டத்திற்கு துரோகம் இழைத்ததுடன் இவர்களுடைய தேசிய வாதம் தமிழ்த்தரகு முதலாளிய தேசிய வாதத்தினை விட முன்னேறியதல்ல. அல்லது

2. இவர்கள் தமிழ் தரகு முதலாளித்துவ பிரிவைச் சேர்ந்தவர்கள். இவர்கள் சிங்கள தரகு முதலாளித்துவ பிரிவின் உடன் சமரசத்துக்கு சென்று இன்று துரோகிகளாக மாறியுள்ளனர்.

ஈ). சிறு குழுக்கள் தமிழ்தேசிய விடுதலையில் ஈர்க்கப்பட்ட குட்டிப் பூர்சுவா வர்க்கத்தின் புரட்சிகரப் பிரிவினைக் கொண்டுள்ள இக்குழுக்கள் போக்கிடமற்றவையாக உள்ளன. இவர்கள் புலிகளுடன் அல்லது புலி எதிர்ப்பு முகாமுடனே நட்புக் கொள்ளும் போக்குகளை இவை கொண்டுள்ளன. சரியான அமைப்பு உருவாகில் அதனுடன் கூட்டு அல்லது சக்திகளாக இணைவர்.

(6)

1. நாம் மேற்குறிப்பிட்ட விடயத்தை வென்றெடுக்க கையாளும் வழிமுறைகள்.

அ). எதிரிகளை அம்பலப்படுத்துதல்.

ஆ). பாதி வழிக் கூட்டாளிகளின் தவறுகளை இனம் காட்டுதல்.

இ). ஊசலாடும் நம்பகமற்ற கூட்டாளிகளை இனம் காட்டுதல்.

ஈ). ஊசலாடும் துரோக நிலையெடுத்தோரின் அரசியல் துரோகத்தை இனம் காட்டி அதன் அணிகளை வென்றெடுத்தல்.

உ). ஊசலாடும் புரட்சிகர அணியை வென்றெடுக்கப் போராடுதல்.

ஊ). தத்துவார்த்த அரசியல் விவாதங்களை நடத்துதல்.

2. அ). பாராளுமன்றப் பாதையை, சமரசத்தை, பேச்சு வார்த்தை மூலம் பிரச்சனையை தீர்க்கப்படலாம் என்னும் போக்கை அம்பலப்படுத்துதல்.

ஆ). கடந்த காலப் போராட்ட அனுபவங்களை கேள்விக்குள்ளாக்குதல்.

இ). போராட்டத்தில் நடக்கும் நிகழ்வுகளை ஆய்வுக்குட்படுத்துதல், விவாதித்தல்.

ஈ). ஆயுதப் போராட்டம், சுயநிர்ணய உரிமை போன்ற எமது அடிப்படைக் கொள்கைகளைப் பிரச்சாரம் செய்தல்.

www.tamilarangam.net

## வாசகர்களும் நாங்களும்

உங்கள் 'சமர்' 5,6 வாசித்தேன். அதில் நீங்கள் எல்.ரீ.ரீ.ஈ மீது வைத்துள்ள கருத்துகள் நீங்கள் புலி மீது கொண்டுள்ள தெளிவு புரிகின்றது. அவர்கள் பாசிசத் தலைமையே. அவர்கள் தேசிய விடுதலை அமைப்பு என்பது தவறானது. ஆனால் உங்களுடைய விமர்சனம் யாவும் தேவையானதே. ஆனால் உங்கள் விமர்சனங்கள் கடும் போக்கை கொண்டவையாகவுள்ளது. குறிப்பாக தோழமைச் சஞ்சிகைகளான 'மனிதம்' மீதும் 'உயிர்ப்பு' மீதும் விமர்சனங்களுள்ளன.

விமர்சனம், சுயவிமர்சனம் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டியஒன்று. ஆனால் அது முத்திரை குத்துவது போல் அமையக்கூடாது. "திரிபுவாதிகள்" என்ற நிலையில் உள்ளது என்று கூறியுள்ளீர்கள். இனியாவது முற்போக்குச் சக்திகள் ஓர் உடன்பாட்டுக்கு வர வேண்டும். இல்லையேல் அது புலியை வெற்றிக்கு இட்டுச்செல்லும்.

அடுத்து உங்கள் தோழர் நாவலன் மீது நீங்கள் வைத்துள்ள விமர்சனம் எந்த ஓர் சூழ்நிலையிலும் விமர்சனம் வைக்கப்பட வேண்டியதேது உட்கட்சிக்குள் உட்கட்சி விமர்சனமாய் அமையவேண்டும். அதை விடுத்து உங்கள் சஞ்சிகையில் விமர்சிப்பது கடுமையான ஆபத்து. இன்று உங்கள் எதிரிகள் நிறைய இருக்கின்றார்கள் என்பது உங்களுக்குத் தெரிந்தது தான். இந்நிலையில் அவரை விமர்சிப்பது என்பது அவருடைய பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாய் அமையும். நீங்கள் எவரையும் வெளிக்காட்டிக் கொள்ளும் முயற்சிகள் எடுக்காதிருப்பது நன்று.

மேலும், தமிழீழ தேசிய விடுதலை முன்னணியினை நீங்கள் விமர்சனம் வைத்தால் ஏற்றுக் கொள்ள முடியும். ஆனால் நீங்கள் அவர்களின் மத்திய குழு உறுப்பினர் மீது வைத்துள்ள தனி நபர் குணநலன்களை விமர்சிப்பது மிகவும் கண்டனத்திற் குரிய விடயம். N.L.F.T யினர் புத்தகத்தைப் புரட்சியாக்க முனைந்தவர்கள் என்பது ஓரளவு உண்மைதான் ஆனாலும் அவர்கள் நாட்டில் மக்கள் மத்தியில் (கூலி விவசாயிகள், நகர சுத்திகரிப்பாளர்கள், கடற்தொழிலாளர்கள் மற்றும் நசுக்கப்பட்ட மக்கள் மத்தியில்) இறங்கி அரசியல் வேலைகளில் ஈடுபட்டவர்கள் என்பது மறுக்க முடியாத உண்மையே. ஆனாலும் இவர்களுக்கு ஏற்பட்ட தோல்விகள் கவனத்தில் எடுத்து ஆராயப்பட வேண்டியதே. இவர்களது நகர்வு மிகவும் இரகசியமாகவும் இறுக்கமாயும் இருந்தும் கூட எதிர்ப் புரட்சியாளர்கள் எப்படி முறியடிக்க முடிந்தது என்பதை கண்டறிய வேண்டுமே தவிர தனிநபர்களை விமர்சிப்பது சரியான ஆபத்தான முயற்சியே என கவலைப்பட வேண்டியுள்ளது. முற்போக்கு அணியின் முகாமுக்குள் ஆராயப்பட வேண்டியதே ஒழிய நடு வீதியிலல்ல.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

87 களில் அறிக்கப்பட்ட பாட்டாளி வர்க்கச் சிந்தனையை மீண்டும் கட்டியெழுப்ப முனையும் உங்களுக்கு எனது புரட்சிகர வாழ்த்துக்கள்.

லோகன் - சுவிஸ்

இதே போன்ற கருத்துப்பட ஒரு கடிதம் இலங்கையிலிருந்து கிடைக்கப் பெற்றோம். அதற்கான விமர்சனத்தையும் உள்ளடக்கியதே கீழுள்ள பதில்.

ஆசிரியர் குழு

உங்கள் விமர்சனங்கள் பொதுப்படையாக இன்று ஐரோப்பாவிலும், நாட்டிலும் உள்ள முற்போக்குச் சக்திகள் மீதான எமது விமர்சனம் தொடர்பானதே. முற்போக்குச் சக்திகள் தொடர்பான எமது பார்வை உங்கள் பார்வையை விட மாறுபட்டது. இன்று முற்போக்குச் சக்திகள் என்பது புலிகளுக்கு எதிராகவுள்ள அனைவரையும் உள்ளடக்கியதே. இதில் E.P.R.L.Fவை ஆதரிப்பவர்கள் கூட இலைமறை காயாக மறைந்தே உள்ளனர். அவர்களை விடுத்து மிகுதியாகவுள்ள அனைவரும் ஓர் அணியாக நீங்களுட்பட சிலர் சுட்டிக்காட்டுகின்றீர்கள். இந்நிலைமை என்பது 1983 இல் இலங்கையரசுக்கு எதிராக அனைத்து இயக்கங்களும் தம்மீதான விமர்சனங்களை நிராகரிக்கக் கோரியது போன்றதே. அதன் விளைவு இறுதியில் இன்று நாம் பாசிசத்திற்குள் பலியானதிற்கிட்டுச் சென்றது. இக் கோரிக்கை 1ம் உலகயுத்த காலத்தில் 2ம் அகிலத்தைச் சேர்ந்தோர் தந்தை நாட்டைப் பாதுகாக்க வேண்டும் எனக் கோரிப் புரட்சியை கைவிட்டது போன்றதே. இன்று வெறும் புலி எதிர்ப்பு என்ற கோசத்தின் கீழ் அணிதிரட்டப்படும் எந்த அமைப்பும் மீண்டும் ஒரு புலியையுருவாக்கும்.

இதற்கு எதிர்மறையாக ஒவ்வொரு நபரின் ஒவ்வொரு கருத்தும் விமர்சனத்திற்குள்ளாக வேண்டும். நீங்கள் உடன்படலாம். இதை பகிரங்கமாகவோ, இரகசியமாகவோ செய்வது என்பதே இங்கு பிரச்சனை. இன்று சமர் அல்லது வேறு எந்த சஞ்சிகையோ தான் அல்லது தமக்கிடையில் ஒரு கட்சியாக இல்லை. இவர்களுக்கிடையிலான விமர்சனம் என்பது ஓர் அமைப்பு வடிவம் இல்லாத நிலையில் பகிரங்கமாக வெளிவருவது அவசியமானது. மற்றும் இன்று எதிர்காலத்தை நோக்கி நம்பிக்கையுடன் செயற்பட முற்படும் ஒவ்வொரு நபரும் எதிர்காலத்தில் ஒரு கட்சியை கட்டமுனைகின்றனர் அந்த வகையில் அனைத்துக் கருத்துக்களும் எந்த விதிவிலக்கும் இன்றி ஒவ்வொரு தனி மனிதனுக்கும் தெரியும் வகையில் ஒளிவு மறைவின்றி இருக்கும் போது மட்டுமே எதிர்காலத்தில் உருவாகும் எந்த அமைப்பும் விமர்சனம், சுயவிமர்சனத்திற்குட்பட்டு உருவாகும். இந்த உருவாக்கத்தில் முன் நிற்கும் ஒவ்வொரு தனி நபரின் கடந்த கால அரசியல் நடவடிக்கையும் விமர்சிக்கப்பட வேண்டும். இல்லையெனில்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சந்தர்ப்பவாதமும், திரிபுவாதமும் பின்னிருந்தே அமைப்பை அழிக்கும். இதை சோவியத் முதல் சீனு வரை உள்ளிருந்த கமியுனிஸ்ட்டுக்களென சொன்னோர் மீண்டும் முதலாளித்துவத்தை மீட்டதை அனுபவரீதியாக நாம் கண்டுள்ளோம். ஆகவே நாம் எந்த விதிவிலக்குமின்றி ஒவ்வொரு தனிநபரையும், எல்லாக் கருத்துக்களையும் பகிரங்கமாக விமர்சிக்க வேண்டும்.

எமது விமர்சனம் தனிநபர்களின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் என்ற உங்கள் கருத்து தொடர்பாக ஆராயும் போது இன்று கடந்தகால அரசியலில் ஈடுபட்ட அனைவரும் எதிரிக்கு அம்பலப்பட்டே உள்ளனர். முற்போக்குச் சக்திகளுக்கு தெரிந்த விடயங்களைவிட எதிரி கூடுதலாக தெரிந்தே வைத்துள்ளான். இந்த வகையில் N.L.F.T, P.L.F.T தீப்பொறி,...... மற்றும் தனிநபர்கள் யாரும் தப்பிக்கவில்லை. இதில் இவர்கள் மீதான விமர்சனங்கள் முன்வரும் போது விமர்சனத்தை எதிர் கொள்ள திராணியற்ற சிலர் பாதுகாப்பைக் காரணம் காட்டுகின்றனர். எமது விமர்சனம் இன்று எதிரியுடன் ஒரே தளத்தில் நின்று போராடும் யாரையும் காட்டிக் கொடுக்கும் வகையில் அமையவில்லை. எதிரியின் தளத்தை விட்டு விலகி சிலர் பகிரங்கமாக அரசியல் நடத்துபவர்கள் மீதும், மற்றும் தம்மீதான சுயவிமர்சனத்தை முற்போக்குச் சக்திகள் மத்தியில் செய்ய மறுத்து தொடரும் அரசியல் செயற்பாட்டின் பின்பே நாம் பகிரங்க விமர்சனத்தை முன் வைக்கின்றோம்.

முத்திரை குத்தல் என்ற விடயம் தொடர்பாக நாம் 'மனிதம்' மீது வைத்த விமர்சனம் முத்திரை குத்தல் அல்ல. அதை 'மனிதம்' வேண்டுமென்று சொல்லி தமது திரிபைப் பாதுகாக்க முயலலாம். உண்மையில் கருத்துக்களை திரிப்பதை திரிபு என்று சொல்லாமல் வேறு என்னவென்று சொல்வது, வேண்டுமென்றல் முற்போக்கு கருத்துக்களில் இதுவும் ஒன்றெனச் சொல்வதா? முத்திரை குத்தல் என்பது, வைக்கப்படும் கருத்தின் மீது விமர்சனம் வைக்காது பொது போக்காகச் சொல்வதே. அதாவது விமர்சனங்களிலிருந்து தப்ப, கருத்துப்பலமின்றி கருத்தைச் சொல்பவரும், கருத்தையெதிர் கொள்பவரும் கையாளும் வழிமுறைகளே. நாம் 'மனித'த்தின் கட்டுரையின் மீது (அதாவது கரிகாலனின் கட்டுரை) வரிக்கு வரி எடுத்து எப்படி திரிக்கப்பட்டு திரிக்க முயல்வதை சுட்டிக் காட்டினோம். இதை மறுக்கும் உரிமை விமர்சகர்களுக்குண்டு. அதுவும் பொதுப்படையாகவல்லாமல் எப்படியென விளங்கப்படுத்துவதிற்காகவே.

மற்றும் N.L.F.T யின் வரலாறு தொடராக வெளிவருகிறது. அதில் நீங்கள் குறிப்பிட்ட விடயங்களும் முன்வைக்கப்படும். மற்றும் N.L.F.T யின் மத்திய குழுவின் தனிநபர் மீதான விமர்சனம் அவசியமானது. N.L.F.T யின் வாழ்வில் அவை காத்திரமான பங்கு வகித்துள்ளது. இவை தொடரும் கட்டுரைகளில் புரியும். கட்டுரையை வாசிக்கும் அதே நேரம் மத்தியகுழு உறுப்பினர்களின் பாத்திரத்தை சிறப்பாகப் புரிந்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

து கொள்ளவும், எதிர்கால அமைப்பை உருவாக்க N.L.F.T யின் கடந்தகால மத்தியகுழு உறுப்பினர்கள் செயற்பட்டுமேயும்இன்றைய நிலையில் முற்போக்குச் சக்திகள் அவர்களிடம் அவர்கள் தொடர்பான விமர்சனத்தை கேட்டுக் கொள்ளவும், எதிர்காலத்தில் உருவாகும் அமைப்பில் அவர்களின் கடந்தகால தவறுகள் உருவாகாது விழிப்புடன் ஒவ்வொரு வழியரு ,மிருத்க இவ்விமர்சனம் உதவும். புதிய ஒரு அனுபவத்தின் பின் சில அழிவுகளின் பின் இதே விமர்சனத்தை நாம் கற்றுக்கொள்ள வேண்டுமா? நாம் இன்று அனைத்தையும் பகிரங்கமாக எந்த விதிவிலக்குமின்றி விமர்சிக்க வேண்டும். விமர்சனத்தை எதிர்கொள்பவர் நேர்மையானவராக இருந்தால் திறந்த மனதுடன் எதற்கும் அஞ்சாது விமர்சனம், சுயவிமர்சனத்தை முன்வைக்க வேண்டும். இதுவே எதிர்கால புரட்சிக்கான ஓர் அமைப்பின் உயிரோட்டமுள்ள நடவடிக்கை மட்டுமல்ல நம்பிக்கையுமாகும்.

ஆசிரியர்குழு

* தற்போது 115 கோடி மக்கள் உலகில் முற்றிலும் வறுமையில் வாடுகின்றனர். இத்தொகை 20 வருடங்களுக்கு முன் 94 கோடியாக இருந்தது.

* 20 வருடத்திற்கு முன் இருந்ததை விட மேலதிகமாக 6 கோடி சிறுவர்கள் பாடசாலை வசதியின்றி உள்ளனர்.

* 20 வருடங்களுக்கு முன் இருந்ததைவிட போசாக்கு குறைந்த சிறுவர்களின் தொகை 5 கோடியால் அதிகரித்துள்ளது.

* தற்போதைய உலகச் சனத்தொகை 548 கோடி.

* இந்தியாவின் சனத்தொகை 85 கோடி.

* இந்தியாவின் முழுச் சனத்தொகையில் 35% வறுமைக் கோட்டின் கீழ் வாழ்கின்றனர். இது இந்திய சனத்தொகையில் அண்ணளவாக 30 கோடி பேராவர். இவர்களின் வருட வருமானம் இலங்கை பணத்திற்கு 150 ரூபா மட்டுமே.

* இந்திய சனத்தொகையில் 1/3 பகுதியினர் வருடத்திற்கு ஒரு யார் துணி கூட வாங்க முடியாதுள்ளனர்.

* சீனாவில் வருடத்திற்கு 10 லட்சம் பெண் குழந்தைகள் பிறந்தவுடன் கொல்லப்படுகின்றனர்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கருத்துக்கள் மீது விமர்சனங்களைக் கோருகின்றோம்.

'சமர்' இதழ்கள் 5,6 இல் தேசியசக்திகள் தொடர்பான கட்டுரையினூடாக 'மனித'த்தில் கரிகாலன் எழுதிய தேசியசக்திகள் தொடர்பான கட்டுரையை விமர்சித்திருந்தோம். இதைத் தொடர்ந்து 'மனிதம்' இதழ் 18இல் இவ்விமர்சனத்தை "விமர்சனமா? தாக்குதலா?" என்ற தலைப்புடன் ஒரு விமர்சனத்தை 'மனிதம்'ஆசிரியர் குழு முன்வைத்திருந்தது.

குறித்த இவ்விமர்சனத்தில் "மாற்றுக் கருத்து உள்ளோரை அங்கீகரிக்கும் மனப்பக்குவம் வேண்டும், மாறாக மாற்றுக் கருத்துள்ளோரை எதிரணிக்குத் தள்ளுதல்" என குறிப்பிட்டுள்ளது. 'சம'ரின் இதே கட்டுரையில் 'தூண்டில்', 'உயிர்ப்பு' மீதான எமது விமர்சனத்தில் மாற்றுக் கருத்துக்களை அங்கீகரித்து ஆரோக்கியமான போக்குக்களைக் கொண்டோம். அவர்களை திரிபுகள் எனறோ அல்லது வேறு பெயரிலோ நாம் சுட்டிக்காட்டவில்லை. நாம் எப்போதும் மாற்றுக் கருத்துக்களை அங்கீகரிக்கிறோம். அதே நேரம் அவைகளை விமர்சிக்கின்றோம். குறித்த கரிகாலனின் கட்டுரையில் மாற்றுக்கருத்துக்களாகவே பார்த்து அக்கருத்துக்களையே விமர்சித்தோம். குறித்த கருத்து அடிப்படை மார்க்சிசத்தையே நிராகரித்து, மார்க்சிசத்தை திரித்து விடுவதையே மீண்டும் உறுதியாக திரிபுவாதம் என்று சுட்டிக்காட்டுகின்றோம். திரிப்பதை திரிபென்று சொல்லாமல் வேறு என்னவென்று சொல்வது. கரிகாலனையோ, 'மனிதம்' பத்திரிகையையோ நாம் வேண்டுமென்று திரிபுகள் என முத்திரை குத்த வேண்டிய அவசியம் எமக்கில்லை. இதுவரை நாம் 'மனித'த்தையோ, கரிகாலனையோ சந்தித்தது கிடையாது. அப்படியிருக்க நாம் ஏன் முத்திரை குத்தவேண்டும். சஞ்சிகையில் வெளிவந்த கருத்துக்களைக் கொண்டு, கருத்துக்கள் திரிக்கப்பட்டு இருந்ததால் அவைகளை திரிபுகளென நாம் கூறுகின்றோம். இதை மாவோ,

> "மார்க்சியத்தின் அடிப்படை கோட்பாடுகளை நிராகரித்தால், அதன் அனைத்தும் தழுவிய உண்மையை நிராகரித்தால், அது திரிபுவாதம் ஆகும். திரிபுவாதம் என்பது முதலாளித்துவ வர்க்கச் சித்தாந்தத்தின் ஒரு வடிவம். சோசலிசத்திற்கும் முதலாளித்துவத்திறகும் இடையிலுள்ள வேறுபாடுகளை, பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்திற்கும், முதலாளித்துவ வர்க்க சர்வாதிகாரத்திற்குமிடையிலுள்ள வேறுபாடுகளை திரிபுவாதிகள் மறுக்கின்றனர். அவர்கள் வக்காளத்து வாங்குவது உண்மையில் முதலாளித்துவ மார்க்கத்திற்கன்றி சோசலிச மார்க்கத்திற்கல்ல."

நன்றி – 'சீனக்கம்யூனிஸ்ட் கட்சியின் பிரச்சார வேலை பற்றிய தேசிய மகாநாட்டுரை' (மாவோ 12 மார்ச் 1957)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

"திரிபுவாதம் அல்லது வலது சந்தர்ப்பவாதம் என்பதொரு முதலாளித்துவ வர்க்க சித்தாந்த ஓட்டமே. இது வரட்டு வாதத்தைக் காட்டிலும் மேலும் அபாயமானது. திரிபுவாதிகள், வலது சந்தர்ப்பவாதிகள், மார்க்சியத்திற்கு சொல்லளவில் சேவை செய்கின்றனர். அவர்கள் கூட 'வரட்டுவாதத்தை' தாக்குகின்றனர். ஆனல் அவர்கள் உண்மையில் தாக்குவது மார்க்சியத்தின் மிக அடிப்படைஅம்சங்களையேயாகும். அவர்கள் பொருள் முதல் வாதத்தையும், இயங்கியலையும் எதிர்க்கின்றனர். அல்லது திரித்து புரட்டுகின்றனர். மக்கள் ஜனநாயக சர்வாதிகாரத்தையும் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமைப் பாத்திரத்தையும் எதிர்க்கின்றனர் அல்லது பலவீனப்படுத்த முயல்கின்றனர். சோசலிச மாற்றத்தையும், சோசலிச நிர்மாணத்தையும் எதிர்க்கின்றனர் அல்லது பலவீனப்படுத்த முயல்கின்றனர்."

நன்றி — 'மக்கள் மத்தியில் உள்ள முரண்பாடுகளை சரியாகக் கையாள்வது பற்றி' (மாவோ)

எதிரணிக்கு தள்ளுதல் என்றால் யார் எதிரி? வெறும் புலிகள் மட்டுமா? இல்லை, புலிகளும் மற்றும் குழுக்களும் போராட்டத்திற்கு நேரடியாக எதிராகத் தெரியலாம். ஆனல் திரிபுவாதமும், பிழைப்புவாதமும் முதுகில் குத்தும் எதிரியே. இதுவே சோவியத் முதல் சீனு வரை நடந்தது. முற்போக்கு என்று சொல்லும் எல்லோரின் கருத்துக்களின் மீதும் நாம் கடுமையான விமர்சனங்களை முன்வைக்க இன்றைய நிலை கோருகின்றது. இது எதிரணிக்கு தள்ளுவதைவிட போராட்டத்திற்கு பலம் கொடுக்கும். இக்கருத்துக்களை எதிரணிக்கு தள்ளுவதெனப் பார்ப்பவர்களே மாற்றுக் கருத்துக்களை மறுப்பவர்களாகவும் இருக்கின்றனர்.

"'மனிதத்தில் கரிகாலன் எழுதிய கட்டுரை' என்று கூறப்படும் பத்திரிகை நெறியை கடைப்பிடிக்கதவறியதே சமர் செய்த கடுமையான தவறு" இது எப்படியெனப் புரியவில்லை. ஒரு பத்திரிகை சில நோக்கங்களை மையமாக வைத்தே வெளி வருகிறது. இதை மனிதம் இதழ் 13இல் ஆசிரியர் தலையங்கத்தில் "ஆக்கங்களுக்கு ஆக்கதாரர்களே பொறுப்பு" என்று கூறும் சமூகப் பொறுப்புணர்வுள்ள பத்திரிகைகள் கூட உதாரணமாக யாழ் நகரில் இருந்து முஸ்லீம் மக்கள் வெளியேற்றியது சரியான நடவடிக்கையென்று ஒருவர் கட்டுரை வரைந்தால் அதைப் பிரசரிக்கவா போகிறது. இந்த வகையில் தான் எமக்கெனும் சில வரையறைகள் உண்டென்பது உண்மை. சமூகநலனை நோக்கிய ஆக்கங்களையே பிரசரிக்கின்றோம், தொடர்ந்து பிரசரிப்போம்." (ஆக்கங்களுக்கு ஆக்கதாரர்களே பொறுப்பு) மனிதம் ஆசிரியர்குழு இக்கூற்றை அங்கீகரிப்பதில்லை, பத்திரிகையில் தாங்கி வருவதுமில்லை. இக்கூற்றை பத்திரிகைகள் பிரசுரிப்பதன் மூலம்

ஆக்கங்களுக்குரிய பொறுப்பை ஆக்கதாரர்களிடமே முழுதாக விட்டுவிட்டு, தமது பொறுப்பை தட்டிக் கழிப்பதாக அர்த்தப்படுகிறது. என்ற வரையறையில் மனிதம் இக்கட்டுரையின் கருத்தின் மீது பொறுப்புள்ளதைச் சுட்டிக்காட்டுகின்றோம். அந்த வகையில் மனிதம் மீது எமது விமர்சனம் பத்திரிகை தர்மத்திற்குட்பட்டதே.

இக்கருத்து தொடர்பாக மனிதம் குறித்த எமது விமர்சனத்தின் பின் கூட கருத்து கூற மறுப்பது என்னவென்பது. இதை வேண்டுமென்றால் சந்தர்ப்பவாதம் என்றே சொல்ல வேண்டும். இது முத்திரைகுத்தல் அல்ல. ஒரு கருத்தின் மீது கருத்துச் சொல்ல மறுப்பது ஏன்? இது பற்றி எமக்கு தெரியாது அல்லது கற்க வேண்டும் ( எனில் நாம் சொன்ன கருத்தை திரிபு அல்ல எனச் சொல்லும் தார்மீகப் பலம் உங்களுக்கு கிடையாது. இதை நாம் ஏற்றுக்கொள்வதில்லை. ஏனெனில் நடுநிலை என்று ஒன்றில்லை. ஒரு கருத்தின் மீது சரி, பிழை ஆராயும் சக்தி எல்லா சாதாரண மனிதனுக்குமுண்டு. மனிதம் இன்று எது சரியெனப் படுகிறதோ அதைச் சொல்லியிருக்க வேண்டும். சொல்லாமல் விடுவது என்பது சந்தர்ப்பவாதமாகும்.

"ஆக்கங்களுக்கு ஆக்கதாரர்களே பொறுப்பு" என்பதை மனிதம் ஏற்கதால் ஒரு ஆக்கதாரரின் கட்டுரையை பிரசுரிக்கும் அதேநேரம் அதில் உடன்பாடில்லாதிருப்பின் தமது விமர்சனத்தையும் முன்வைப்பதனூடாக விவாதத்தை தூண்டுவதுடன் மனிதம் சஞ்சிகை மக்களுக்குத் தங்கள் அரசியல் நிலையை தெளிவு படுத்தியிருக்க வேண்டும். அதை விடுத்து மௌனமாக விட்டுவிடுவது பொறுப்பபடையாக திரியல்ல எனச் சொல்வதனூடாக மனிதத்திற்கு அக்கருத்தேயுள்ளது என மக்கள் எண்ணுவார்கள். ஒரு பத்திரிகை என்பது வீதாபகர். அப்பத்திரிகை தாங்கி வரும் கருத்தை வைத்து மக்கள் அதன் பின் அணிதிரட்டப்படுகிறார்கள். அந்த வகையில் மனிதம் ஒவ்வொரு கருத்திற்கும் பொறுப்பேற்க வேண்டும். அக்கருத்தில் சரி, பிழையை தங்கள் சார்பில் சொல்ல வேண்டும். இதைவிடுத்து கட்டுரைகளை தொகுத்து அடித்து விடும் (விளம்பரப் பத்திரிகை போல்) நிலையில் மனிதம் இருந்த்கிறதா என்ற சந்தேகம் "விமர்சனமா? தாக்குதலா?" என்ற விமர்சனத்தினூடாக எழுகிறது.

குறித்த கட்டுரையை திரிபுவாதம் என்பது குறிப்பிட்டப்பட்டதை மனிதம் ஏற்றுக் கொள்ளத் தயாராக இல்லையென்று சொன்னவர்கள் கரிகாலன் தூண்டில், சமர், உயிர்ப்பு பற்றி சொன்ன மூலவர்கள் சொன்னதை பொருத்த முயல்வது, பழைமைவாதம் எனச் சொன்னதைப்பற்றி மௌனம் சாதிப்பது என்பது மனிதம் ஏற்றுக்கொண்டதாக அர்த்தப்படுகிறது. ஒரு கட்டுரையாளருக்கு கருத்துக்களை பழைமைவாதம் எனச் சொல்லும் உரிமையுள்ளது. அது அப்படி என்பதை ஆதாரத்துடன் புரிய வைக்க வேண்டும். அப்படி இல்லையேல் கரிகாலன் சொன்ன முறை தான் முத்திரைகுத்தல். எந்த கட்டுரையாளரும் எக்கருத்தையும் ஒன்றுடன் பொருத்தும் உரிமையை அங்கீகரிக்க வேண்டும். ஆனால்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அப்படி பொருத்தும் போது அது எப்படி? என புரிய வைக்க வேண்டும். இல்லாவிட்டால் அது முத்திரைகுத்தலாகவே அமையும். இவை ஏற்றுக்கொள்ள மறுப்பது பத்திரிகை தார்மீகமாகாது.

மற்றும் எமது விமர்சனத்தில் வசனத்தைப் பிரித்தெடுத்து 'விமர்சனத்தை முன்வைத்த போக்கு விமர்சனத்தை தடைசெய்யும் போக்கென்றும், கருத்தை சிதைத்துள்ளதென்றும் மனிதம் கூறியதென்பது அடிப்படையில் ஒரு விமர்சனம் கட்டுரையின் மீது பெறுவதாக இருக்கவேண்டும். பொதுவான விமர்சனம் என்பது மயக்கமானதாகவும், வாசகர்கள் தெளிவாக புரிந்து கொள்ள முடியாத வகையிலானதுமே. இதே கரிகாலன் உயிர்ப்பின் மீதான விமர்சனத்தை இதேபோல் செய்திருந்தார். அதுபற்றி மௌனம் சாதித்த மனிதம் எம்மீது இதையொரு குற்றச்சாட்டாக முன்வைத்துள்ளனர். கரிகாலன் உயிர்ப்பு மீதான விமர்சன முறை(வசனத்தை பிரித்தெடுத்து) சரியானது. ஒரு கட்டுரை மீதான விமர்சனம் என்பது கட்டுரையில் ஒவ்வொரு வசனம் மீதும் அமையும். இது தவிர்க்க முடியாது. இதே முறை மார்க்ஸ் முதல் மாவோ வரை செய்துள்ளனர். நாம் பிரித்தெடுத்ததனூடாக கட்டுரையின் கருத்தினைச் சிதைத்துள்ளதெனின் நாம் சுயவிமர்சனத்துடன் ஆராயத் தயாராக உள்ளோம். அதை மனிதம் சுட்டிக்காட்ட வேண்டும்.

மனிதத்தின் கட்டுரையில் 'தாக்குதலா?' என்று கேட்பதனூடாக வாசகர்களுக்கு தமது கருத்தை சொல்லாமல் பிரச்சனையை திசை திருப்புவதையோ, இவை முத்திரைகுத்தல் எனச் சொல்லி மௌனம் சாதிப்பதையோ கைவிடக் கோருகிறோம். ஏனெனில் குறித்தக் கட்டுரையில் பிரித்தெடுத்த ஒவ்வொரு வரி மீதும் நாம் தெளிவான விமர்சன வழியை முன்வைத்தே அது எப்படி திரிபாக உள்ளதென சுட்டிக்காட்டினோம். இது திரிபல்ல எனின் எப்படி என்பதையும், இது தாக்குதல் எனின் எப்படி என்பதையும் எமது ஒவ்வொரு கருத்தின் மீதும் விமர்சனத்தை முன்வைக்கும்படி மனிதத்திடம் கோருகின்றோம்.

ஆசிரியர்குழு—

64பக்க தொடர்ச்சி ---

ஒலை 5,6 மயிலளவில் தெரிந்த வெளிச்சக் கோபுரத்தைக் கண்டு இலங்கையா, இந்தியாவா எனக் குழம்பினர். பின் மெதுவாக செலுத்திச் சென்ற போது இந்தியா எனத் தெரிந்தது. அந்தளவுக்கு உயிர்களைப் பற்றியோ, போராட்டத்தில் ஒவ்வொரு விடயத்தைப் பற்றியோ எச்சரிக்கையின்றி அமைப்பு ஆரம்பிக்கத் தொடங்கியது. வள்ளத்தின் எஞ்சின் காலை ஒப்படைக்கப்பட வேண்டியிருந்தும் மறுநாள் காலையே கரை வந்து சேர்ந்தது. எஞ்சின் குறித்தநேரம் ஒப்படைக்கப்படாமையால் எஞ்சின் உரிமையாளர் பொலிஸில் புகார் செய்திருந்தார். இவைகளெல்லாம் அமைப்பின் மிக மோசமசமான நிலைமையைச் சுட்டிக்காட்டியது.

மறு இதழில் தொடரும்...



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## பிரஞ்சுவாழ் முஸ்லிம்களின் ஒரு துண்டுபிரசுரம்

1990-10-30இல் பாசிசப் புலிகளினால் சகல உடமைகளும் பட்டப்பகலில் நிராயுதபாணிகளான வடபகுதி முஸ்லீம் மக்களிடம் கொள்ளையடிக்கப்பட்டதற்கும், விரட்டியடிக்கப்பட்டதற்கும் அராஜகப்புலிகளின் செயலை நினைவுகூரும் இரண்டாவது ஆண்டு.

### துரோகிகளின் கரைபடிந்த ஈனச்செயல்

வடமகாணத்தில் தமிழ்மக்களுடன் பல நூற்றாண்டு காலமாக சகோதர வாஞ்சையுடன் வாழ்ந்து வந்த சுமார் 100,000 கும் மேற்பட்ட முஸ்லீம் மக்கள் தமது பாரம்பரிய மண்ணைவிட்டு, மண்வெறிபிடித்த பாசிச புலிகளினால் துரத்தியடிக்கப்பட்டு இன்றுடன் இரண்டு வருடம் பூர்த்தியாகிறது.

இம்முஸ்லீம் மக்கள் இவர்களுடன் ஒத்துழைக்கவில்லை என்பதற்காகவும், சாவகச்சேரி முஸ்லீம் ஒருவரிடம் ஆயுதம் இருந்ததாகவும் பொய் வதந்திகளை பரப்பி அப்பாவி தமிழ் மக்களை நம்ப வைத்து, அத்துடன் இனக்குரோதத்தை உருவாக்கி அவர்கள் முன்னனியிலேயே குழந்தைப் பிள்ளைகளின் பால் மாவு முதற் கொண்டு முஸ்லீம்களின் சகல உடமைகளும் பட்டப்பகலில் 2மணி நேர அவகாசத்தில் ஈவிரக்கமின்றி ஆயுத முனையில் அபகரிக்கப்பட்டும், விரட்டியடிக்கப்பட்டு இன்றுடன் இரண்டு வருடம் பூர்த்தியாகின்றது.

பெரும்பான்மையினம் தங்களை நசுக்குவதாக கூறிக் கொண்ட, ஆயுதம் ஏந்திய பாசிசப் புலிகள், அதே பாணியில் சிறுபான்மை தமிழ் பேசும் முஸ்லீம்களை தமது அற்ப அதிகாராத்திற்காக பலிக்கடாவாக ஆக்குவது அதிகார நப்பாசையிலா?

இலங்கை முஸ்லீம்களின் சரித்திரத்திலேயே துரோகக் கும்பல் என்று மறக்க முடியாத வடுவை ஏற்படுத்திய அக்கிரமக்காரர்கள் இனியும் முஸ்லீம் மக்களின் உரிமை பற்றியோ, தலைவிதி பற்றியோ முதலைக்கண்ணீர் வடிக்கத் தேவையில்லை. ஏனெனில் எமது மக்கள் பற்றி அக்கரை 'கொள்ள போதிய முஸ்லீம் தலைவர்கள் இருக்கின்றார்கள்.

அநியாயக்கார புலிகளினால் கொள்ளையிட்டு விரட்டியடிக்கப்பட்ட 100,000 கும் மேற்பட்ட முஸ்லீம் மக்கள் தமது பாரம்பரிய பிறப்பிடங்களில் வாழும் உரிமையை மறுத்து விரட்டிய அக்கிரமமிக்க அநியாயக்காரப் புலிகளினால் உங்களுக்கு விடுதலையும், விடிவும் கிடைக்குமென எண்ணி ஏமாந்து அவர்கள் உங்களுக்கும், எங்களுக்கும் செய்துள்ள அநியாயங்களைக் கண்டு மௌனியாக வாய் மூடி இருப்பது

www.tamilarangam.net

நியாயமாகுமா?. அப்பாவித்தமிழ் மக்களே இப்பாசிச புலிகளின் துப்பாக்கிகளுக்கும், கொடுமைகளுக்கும் அஞ்சி இன்னும் எவ்வளவு காலத்திற்குமௌனமாக இருக்கப்போகிறீர்கள்.

அன்று கொள்ளையடித்து விரட்டினூர்கள். ஆனால் ஏக வல்ல இறைவன் நின்று நிரந்தரமாக அநியாயக்காரர்களை அழிப்பான். புலிகளின் தொடர்ச்சியான ஈனச்செயல்களினால் அவர்களுக்கு உலகம் சுருங்கத் தொடங்கிவிட்டது.

* புலிகளினால் அகதிகளாக ஆகியுள்ள முஸ்லீம்கள் விடும் கண்ணீர் புலிகளின் துப்பாக்கி ரவைகளை விட வலிமை மிக்கது.

* அநியாயக்காரர்கள் தாங்கள் எங்கு செல்ல வேண்டுமென்பதை வெகுவிரைவில் அறிந்து கொள்வார்கள்.

இறைவனிடமேயே எமக்கு புலிகள் இழைத்த, இழைக்கின்ற கொடுமைகளை பொறுப்புச்சாட்டி அக்கிரமக்காரர்களின் அழிவை பொறுமையுடன் எதிர்பார்த்திருக்கும்,

30.10.92 பிரான்ஸ் வாழ் இலங்கை முஸ்லீம்கள்

பிரான்ஸ் வாழ் முஸ்லீம் மக்கள் வெளியிட்ட ஒரு துண்டுப்பிரசுரத்தை நாம் பிரசுரிக்கின்ற அதே நேரம் அது தொடர்பான ஒரு விமர்சனத்தையும் முன்வைக்கின்றோம்.

புலிகள் முஸ்லீம் மக்கள் தொடர்பான உரிமை பற்றியோ, தலைவிதி பற்றியோ முதலைக் கண்ணீர் வடிக்கத் தேவையில்லை எனக்கேட்டுக் கொண்டவர்கள் முஸ்லீம் மக்கள் பற்றி அக்கரை கொள்ளப் போதிய முஸ்லீம் தலைவர்கள் இருக்கின்றனர் எனத் துண்டுப்பிரசுரம் மூலம் கூறியுள்ளனர். புலிகள் முஸ்லீம் மக்களுக்கு மட்டுமல்ல தமிழ் மக்களுக்கும் விடுதலையைப் பெற்றுத்தரப் போவதில்லை. புலிகள் தமது சுரண்டலை தமிழ் மக்கள் மீது முழுமையாக பெற்றுக் கொள்ளப் போராடும் அதேகணம் சிறுபான்மை தேசிய இனமான முஸ்லீம் மக்களையும் சுரண்ட முயன்றதும், அதில் ஏற்பட்ட தோல்வியின் வெளிப்பாட்டுடன் தான் முஸ்லீம்களை வெளியேற்றியதும், இன்று அவர்களைத் தாக்கி அழிப்பதும், அத்துடன் அரசுடன் நடக்கும் யுத்தம் அதில் ஏற்படும் பேரங்களில் தனது இராணுவப் பலத்தைக் காட்ட முஸ்லீம் மக்களை (சிங்கள மக்களையல்ல) கொன்று குவிக்கின்றனர். மற்றும் சர்வதேச பிற்போக்குவாதிகளிடமும், மதவாதிகளிடமும் பெற்றுக் கொள்ளும் சன்மானங்களுக்காகவும் முஸ்லீம்மக்களைப் படுகொலை செய்கின்றனர்.

புலிகளின் நடவடிக்கை விமர்சிக்கும் நீங்கள் முஸ்லீம் தலைவர்கள் முஸ்லீம்களை காப்பாற்ற உள்ளதாக கூறுவதனூடாக அஸ்ராப் முதல் ஜிகாத் போன்ற முஸ்லீம் இயக்கங்களையே சுட்டிக்காட்டினீர்கள். இவர்கள் ஒருக்காலும் முஸ்லீம் மக்களுக்கு விடுதலையை பெற்றுத்தரப்போவதில்லை. அஸ்ராப் போன்றோர் அமிர்தலிங்கம் வகையறுகளே. ஜிகாத் போன்ற ஆயுதக் குழுக்கள் புலிகள் போன்ற அதிகாரக் குழுக்களே. அஸ்ராப் அரசுடன் பேரம் பேசுவதுடன், சிங்கள மக்களை அரசு படுகொலை செய்யவும், தமிழ் மக்களை அரசு படுகொலை செய்யவும், முஸ்லீம் மக்களின் நிலங்களைப் பறிக்கவும் பச்சைக்கொடி காட்டி, முஸ்லீம் மக்களை சொல்லி வாழும் சுரண்டல் பேர் வழிகளே. ஜிகாத் போன்ற ஆயுதக் குழுக்கள் அரசின் கைக்கூலிகள் மட்டுமின்றி தமிழ் மக்களைப் படுகொலை செய்யவும் (புலிகள் முஸ்லீம் மக்களைக் கொள்வதற்கு எந்த விதத்திலும் குறைவில்லாமல்) உருவான இவர்கள், இன்று தமிழ் துரோகக் குழுக்களுக்கு எந்த விதத்திலும் குறைந்தவர்களல்ல. நீங்கள் வெளியிட்ட துண்டுப்பிரசுரத்தில் தமிழ் மக்களை ஜிகாத் போன்றோர் செய்யும் கொலைகளை கண்டிக்க தவறியதென்பது, உங்கள் துண்டுப்பிரசுரம் தமிழ் மக்கள் மத்தியில் பாதிப்பை ஏற்படுத்த தவறியது

மற்றும் பாசிசப் புலிகளின் அட்டூழியங்களை இறைவனிடம் சொல்வது இறைவன் அவர்களை அழிப்பார் என்று பொறுமையுடன் காத்திருப்பதனூடாக ஒருக்காலும் புலிகள் அழியமாட்டார்கள். இதைப் புரிந்து கொள்ளுங்கள். எப்போதும் போராடுவதற்கூடாக மட்டுமே புலிகளை அழிக்க முடியும். நீங்கள் தமிழ் மக்களிடம் வாய்மூடி மௌனியாக இருப்பது நியாயமாகுமா? எனக் கேட்டீர்கள். அவர்களும் இறைவனிடம் முறையிட்டு அழிவைப் பொறுமையுடன் காத்துள்ளனரென கூறலாம் தானே. எப்போதும் போராடுவதே ஒரே மார்க்கம். இது தமிழ் மக்களுக்கு மட்டுமல்ல முஸ்லீம் மக்களுக்கும் இதுவே தீர்வைக் பெற்றுத்தரும். அதிலிருந்து வெளிவந்ததே உங்கள் துண்டுபபிரசுரம். நீங்கள் போராட வேண்டும். முஸ்லீம் மக்கள் தமது சுயநிர்ணய உரிமைக்குப் போராட வேண்டும். அத்துடன் தமிழ் மக்களின் ஆதரவை கோர வேண்டும். முஸ்லீம் மக்களுக்கு நடந்த அநியாயங்களைக் கண்டித்து இன்று வெளிநாடுகள் எல்லாவற்றிலும் தமிழ் மக்கள் குரல் கொடுப்பதுடன் கொழும்பிலிருந்தும் தமிழ் மக்கள் குரல் கொடுக்கின்றனர். உங்கள் கரங்களை அவர்களுடன் இணைத்து முஸ்லீம் மக்களுக்கும், தமிழ் மக்களுக்கும் விடுதலை பெற்றுத்தரப் போராடுங்கள். உங்கள் முஸ்லீம் தலைவர்களை நம்புவதை விடுத்து முஸ்லீம் மக்களின் உண்மையான அக்கறையுள்ள முஸ்லீம் தலைமையை உருவாக்கப் போராடுங்கள். தமிழ் மக்களின் பக்கத்தில் நின்று உங்கள் விடுதலைக்கு உரத்து குரல்கொடுப்பதுடன், உங்களுடன் போராட தயாராகவுள்ளோம். எம்கரங்களை இணைத்து அடக்குமுறைக்கெதிராக போராட வாருங்கள்.

www.tamilarangam.net

## இலக்கியச் சந்திப்பும் மறுக்கப்பட்ட கருத்துச் சுதந்திரமும்

ஐரோப்பாவில் வருடத்திற்கு மூன்று இலக்கியச் சந்திப்புகள் நிகழ்த்தப்பட்டு வருகிறது. இதில் 14வது இலக்கியச் சந்திப்பு மார்கழி மாதம் 26ம், 27ம் திகதிகளில் பாரீஸில் நிகழ்த்தப்பட்டது. முதல் 13 இலக்கியச் சந்திப்புகளும் ஜெர்மனியில் நிகழ்த்தப்பட்டது. இவ் இலக்கியச் சந்திப்புகளுக்கு ஒரு வரையறுக்கப்பட்ட வேலைத்திட்டம் என்பொன்று இல்லாவிட்டாலும் ஜெர்மனியில் நிகழ்ந்த முதல் இலக்கிய சந்திப்பில் இலக்கியச் சந்திப்பின் நோக்குப் பற்றி ஒரு முக்கியமான விடயம் சுட்டிக்காட்டப்பட்டது. ஐரோப்பாவில் வெளிவரும் சஞ்சிகைகள் மீதான விமர்சனத்தை வாசகர்கள் முன்வைக்கவும், கருத்துப் பரிமாற்றத்தை ஏற்படுத்தவுமெனக் குறிப்பிட்டே இலக்கிய சந்திப்பு உருவாக்கப்பட்டது. இச்சஞ்சிகைகள் மலையின் நிகழ்வுகளுடன் வெளிவருவது குறிப்பிடத்தக்கது. பாரீஸில் நிகழ்ந்த இலக்கிய சந்திப்பில் கீழுள்ள விடயங்களைப் பற்றி ஆராய்ந்ததா?.

1). ஐரோப்பாவில் வெளிவரும் இலக்கியங்கள் மீது கவனம் எடுத்தார்களா?.
2). இலங்கையில் வெளிவரும் இலக்கியங்கள் மீது கவனம் எடுத்தார்களா?.
3). நடாத்திய நிகழ்ச்சிகள் மீது அரசியலைப் பிரதிபலித்தார்களா?.
4). இலக்கியச் சந்திப்பில் கலந்து கொண்டோருக்கு கருத்துச் சுதந்திரம் வழங்கினார்களா?.
5). தமிழ் மக்களின் போராட்டத்தை கவனத்தில் எடுத்தார்களா?.
6). தமிழ் மக்களின் பறிக்கப்பட்டுள்ள ஜனநாயகம் பற்றிக் கதைத்தார்களா?.
7). முஸ்லீம் தேசிய இனம் அழிக்கப்படுவதை கவனத்தில் எடுத்தார்களா?.
8). சிலரால் வைக்கப்பட்ட கருத்துக்கள் மீது அரசியல் ரீதியில் பதில் அளித்தார்களா?.

இப்படியான விடயங்கள் பற்றி கதைக்காமல் விட்டதுடன் கதைக்க முற்பட்டவர்களின் கருத்துச் சுதந்திரத்தை பறித்ததுடன், கதைக்க முற்பட்டால் தாக்குதலாக மாறும் நிலைக்கு மாறியிருந்தது. இவ் விலக்கியச் சந்திப்பு மேற்குறிப்பிட்ட விடயங்களையெல்லாம் எதிர் நிலைக்குத் தள்ளி (இவற்றைக் கதைத்தோரை எதிரியாகப் பார்த்தனர்.), சில பிரமுகர்களினதும், பிழைப்புவாதிகளினதும் களியாட்ட விழாவாக இலக்கியச் சந்திப்பு சீரழிந்துள்ளது. இங்கு தமமைத் தாமே புகழ்வதுடன், தம்மைத் தாமே இலக்கியவாதிகளெனப் புகழும் சுய அறிமுகத்துடன் தொடங்கிய இலக்கியச் சந்திப்பு சில பிர



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

முகர்கள் தமக்கிடையில் புகழ்ந்து தள்ளி, சிலரைப் பப்பாவிலேற்றி (ஓரிரு இலக்கியங்களை விமர்சித்து), புகழ் பெற உண்மையில் மண்ணை நேசிப்பவர்களைப் பயன் படுத்திக் கொண்டனர். இதை முன் கூட்டியே இந்தியாவில் போராடும் ஒரு புரட்சிகரக் கட்சியின் பத்திரிகையான "புதிய ஜனநாயகம்" எச்சரித்திருந்தது.

> "இந்த பிழைப்புவாத அறிவுஜீவிகள் தான் இப்போது 'புதிய இடது' போக்கையும், தாராளவாத, அமைப்புசாராத, கலைப்புவாத போக்கையும் பிரதிநிதிப்படுத்திக் கொண்டு, ஈழ விடுதலை இயக்கத்தை மேலும் குழப்புபவர்களாக உள்ளனர். தமது உணர்வுகளை வெளிப்படுத்த ஆர்வத்துடன் பத்திரிகை தொடங்குபவர்கள் இத்தகைய பிழைப்புவாதப் பழம் பெருஞ்சாளிகளின் படைப்புக்களை அறிந்தோ அறியாமலோ வெளியிடுவதன் மூலம் மேலைநாட்டிலுள்ள ஈழத்தமிழர்களைக் குழப்புவதோடு தாமும் குழம்பி திசை தெரியாமல் தத்தளிக்கிறார்கள்."
>
> நன்றி – 'புதிய ஜனநாயகம்'

இவ்விலக்கியச் சந்திப்பில் 'சமர்' மீதும், சில நபர்கள் மீதும் இந்த பிழைப்புவாத புத்திஜீவிகள் அரசியலுக்கு புறம்பாக தாக்குதலை நடத்தினர். அரசியல் ரீதியில் எல்லாப் பிரச்சனைகள் மீதும் கருத்துக் கூற முற்பட்ட போது அவர்களுக்கு கருத்துச் சுதந்திரம் மறுக்கப்பட்டதுடன் அவர்களைப் பார்த்து பயங்கரவாதிகள், சமயவாதிகள்...... எனப் பலத்த கரகோசங்களுடன் கூக்குரலிட்டனர். தம்மை இடதுசாரிகள் எனப் பறைசாற்றிக் கொள்ளும் சிலர் மார்க்சிசம் இறந்து விட்டதெனச் சொல்ல, தம்மை இடதுசாரிகள் எனச் சொல்லும் பலர் பலத்த கரகோசத்துடன் வரவேற்றனர். ஓரிருவர் இதற்கெதிராக குரல் கொடுக்க முயன்ற போது அவர்களுக்கு கருத்துச் சுதந்திரத்தை மறுத்து தமது போலி இடதுசாரிகள் எனக் காட்டிக்கொண்டனர். இங்கு கலந்து கொண்டோர் தம்மை முற்போக்குகளென (முற்போக்குள் விமர்சனமா? எனக் கூறுபவர்கள்) அடையாளம் காட்ட கடந்த காலத்தில் முற்பட்டவர்கள். அவர்கள் கூட மண்ணில் இழந்து போன ஜனநாயகத்துக்கு தமது முற்போக்கு வாதத்தைப் பயன்படுத்த தவறி மீண்டும் ஜனநாயக மீறலுக்கு வித்திட்டனர்.

இவ்விலக்கியச் சந்திப்பில் கலந்து கொண்ட தூண்டில், ஓசை, சிந்தனை, அஆஇ, ஊதா, தேனீ........மற்றும் நின்று போன பள்ளம், கல், தேடல் (பிரான்ஸ்), புதுமை, நமது குரல்..... போன்ற சஞ்சிகைகளின் ஆசிரியர்களும், மற்றும் சில கவிதை, கதை தொகுதிகளை வெளியிட்டவர்களும், பல சஞ்சிகைகளுக்கு கட்டுரைகள் எழுதுபவர்களும் கலந்து கொண்டனர். இவர்கள் எல்லோரும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

எம்மண்ணில் பறிக்கப்பட்ட மனித உரிமைகளுக்காக அதாவது கருத்து எழுத்து, பேச்சு சுதந்திரத்திற்காக குரல் கொடுப்பவர்களாக இனங்காட்டிக் கொண்டவர்கள். இவர்கள் அனைவரும் மௌனம் சாதிக்க, சிலர் அங்கீகரிக்க சமர் உட்பட சில நபர்களின் கருத்துச் சுதந்திரம் பறிக்கப்பட்டதுடன், எம்மை மௌனமாக கேட்டுக் கை தட்டும்படி கோரினர். இவ்விலக்கியச் சந்திப்பில் கலந்து கொண்ட ஒரு பகுதியினர், இதற்கு எதிராகவிருந்த போதிலும் அவர்கள் இந்தப் பிழைப்புவாதச் சக்திகளால் தவறான வழிக்குவிட்டுச் சென்றுள்ளனர் அல்லது மௌனிக்க வைக்கப்பட்டனர். இவ்விலக்கிய சந்திப்பில் மண்ணை மறந்ததுடன், கருத்துச் சுதந்திரத்தை பறிக்க முயன்ற நடவடிக்கை மீண்டும் ஒரு புலியை (நடந்த காலத்தில் சுய விமர்சனம் செய்யாமை மட்டுமின்றி இவர்களின் வெறும் புலி எதிர்ப்பாளர்களாக தனிப்பட தம்மைக் காட்டிக் கொள்பவர்கள்) உருவாக்க முயல்கின்றனர்.

இவ்விலக்கியச் சந்திப்பை நடத்தவென ஒரு குழு உருவான போதும் அக்குழுவிலிருந்த ஓசை ஆசிரியர் இந்நிகழ்ச்சிகளுடன் முரண்பட்ட நிலையில் அவரைப் புலிகளின் உளவாளியெனக் கூறி வெளியேற வைத்தனர். இந்நிகழ்ச்சி தொடர்பாக புலிகள் கூறியதைப் பார்ப்போம். "எனது தாய்க்கு எதாவது நடந்தால் நான் விடமாட்டேன். இதைப் புரிந்து கொள்வீர்கள்" இதை நிகழ்ச்சியின் ஆரம்பத்தில் சொன்ன புலிகள் "இது போன்ற நிகழ்ச்சிகளை நீங்கள் நடத்தலாம்." என்றனர். இப்படிக் கூறியதன் மூலம் இந்நிகழ்ச்சி எம்மைப் பாதியாது. எங்கள் பக்கமே நீங்களும் என்றனர். அதாவது தாய்க்கு எதாவது நடந்தால் என்பதனூடாக புலிகளைப்பற்றி கதைக்கா விட்டால் சரியென்றே மறைமுகமாகக் கூறினர். இந்நிகழ்ச்சியை நடத்தியவர்களும், கலந்து கொண்டோரும் இவ்வேண்டுகோளை ஏற்று நிகழ்ச்சியை நடத்தியதுடன், அதற்கெதிராக கதைக்க முற்பட்டவர்களை பயங்கரவாதிகள், சமயவாதிகள்....எனச் சொல்லி தமது பலத்தை கரகோசத்தின் மூலம் மனிதவுரிமைக்கெதிராக இலக்கியச் சந்திப்பை சீரழித்தனர்.

இக்கூட்டத்தில் கருத்துச் சுதந்திரத்திற்காக குரல் கொடுத்தவர்களைப் பற்றி இவர்கள், இக்கூட்டத்தைக் குழப்ப முயன்றவர்களெனப் பிரச்சாரம் செய்கின்றனர். ஐரோப்பாவில் எம்மவர்களால் நடத்தப்படும் சினிமா களியாட்டங்கள், மற்றும் களியாட்ட நிகழ்ச்சிகளிலிருந்து வேறுபட்ட ஒரு நிகழ்ச்சியாக இவ்விலக்கியச் சந்திப்பு இருக்குமென்ற நோக்கிலேயே நாம் கலந்து கொண்டோம். பல எழுத்தாளர்கள், எம்மண்ணின் நிகழ்வுகளின் மீது ஆர்வமுள்ளவர்கள், கலந்து கொள்ளும் ஒரு நிகழ்ச்சியாக நாம் மதிப்பிட்டு வந்தமைக்காக நாம் பகிரங்கமாக சுயவிமர்சனம் செய்கின்றோம். இக்கூட்டத்தையொரு களியாட்டவிழாவாக எண்ணியவர்களும், தமமை புகழும் பிரமுகப் பிழைப்புவாதிகளும் தம்மைக் குழப்ப முயன்றனரெனக் குற்றம் சாட்டியுள்ளனர். தம்மைத்தாம் புகழும் ஒரு நிகழ்ச்சியா

www.tamilarangam.net

கச் சீரழித்த போதிலும் நாம் கூட்டத்தின் ஒழுங்கைக் கடைப்பிடித்தோம். ஒவ்வொரு நிகழ்ச்சியின் மீதும் சபையோர் கருத்துக்கூற வழங்கப்பட்ட நேரத்தில் தமது கருத்தைச் சொல்ல முயன்ற பொழுது அவர்களுக்கு கருத்துச் சுதந்திரம் மட்டுப்படுத்தப்பட்டது அல்லது மறுக்கப்பட்டது. இக்கருத்துச் சுதந்திரம் மறுக்கப்பட்டதைச் சமர் மட்டுமின்றி சில நபர்களும் சுட்டிக்காட்டினர். எமது கருத்திற்குப் பதிலளிக்க தகுதியிழந்த அவதூறுகளைப் பொழிந்தனர். அதற்குப் பதிலளிக்க முயன்ற போது முற்றாக கருத்துச் சுதந்திரம் மறுக்கப்பட்டது. இதை அவர்கள் பதிவு செய்த வீடியோ கசெட்டின் மூலம் அறியலாம்.

இவ்விலக்கியச் சந்திப்பில் நின்று போன சஞ்சிகைகளுட்பட ஐரோப்பாவில் வெளிவரும் சஞ்சிகைகளை பார்வைக்கு வைத்தவர்கள். பிரான்ஸில் வெளிவரும் சமர், ஓசை திட்டமிட்டே பார்வைக்கு வைப்பதைத் தவிர்த்தனர். இந்நிகழ்ச்சி நிரலிலுள்ள எந்த விடயத்தின் மீதும், அல்லது ஏதாவது விடயத்தை கருத்துக் கூற சமர் உட்பட ஓசையிடமும் கோராமையினூடாக இவ்விலக்கியச் சந்திப்பு பிரமுகர்களுக்கேயென சீரழித்தனர். இந்நிகழ்ச்சி நடந்து கொண்டிருந்த பொழுது ஒரு விடயத்தில் சிலர் ஒரே கருத்துப்பட பேச முற்பட்ட போது பாரதி என்பவர் கேட்டார் "எத்தனை பேர் வந்தீர்கள்" என்று. முதல் நாள் நிகழ்ச்சி தொடர்பாக இக்கூட்டத்தை நடத்தியவர்களில் ஒருவரான முரளியிடம் சமர் சார்ந்த ஒரு நபர் முதல் நாள் நிகழ்ச்சியில் பறிக்கப்பட்ட கருத்துச் சுதந்திரத்தைச் சுட்டிக்காட்டிய போது "நீ இறந்து போவதே சிறப்பானது" என்றார். மாற்றுக் கருத்துக்களை சொல்லும் நபர்களை அழிப்பது, கருத்துச் சொல்வதை, தடுப்பது, சஞ்சிகைகளை பார்வைக்கு வைக்காமல் தடுப்பது.....என இலக்கியச் சந்திப்பை நடத்தியவர்கள் செய்வதொன்றும் புதிதில்லை. கடந்தகால இயக்க வரலாற்றை நாம் மறந்துவிடவில்லை.

இவ்விலக்கியச் சந்திப்பில் கருத்துக்கள் மீது கருத்துச் சொல்வதற்கு முடியாமல் வாயில் வந்தபடி உளறிக் கொட்டிய இப்பிழைப்புவாதப் பிரமுகர்கள் புகழ் தேடி தமது அறியாமையை வெளிப்படுத்தினர். இவ்வறியாமையில் (சமூக இயக்கம் தொடர்பாக) இருந்து கொண்டு கருத்து, எழுத்து, பேச்சு சுதந்திரத்தை தமது பிழைப்புவாத நோக்கில் பயன்படுத்தும் பச்சோந்திப் பிரமுகர்களின் அறியாமையை வெளிப்படுத்தினர். இவர்களினால் அல்லது தவறான மார்க்கத்தால் சென்றவர்கள் இன்று எமது விமர்சனத்தைத் திரும்பி பார்க்க வெகுநாட்களாகாது. இது எமது கடந்தகால அனுபவத்தினூடாக மிகத் தெளிவாகவும், திட்டவட்டமாகவும் சொல்லவிரும்புகின்றோம். ஒருவன் அறிவைப் பெறவிரும்பின்,

 36பக்கம் பார்க்கவும் --

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## இலக்கியச் சந்திப்பும், நிகழ்ச்சிகள் மீதான எமது நிலையும்

இலக்கியச் சந்திப்பில் பல தலைப்புகளில் சில பிரமுகர்கள் மாறி மாறி கதைத்தனர். இவர் அனைவரும் எப்பிரச்சனை மீதும் தீர்வை முன் வைக்காததுடன், பிரச்சனைகளிலுள்ள அரசியலையும் ஆராயாமல் திட்டமிட்டே கைவிட்டனர். பிரச்சனைகளிலுள்ள அரசியலை கதைக்க முற்பட்ட போது அவர்களுக்கு கருத்துச் சுதந்திரத்தை மறுத்தனர். இப்பிரமுகர்கள் பார்வையாளர்களை மாணவர்களாக மட்டும் இருக்கக் கூறி தமது புத்திஜிவித்தனத்தை காட்ட முனைந்தனர். இவர்களினால் வைக்கப்பட்ட கருத்துக்கள் பாடசாலையில் ஆசிரியர்கள் படிப்பிப்பது போல் வெறும் தகவல்களை மார்சிசத்திற்கு விரோதமாக(ஒடுக்கப்பட்ட மக்களின் போராட்டத்திற்கெதிராக) ஓதினர். இவர்கள் பிரச்சனையின் தோற்றுவாய்க்கோ,அதற்கான தீர்வையோ முன்வைக்காது புத்திஜிவித்தனத்தைக் காட்டினர்.

சஞ்சீவி இதழ் 21இல் உதிசபாபதி என்பவரால் சுட்டிக்காட்டப்பட்ட விடயத்தை சுட்டிக்காட்டுகின்றோம். அவர் சொல்வது போல் இலக்கியச் சந்திப்பு கருத்துக்கள் மீது தீர்வை வைத்ததா?

> "நான் நினைக்கிறேன் தீர்வைச் சொல்லாமல் தப்பிக்கொள்வது தமது முகங்களை காப்பாற்றிக் கொள்ளவே தவிர வேறில்லை. எங்கே தமது முகங்கள் அடையாளம் காணப்பட்டு விடுமோயென்கின்ற மனப்பயம்! மனப்பிராந்தி!!.
>
> 'சமூகம்' என்பது தனிமனிதர்களின் கூட்டம். தனிமனிதப் பிரச்சனைகள் நாளை சமூகப் பிரச்சனையாகலாம். 'தனிமனிதனுக்கு உணவில்லையெனின் ஜெகத்தினை அழித்திடுவோம்." எனக் கூறினான் பாரதி. எனவே தனிமனிதனுக்கு ஏற்படுகின்ற பிரச்சனைகள் பற்றி பேசுவதிலோ, எழுதுவதிலோ, விவாதிப்பதிலோ, விமர்சனப் பார்வைக்குட்படுத்துவதிலோயோ தவறேதும் காணமுடியாது. இதனால் பயனுள்ள விவாதிப்புகள் எமமுன் எழலாம். அவை ஆரோக்கியமானவையாகவே கொள்ளப்படும். இது இப்படியிருக்க எழுத்தாள மகாஜம்பவான்கள் தம்மை ஏன் மறைத்துக் கொள்ளவேண்டும். அவசியமே இல்லை."
>
> நன்றி - 'சஞ்சீவி'

இதை மாவோ,

> "நாம் எந்த விசயத்தைச் செய்தாலும், அதன் உண்மையான சூழ்நிலைகள், அதன் இயல்பு, இதர விசயங்களுடன் அதன் உறவுகள் ஆகியவற்றைப் புரிந்து கொண்டாலொழிய



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அதை ஆரும் விதிகளை அறிய மாட்டோம், அல்லது அதை எப்படிச் செய்வதென அறிய மாட்டோம், அல்லது அதை நன்றாகச் செய்ய மாட்டோம் எனபது யாரும் அறிந்ததே"

நன்றி – 'சீனப் புரட்சி யுத்தத்தில் யுத்ததந்திரப் பிரச்சனைகள்'

"அகநிலையாகவும், ஒருதலைப்பட்சமாகவும், மேலோட்டமாகவும் பிரச்சனைகளை அணுகுபவர்கள் தான் களத்திற்கு வந்த அதே கணத்தில், சூழ்நிலைகளை ஆராயாமலும், விசயங்களை முழுமையாக (அவற்றின் வரலாற்றையும் அவற்றின் இன்றைய நிலைமையையும்) நோக்காமலும், விசயங்களின் சாரத்தை (அவற்றின் இயல்பையும் ஒரு விசயத்துக்கும் இன்னொன்றுக்கும் இடையிலுள்ள அக உறவுகளையும்) ஊடுருவிப் பாராமலும், தானே சரியென்று கருதி கட்டளைகள் அல்லது உத்தரவுகள் இடுவர். இத்தகைய நபர்கள் தடுக்கி விழுவது திண்ணம்."

நன்றி – 'நடைமுறை பற்றி'

இப்பிரமுகர்கள் அடிப்படையைக் கைவிட்ட பிரச்சனைகள் மீது, எமது கருத்தை மிகச் சுருக்கமாக முன்வைக்கின்றோம்.

நாடக அரங்கம் – 'அங்கும் இங்கும்'

இத்தலைப்பில் பேசியவர் எம்மத்தியில் சிறந்த ... நாடகங்களோ, நாடக இயக்குனர்களோ உருவாகவில்லை என்றார். இவர் கவனத்தில் எடுத்த மத்திய தரவர்க்க நாடகங்களில் கூட அதன் தோல்விக்கான காரணத்தை ஆராயாமல் விட்டதுடன் தனது முகமூடியைக் கழற்றத் தயாராக இருக்கவில்லை. சிறந்த நாடகங்கள், சிறந்த இயக்குனர்கள் உருவாக வேண்டுமெனக் கோரினார். நாம் நினைக்கிறோம் கருத்துக் கூறியவர் பிரார்த்தனை மூலம் கடவுளிடம் எம்மெல்லோரையும் கோரும்படி வேண்டினார்.

ஒரு சிறந்த நாடகம் உருவாக வேண்டின் ஒரு சிறந்த இயக்குனர் உருவாக வேண்டும். ஒரு சிறந்த இயக்குனர் உருவாக வேண்டின் எது அவசியமோ அதை கைவிட்டு விடுகின்றனர். ஒரு சிறந்த இயக்குனர் உருவாக அவர் சமூகத்தைச் சார்ந்து இருக்கவேண்டும். அவர் சமூகத்தைச் சார்ந்தால் மட்டும் போதாது. சமூகப் பிரச்சனைகளில் பங்கு கொள்பவராக இருக்கவேண்டும். அப்போதே அவர் சொல்லும், செயலும் சமூகத்தைச் சார்ந்திருக்கும். அப்படி இயக்குனர் ஒரு நாடகத்தை இயக்கும் போது அது சமூகத்தைச் சார்ந்திருப்பின் அந்நாடகம் ஓரளவு வெற்றி பெறும். அந்நாடகம் சமூகத்தின் பிரச்சனையை தொட்டு நிற்குமானால் நாடகம் அம்மக்களிடம் ஓரளவு வெற்றி பெறும். அந்நாடகத்தினூடாக சமூகத்திலுள்ள பிரச்சனையை மட்டும் காட்டின் ஓரளவு வெற்றி பெறும்.

www.tamilarangam.net

முழுமையாக வெற்றி பெற வேண்டின் சமூகத்திலுள்ள பிரச்சனையைச் செல்லுவதுடன் அதற்கான தீர்வையும் முன்வைக்க வேண்டும். தீர்வை முன்வைக்காது வெளிவரும் நாடகம் அச்சமூகத்தில் உள்ளவர்கள் யதார்த்தமாக சந்தித்துக் கொண்டுமிருக்கும் பிரச்சனையை மீண்டும் பார்ப்பதால் அவர்களிடம் நாடகம் ஓரளவு வெற்றி பெறும். இது போன்ற கதை, கவிதை, ஓவியம் ..... என அனைத்தும் தீர்வை முன்வைக்கத் தவறின், அக்கலைகள் ஓரளவே வெற்றி பெறும் மற்றும் இந்நிகழ்வுகள் எப்போதும் ஒரு பகுதிமக்களிடமே வெற்றி பெறும். சமூகத்தில் பெரும்பான்மையாகவுள்ள ஒடுக்கப்பட்ட மக்களின் மத்தியில் ஒரு கலை வெற்றி பெற வேண்டுமாயின் அம்மக்களின் பிரச்சனையை சொல்வதுடன், அதற்கு தீர்வை முன் வைக்க வேண்டும்.

இந்த வகையில் சிறந்த நாடகங்கள், சிறந்த இயக்குனர்கள் உருவாக வேண்டின் கடவுளிடம் வேண்டுவதற்குப் பதில் ஒடுக்கப்பட்ட மக்களிடம் சென்று அவர்களின் பிரச்சனையை சொல்வதுடன், அதற்கான தீர்வை முன்வைப்பதனூடாகவே உருவாக முடியும்.

**மாஸ்ரிஸ்ட்**

இது தொடர்பாக பலர் தங்களுடைய கருத்துக்களைக் கூறினார்கள். இன்று ஐரோப்பிய ஒன்றிணைவு என்பது உள்முரண்பாடுகளுடன் ஏன் உருவாகின்றது என்ற பிரச்சனையின் அடிப்படைப் பிரச்சனைகைக் கைவிட்டனர். இன்று சர்வதேசப் பொருளாதார நெருக்கடியும், முன்னணிக்கு வந்த ஜப்பான், ஜெர்மனி போன்ற நாடுகளின் வளர்ச்சியும், அமெரிக்க இராணுவப் பலத்துடன் மூன்றும் உலக நாடுகளிலே ற்பட்ட சந்தைக்கான போட்டியைத் தொடர்ந்து உருவானதே ஐரோப்பிய ஒன்றிணைவு. இங்குள்ள பிரச்சனை முற்றுமுழுதாக மூன்றும் உலக மக்களையும், தமது மக்களையும் சுரண்டுவதே. 1ம் 2ம் உலகயுத்த காலத்தின் முன்னைய நிலையில், இன்று உலகை மறு பங்கீடு செய்ய முனையும் நிலையில் தனித்து சுரண்ட இயலாதெனப் புரிந்து கொண்ட ஐரோப்பிய நாடுகள், தம்மக்கிடையில் பல முரண்பாடுகளிருப்பினும் சுரண்டுவதில் ஐக்கியப்பட்டுள்ளனர். இவ் ஐக்கியப்பட்ட சுரண்டல் அமைப்பை ஒரு வர்க்கப் போராட்டத்தினூடாக (சுரண்டலையில்லாமல் செய்வதனூடாக) மட்டுமே வெற்றி கொள்ளமுடியும். மாறாக இப்படியிருக்கும், அப்படியிருக்குமென சொல்வதால் யாரும் எதையும் செய்து விடமுடியாது. மாறாக இம்மாதிரியான சுரண்டலையில்லாமல் ஒழிப்பதனூடாக மக்கள் இயல்பாகவே ஒருவரையொருவர் புரிந்து கொண்டு ஐக்கியத்தை நோக்கி நகர்வார்கள். இந்நாடுகள் தமக்கிடையில் சந்தைக்காகப் போட்டியிட்டுக் கொண்டே மக்களைச் சுரண்டுவதில் ஐக்கியப்பட்டுள்ளனர். இப்பிரச்சனையை சுட்டிக்காட்டத் தவறியதுடன், ஐரோப்பிய ஒன்றிணைவில் இலாபநட்டம் பார்ப்பது போல் ஒரு முதலாளி நிலையில் நின்று பிரச்சனையைத் திசை திருப்பினர். எப்போதும் ஒரு பிர



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ச்சனையின் அடிப்படையை அறிவது மட்டுமின்றி அதற்கான ஒரு தீர்வையும் முன் வைக்க வேண்டும். இல்லாமல் முதலாளிகள் போன்று நன்மைகளையும், தீமைகளையும் பற்றிப் பேசுவதால் ஒடுக்கப்பட்ட மக்கள் எதையும் சாதிக்க முடியாது. சில பிரமுகர்கள் தங்களை பிரமுகர்களாக எண்ண மட்டுமே முடியும்.

## ஐரோப்பிய இலக்கியமும் நாமும்

இத்தலைப்பில் நால்வர் பேசினார்கள். இது தொடர்பாகப் பலர் தங்களுடைய கருத்துக்களை கூறினார்கள். பேசிய நால்வரில் இருவர் ஐரோப்பிய இலக்கியத்திலிருந்து விலகி தமக்குத் தெரிந்த மொழி பற்றிக் கதைத்தனர். இவர்கள் எப்போதும் எந்த தலைப்பை எடுப்பினும் இறுதியில் அதில் வந்து நிற்பர். இதை பாரதி என்பவரும் சுட்டிக்காட்டினார். 'ஐரோப்பிய இலக்கியமும் நாமும்' என்றால் ஐரோப்பிய இலக்கியப் படைப்புகளை மொழி பெயர்த்தல், வாசிப்பு மூலம் சொல்லல்..... எனப் பல வழிகளூடாக வெளிப்படுத்தப்பட வேண்டும். ஆனால் அப்படிப் பெரிதாக வெளிக்கொண்டுவராத நிலையில் இந்நிகழ்ச்சியை நடத்தியவர்கள் வெளிக் கொண்டுவந்த ஒரு விடயத்தை ஆராய்வோம். ஏனெனில் அவர்கள் எதைச் செய்ய முற்பட்டுள்ளனர் என்பதைப் புரிந்து கொள்ள முடியும். கலாமோகன் என்பவர் ஒரு கதையை வாசித்தார். அவர், கதையை வாசிக்க முன்பு தான் எதைச் சொல்ல விரும்புகிறேன் என்பதை விளக்கும் போது, எல்லோரிடத்திலும் நின்று வேறுபட்டு உண்மையை உரைப்பதற்கு எந்த பயமுறுத்தலுக்கும் அஞ்சாது சொல்வதாக கூறி வாசிக்கத் தொடங்கினார். அவர் தொடர்ந்து வாசித்த கதை அவர் போர்த்தியருந்தது போலி முகமூடி தான் என்பதைப் பார்க்க முடிந்தது.

ரசியாவில் 1905ம் ஆண்டுகளில் ஒரு இளைஞனால் ஒரு கோமகன் கொலை செய்யப்படுகிறான். அவனைக் கொலை செய்யும்படி கூற முன்பு, அவன் இயக்கத்திலிருந்த ஒரு பெண்ணை விரும்பிவதும், அவள் கடமையை உணர்த்தி அனுப்புவதும், அவன் கொலை செய்யாமல் திரும்புவதும், இரு சிறுவர்கள் அவனுடன் (கோமகனுடன்) வந்ததால் கொலை செய்யவில்லையென அவன் காரணம் கூறுவதும், அவனின் நண்பர்கள் அவனைக் கோழையென நக்கலடிப்பதும், அதனால் உந்தப்பட்டு அவன் சவால் விடுவதும், பின் கோமகன் அவனால் கொல்லப்பட்டதும் விதவை மனைவியின் கேள்விக்கணைகளும், அவனையொருக் குற்றவாளியாக இச்சமூகத்தின் முன் ஒரு பயங்கரவாதியாகக் காட்டியிருந்தார் அந்த பிரஞ்சு எழுத்தாளர். இக்கதையில் கலாமோகனுக்கு உடன்பாடிருந்தமையாலேயே அவர் இதை வாசித்திருந்தார். முற்போக்கெனச் சொல்லிக் கொள்ளும் கலாமோகன் போன்றோரின்அரசியல் எந்த விதத்திலும் முற்போக்காக இருப்பதில்லை. இக் கதையின் மீது விமர்சனத்தை சபையோர் யாரும் வைக்காது கை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

தட்டி ஆரவாரித்ததனூடாக சபையிலிருந்த முற்போக்குகளும் அவரின் பக்கமே இணைந்து கொண்டனர்.

நாம் இக்கதையை விமர்சிக்க முன், நாம் எந்த தனிநபர் பயங்கரவாதத்தையும் ஏற்பவர்களல்ல. ஒரு தனிநபர் பய்ங்கரவாதத்தைசெய்பவனின் நடவடிக்கை

ரசிய சமுதாயத்தில் ஒரு கோமகன் எப்படி உருவாகின்றுன். அவனின் சொத்துக்கள்,அதிகாராங்கள் பற்றி மௌனம் சாதிக்கும் இவர்களின் நோக்கு என்ன என்பதை புரிந்து கொள்ள முடியும். ரசிய சமுதாயத்தில் ஆட்சிபீடத்திலிருந்த கோமகன் கொல்லப்பட்ட பின்பு அவனின் விதவை மனைவிக்காக கண்ணீர் வடிக்கும் கலாமோகன்,அக்கோமகனுடன் மனைவியும் இணைந்து நடத்திய ஆயிரக்கணக்கான மக்களின் படுகொலையைப் பற்றிக் கதைக்கத் தயாராக இல்லை.ஏன் அவர்கள் எந்த சொத்துக்களுமற்ற பட்டினி பாட்டாளர்கள் தானே கோமகன் வீசியெறியும் சில்லறைகளுக்கு அடிபடும் மக்கள் தானே என்ற நினைப்பு கதையை வாசித்த கலாமோகனுக்கு மட்டுமின்றிக் கைதட்டி ஆரவாரித்த முற்போக்குகளுக்குமேயென எண்ணத் தோன்றுகிறது. இக்கோமகன் அங்கு மக்களை ஒட்ட உறிஞ்சி அவர்கள் சாப்பிடுவதற்கில்லாமல் குளிரில் நடுங்கி நாளாந்தம் இறந்துகொண்டிருந்த போது அக்கோமகனுக்கோ அவரின் மனைவிக்கோ கண்ணீர் வரவில்லை. ஏன் கதையை வாசித்த கலாமோகனுக்கே கண்ணீர் வரவில்லை. ஆனால் தனது கணவர் இறந்தவுடன் கண்ணீர் விடும் அப்பெண்ணின் சோகத்தில் ஆழ்ந்து விடும் கலாமோகன், கண்ணீர் வடிப்பது எதன் அடிப்படையிலெனின் சுரண்டும் வர்க்கத்தின் இழப்புக்காகவே. இதனூடாக பின்னல் வந்த பாட்டாளிகளின் ஆட்சியை வெறுப்பதையும் பார்க்கமுடிகிறது. கதையை வாசித்தவர் சோவியத்தில் சுரண்டல் நடப்பதை விரும்புவதுடன், சோவியத்தின் இன்றைய மாற்றத்தையும் வரவேற்பவரே.

அரசு பயங்கரவாதத்திற்கெதிராக போராடுபவடரகளை ( எந்த வகையானதெனினும் ) பயங்கரவாதிகள் (கோமனைக் கொன்றவனைப் போல்) எனப் பட்டம் சூட்டும் அரசுகளும், இவ்வெழுத்தாளர்களும் ஏகாதிபத்தியத்தின் சிறப்பான சேவகர்களே. இக்கதையில் அவனின் காதல் உணர்வுகளைக் கடமை என்றும், பயந்தாங்கொல்லி என்றும் சொல்லி அவனை வேண்டுமென்றே இக்கொலையைச் செய்வதற்கு அனுப்பியதாக கதை சொல்லப்படுகிறது. இங்கு புரட்சியை விரும்பும் இளைஞர்களை கொச்சைப்படுத்துவதாகவும், நிர்ப்பந்தம் காரணமாகவே இப்படி ஈடுபடுகின்றனரெனச் சொல்லி , ஒரு புரட்சிக்கெதிராக கலாமோகன் கதை சொல்ல அங்கிருந்த முற்போக்குப் பிரமுகர்களும் கைதட்டினர்.

www.tamilarangam.net

அவ்விளைஞன் கோமகனைக் கொலை செய்து விட்டான். கோமகனின் மனைவி அவனைச் சந்திக்கிறாள். தனது கணவனுக்காக கண்ணீர் வடிக்கிறாள். ஆனால் அவ்விளைஞனுக்கு மரணதண்டனை விதிக்கப்பட்டதிற்கெதிராக கதைக்கவில்லை ஏன்? இதுபற்றி ஏன் கலாமோகன் கண்ணீர் வடிக்கவில்லை. இதிலிருந்து அக்கோமகன் சார்ந்த அரசமைப்பை ஏற்றுக்கொள்ளும் கலாமோகனும், சகபாடிகளும் முற்போக்கு என்றதற்கு அர்த்தமென்ன? இக்கதையையோ, கதையை வாசித்த கலாமோகனையோ விமர்சித்தால் சிலருக்கு கோபம் வரக்கூடும். ஆனால் எம்மால் இப்படிப்பட்டக் கதைகளைக்கேட்டுத் தலையாட்டிக் கைதட்டிவிட முடியவில்லை. இச்சந்தர்பத்தில் தான் அசோக் என்பவர் கேட்டார் ஒடுக்கப்பட்ட மக்கள் தொடர்பான கதைகள் வரவில்லையா? என்று. இதைக் கேட்கக்கூடாது என சிவசேகரம் தடுத்ததுடன் எமக்கெதிராகவும் தாக்குதலை நடத்தினார். ஒடுக்கப்பட்ட மக்கள் தொடர்பான கதைகள் எத்தனையோ இருக்க இக்கதையை வாசித்த கலாமோகனும் அதை அங்கீகரித்த சிவசேகரம் போன்றவர்களும் இச்சமூகத்தில் தம்மைத் தாம் முற்போக்குவாதிகளென்ச் சொல்வதற்கு எந்தவொரு அடிப்படையும் கிடையாது. மேலும் அசோக் என்பவர் இக்கதையின் ஆசிரியரை இந்திய எழுத்தாளர்கள் புலமைப்பித்தன், ............ போன்றோருடன் ஒப்பிட்ட பொழுது நித்தியானந்தன் விழுந்தடித்து இல்லை என உரத்த குரலில் கூறி கதை ஆசிரியரைப் பாதுகாத்தார். எமக்கு இக்கதை ஆசிரியரைத் தெரியாது. அதுபோல் அவரின் எழுத்துக்களை வாசித்ததும் கிடையாது. ஆனால் அவர் எழுதிய கதையை கேட்ட போது அது ஒடுக்கப்பட்ட மக்களுக்கெதிரானது என்றவகையில் ஒடுக்கப்பட்ட மக்களுக்கெதிராக எழுதும் எந்த எழுத்தாளர்களுடனும் ஒப்பிடக் கூடியவரே. இதில் நித்தியானந்தன் காப்பாற்றப் புறப்பட்டது கோமகனின் வாழ்வையும் சொத்துரிமையையும் தான். நித்தியானந்தன் போன்றவர்கள் ஒடுக்கப்பட்ட மக்களுக்கு மட்டுமின்றி அவர்களின் போராட்டத்திற்கும் எதிரானவர்களென்பதை இக்கதை ஆசிரியரைப் பாதுகாக்க முற்பட்டதனூடாக தெளிவாக இனம் காட்டப்படுகிறது.

**ஓவியக் கண்காட்சி**

ஓவியக் கண்காட்சியில் நான்கு ஓவியர்களால் வரையறுக்கப்பட்ட ஓவியங்கள் பார்வைக்கு வைக்கப்பட்டிருந்தன. ஓவியங்கள் புரியவில்லை ஏன்?, ஏன் அவலத்தை பிரதிபலிக்கின்றன, ஓவியங்கள் முன்னைய ஓவியர்களின் தழுவல்களாக வெளிவந்துள்ளன் என்ற குரல்கள் பல வெளிவந்தன. ஒரு ஓவியன் வானத்திலிருந்து ஓவியங்களைப் பெற்றுவிடுவதில்லை. சமூக இயக்கத்தில் அவனைப் பாதிக்கும் விடயங்களைக் கொண்டே அவன் ஓவியத்தைத் தீட்ட முயற்சிக்கின்றான். அவனுக்கு முன்னைய ஓவியங்கள் சில பாதிப்பைக் கொடுக்கலாம். அவைகளிலிருந்தே தழுவல்கள் உருவாகின்றன. ஒரு ஓவியன் சிறந்த ஓவி

www.tamilarangam.net

யனுக மாற வேண்டுமாயின் அவன் சமூக இயக்கத்தில் இயங்க வேண்டும். அதாவது சமூகஇயக்கத்தில் இணைந்து போராடும் போது மட்டுமேஅவனுல் சிறந்த ஓவியங்களை வரைய முடிகிறது. அதைவிடுத்து பிற்போக்கு அரசையும், அச்சமூக அமைப்பையும் முழுமையாக நிராகரிக்காமல் அந்நியப்பட்ட நிலையில் வரையும் ஓவியங்கள் ஒருபோதும் ஒடுக்கப்பட்ட மக்களால் ஏற்கப்படுவதில்லை.

ஓவியங்கள் எதுவாயினும் ஒரு பகுதி மக்களால் ஏற்றுக் கொள்ளப்படுகின்றது. ஓவியத்தில் வெளியாகும் சம்பவங்கள் ஒடுக்கு ..பவர்களுக்கு அல்லது ஒடுக்கப்பட்ட மக்களுக்கு சார்பாக அமைந்த எந்த ஓவியமும் இதிலொரு பிரிவினரால் ஏற்றுக்கொள்ளப்படுகிறது. ஒரு ஓவியனின் ஓவியங்கள் அவன் எதன் பக்கத்தைச் சார்ந்தவன் என்பதைத் தெளிவாகக் காட்டிவிடும். ஓவியங்கள் சிறப்பான கருத்தைப் பிரதிபலிக்க ஒரு ஓவியனுக்கு அரசியல் பார்வை இருக்க வேண்டும். அப்போது தான் ஒரு ஓவியம் சிறப்பாக வெளிப்படுவதுடன் அது அம்மக்களால் ஏற்றுக் கொள்ளப்படுகிறது. இங்கு ஓவியம் விளங்கவில்லை என்ற வாதத்தைத் எடுப்பின், சில ஓவியர்கள் ஏதாவது கோடுகளைக் கிறுக்கி விட்டு அதை ஓவியம் என்பார்கள். அவ் ஓவியங்கள் யாருக்கும் (என் கீறியவர்கே) புரியாது. ஓவியம் என்பது சமூகத்திற்கு சிலப் பிரச்சனைகளை வெளிக்காட்டப்பட வேண்டும். அப்படி வெளிக்காட்ட முடியாத ஓவியர்கள் தங்கள் போலி முகங்களைக் காட்ட முன்வராமல் ஏதாவது வரைந்து விட்டு அதை ஓவியம் என்ச் சொல்லி விடுவார்கள். இதைப் பொதுவாக புகழ் பெற்ற முதலாளித்துவ சீரழிவு ஓவியங்களிலும், தம் புகழ்க் சில பிரமுகர்கள் வரையும் ஓவியங்களிலும் காணலாம். ஓவியக்கண் காட்சியில் வைக்கப்பட்ட ஓவியங்கள் தொடர்பான விமர்சனத்தை தலைமை தாங்கியவரை முன்வைக்க கோரிய போது அதை விமர்சிக்காமல் நழுவி விட்டார். இந்த நிகழ்வை எமக்கருகில் இருந்த நித்தியானந்தன் ஜெயபாலனிடம் 'நல்ல காரியம் செய்தார்' என கூறினூர். இங்கு விமர்சனம் வைப்பதைத் தவிர்த்த நிகழ்வையிட்டுக் கூறிய கருத்து, கருத்துக் கூறுவதைக் (முரண்பாட்டை) கண்டு அஞ்சுவதுடன் ஓர் ஓவியனின் வளர்ச்சியைத் தடுக்கும் வகையில் அமைந்ததுமாகும். ஓர் ஓவியன் விமர்சனத்தை எதிர் நிலையில் நின்று பார்ப்பானுயின் அவன் புகழை மட்டும் எதிர்பார்த்து ஓவியம் வரைபவனுக இருப்பதுடன், அவன் சிறந்த ஓவியனுக மாற முடியாது.

## மனிதனும் மாசுபடும் சூழலும்

இத்தலைப்பில் பேசியவர்கள் சூழல் ஏப்படி மாசடைகிறதென விளக்கினூர். அதாவது மாசு காணப்படும தன்மைகள், வடிவங்கள் என நீண்ட தகவல்களை முன்வைத்தார். அதில் குறிப்பிட்ட அனேகமான தகவல்கள் இவ்விலக்கியச் சந்திப்பில் கலந்து கொண்டோர் அறிந்தவையே. அப்படியவர்கள் அறியாவிடினும் தகவல்களாக முன்வைக்க



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ப்பட்டன. இத்தகவல்களை வழங்குவதால் என்ன லாபம். எமது அறிவை வளர்ப்பதாக வைப்பினும் எப்படி சூழல் மாசடைவதை தடுக்க முடியும். இதைப்பற்றி வேண்டுமென்றே கதைக்காமல் விட்டதையும், இதற்கெதிராக போராட வேண்டியதையும் சுட்டிக்காட்டி நாம் பேசியதைத் தொடர்ந்து, உணர்ச்சிவசப்பட்டு எழுந்த நித்தியானந்தன் அமெரிக்கா சூழல்அசுத்தல் தொடர்பான கூட்டத்தில் முரண்பட்டமையைச் சுட்டிக்காட்டி அமெரிக்கா ஒத்துக்கொள்ள வேண்டுமென வேண்டிக் கொண்டார். இதே கோரிக்கையை சூழ்ல்மாசடைவதற்கான கூட்டத்தில் மூன்றும் உலக நாடுகள் சார்பாக கலந்து கொண்டவர்களும் கோரினர்கள். நித்தியானந்தனை விட பல சிறப்பான புள்ளிவிபரங்களுடன் விளக்கி அமெரிக்காவையும், மேற்கத்தைய நாடுகளையும் ஒத்துக்கொள்ளக் கோரியவர்களே. அவர்கள் கோரிக்கையுடன் கைவிட்டது போல் நித்தியானந்தனும் உணர்ச்சிவசமான கோரிக்கையுடன் திட்டமிட்டே பிரச்சனையைத் தொடாமல் திசைதிருப்பி கோருவது, பிரார்த்தனை செய்வது . எனப் போராட்டத்தை தடுக்கும் வகையில் செயற்பட்டார்.

சூழல் மாசடைதல் என்பது ஏகாதிபத்தியங்களாலேயே உருவாக்கப்பட்டது. மூன்றும் உலக நாடுகளை ஒட்டச் சுரண்டிக் கொழுக்கும் இவர்கள், தமது நாட்டில் வெளியேறும் கழிவுகளைத் தடுப்பதற்காக மூன்றும் உலக நாடுகளில் உற்பத்தி செய்வதும், அளவுக்கு மிறிய நுகர்வை கொண்டு இருப்பவர்களும்,தமது நாட்டில் தடை செய்யப்பட்ட பொருட்களை மூன்றும் உலக நாட்டில் உற்பத்தி செய்வதும், தமது நாட்டுக் கழிவுகளை மூன்றும் உலக நாடுகளில் கொட்டுவதும் மற்றும் கடலில் கொட்டுவதும், . . . . . என ஏகாதிபத்தியங்கள் திட்டமிட்டே சூழலை மாசுபடுத்துகின்றன. இதைப்பற்றி ஏகாதிபத்தியங்களுடன் கதைக்க முற்படும் இடங்களில் இவ் ஏகாதிபத்தியங்கள் சனத்தொகைப் பெருக்கத்தை சூழல் மாசடைவதுடன் சம்பந்தப்படுத்தி தமது சுரண்டலை தொடருகின்றன.

இந்த வகையில் ஏகாதிபத்தியங்களும், மூன்றும் உலக நாடுகளின் பொம்மை அரசுகளும் செய்து வரும் சூழல் மாசுபடுத்தும் நடவடிக்கையை நாம் கதைப்பதால் மட்டும் தீர்த்துவிட முடியாது. அது போல் தனிநபர் என்ற வகையில் சிந்திப்பதாலும் தடுத்துவிட முடியாது. ஆனால் இலக்கியச் சந்திப்பில் இவற்றையே செய்தனர். இதை எதிர்த்த போது எம்மை அவர்கள் எதிர்யாகவே பார்த்தனர். இதில் எம்மை எதிரியாக பார்ப்பவர்கள், சூழல் மாசடைதல் தொடர்பாக கதைப்பது என்பது சரியான போராட்டத்தைத் திசைதிருப்பி சூழல் மாசடைவதில் ஏகாதிபத்தியத்தைப் பாதுகாப்பதேயாகும். இதற்கெதிராக போராட அமைப்பு ரீதியாக இணைந்தே போராட வேண்டும். இலக்கியச் சந்திப்பில் கலந்துகொண்வர்களில் குறைந்த பட்சம் இங்கு போராடும் அமைப்புகளுடன் இணைந்து போராடும் படி கோரத் தயாராக இல்லை. ஏனெனில் இங்கு போராடுபவர்களுடன் இணைந்து போராடும் போது

www.tamilarangam.net

போராட்ட நடவடிக்கை வன்முறை மூலம் இவ்வரசுகள் அணுகின்றன. அப்படி அணுகும் போது போராடுபவர்கள் இதற்கு மாற்று வழியாக புதிய அரசை (தாம் அரசைக் கைப்பற்ற) உருவாக்க முயல்வார்கள். இது ஒடுக்கப்பட்ட மக்களின் அரசாக இருக்கும். இது வெறும் தகவல்களை கூறுபவர்களுக்கெதிரான அரசாக இருப்பதால் போராட வேண்டும் எனச் சொல்வதை தவிர்த்து உணர்ச்சிவசப்பட்டு வேண்டுகோளுடன் (பாராளுமன்றத்தில் நடப்பது போல்) மக்களைத் திசைதிருப்பி போராட்டத்தைக் கை விடுகின்றவர்கள் இப்பிரமுகர்களே.

## புகழிடவாழ்வும் பெண்களும்

இலக்கியச் சந்திப்பில் 'இந்நிகழ்ச்சியுடன் எமக்கு முற்றாக கருத்துச் சுதந்திரம் முற்றாக மறுக்கப்பட்டமையினால் வெளியேறினோம். இந்நிகழ்ச்சியை நடத்திய நால்வரில் ஒருவருக்கும், வேறு சிலருக்கும் கருத்துச் சுதந்திரம் மறுக்கப்பட்டது. பெண்கள் பிரச்சனை என்பது பெண்கள் மட்டுமே பேச முடியும் என்ற பார்வையைக் கொண்ட சில பெண்கள் இருந்த நிலையில், ஆண்கள் இருக்க விவாதம் உருவானது. 'சமர்' 2இல் இது தொடர்பான எமது நிலையை உறுதி செய்ததுடன்; இவ்விதழிலும் பெண்விடுதலை சம்பந்தமான சில விடயங்களை உள்ளடக்கிய ஒரு கட்டுரையும் வெளிவருகிறது. நாம் இவ்விடயத்தை சுருக்கமாக விவாதிக்க முற்படுகின்றோம்.

விவாதத்தில் பெண்களால் எழுப்பப்பட்ட பிரச்சனைகளாக வீட்டில் பெண்கள் ஆண்களால் ஒடுக்கப்படுகின்றனர், தொலைபேசியில் ஆண்கள் எம்மை கேட்கும் கேள்விகள், இன்று ஐரோப்பிய நாடுகளுக்கு வரும் பெண்களைத் தரக்குறைவாக கதைத்தல், ஒரு வீட்டில் பெண்ணே தேநீர் தரும் போது முதலில் கணவனுக்கும் கொடுத்த பின்பே எனக்கு, பெண்கள் வேலைக்குப் போய் வந்த பின் வீட்டு வேலைகளை செய்தல்......எனப் பல பிரச்சனைகளை முன்வைத்தனர். இப்பிரச்சனைகள் பெண்களுக்கு உண்டு என்பதை 'சமர்' பூரணமாக ஏற்றுக்கொள்கிறது. இதைவிட இன்னும் பல விடயங்களை பெண்கள் எதிர்கொள்வதாகவே நாம் பார்க்கிறோம். பெண்கள் எழுப்பிய இப்பிரச்சனைகளுக்கு எதிராகப் போராட ஒரு அமைப்பையும், மற்றும் ஒடுக்கப்பட்ட பெண்கள் தொடர்பாகவும் கதைத்தோம். இதில் அவர்கள் அனைத்துப் பிரச்சனைகளையும் கைவிட்டு நடுத்தர வர்க்கப் பெண்களாகிய எமது பிரச்சனைக்குப் போராடக்கூடாதா என்று நாம் சொன்னதை சரியாகப் புரிந்து கொள்ளத் தயாரின்றி வன்மமதத்துடன் கதைக்க முற்பட்டனர்.

பிரச்சனைகளாக இங்கு எழுப்பிய விடயங்கள் ஐரோப்பிய நாடுகளிலுள்ளவர்களுக்குச் சிறப்பாக பொருந்துவதால் இப்பிரச்சனைகள் இலங்கையிலிருந்து இங்கு வந்த போது ஏற்பட்ட பாதிப்புக்களுடன்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கலந்ததே. இலங்கையில் எம்மக்களின் கலாச்சாரமாக நிலப்பிர புத்துவக் கலாச்சாரமேயுள்ளது. எமது நிலப்பிரபுத்துவக் கலாச் சாரத்திலிருந்து இங்கு வந்த நாம் ஐரோப்பியாவில் காணப்படும் முதலாளித்துவ சீரழிவுக் (ஏகாதிபத்திய சீரழிவுக்) கலாச்சாரத்து க்குள் வாழ்கின்றோம். இந்நிலையில் இவ்விரு விடயங்களுக்குள் முரண் பாட்டுடன் போராட்டம் தீவிரமடைகின்றன. எமது பெண்கள் ஐரோப்பிய பெண்களின் வாழ்க்கைகளைக் கண்ணுற்று அதன் பாதிப் பால் தாக்கப்படுகின்ற நிலையில் இங்கே பெண்விடுதலைக்கான குர ல்கள் எழுகின்றன. இப்படி ஐரோப்பாவில் வெளிவரும் குரல்களை இரு வகையாகப் பிரிக்கலாம்.

1) ஐரோப்பியப் பெண்கள் அனுபவிக்கும் சுதந்திரத் த்தின் சரியான அம்சங்களை மட்டும் கோருதல்
2) ஐரோப்பியப் பெண்களின் சீரழிவுடன் கூடிய சுதந்திரத்தைக் கோருதல்.

இவ்விடயத்தில் முதலாவது வகையினரின் கோரிக்கைகள் முழுமையா ன பெண்விடுதலையைப் பற்றிய ஒரு பார்வை இன்றி, முதாலாளித் துவம் உருவான போது பெண்கள் பெற்றுக் கொண்ட சில சலுகைக ளையே கோருகின்றனர்.
இரண்டாவது வகையினரின் கோரிக்கையோ ஐரோப்பிய பெண்நிலை வாதிகள்... என கூறுபவர்களின்சீரழிவையையே கோருகின்றனர். சில பெண்கள் தனியாகவும், அதேநேரம் திருமணம் செய்தோர் (ஆண் பெண் அடங்கலாக) கோருவதுடன், தம்மை முற்போக்குகள் எனவும் அழைத்துக் கொள்கின்றனர். முற்போக்கு என்ற சொற் தொடர் ரை வைத்து எல்லாப் பிரச்சனையிலும் பிழைப்பது போல் பெண்களு ம் பிழைக்கின்றனர். தமது பலவீனங்களை, தமது செயல்களை நி யாப்படுத்த ஈழப்போராட்டத்தில் உள்ள முற்போக்கை தவறுக பய ன் படுத்தி சரியான பெண்விடுதலைக்கு எதிராக செயல் ஆற்றுகின்ற னர். இவர்கள் வைக்கும் ஒரு இரு கருத்துகளை ஆராய்வோம்.

சிலர் திருமணம் என்பதை செக்ஸ் மட்டுமென்ற வரையறைக்குள் மட் டுப்படுத்தி விடுகின்றனர். இதிலிருந்து கொண்டு எமது சமுதாயத் திலுள்ள ஒருவனுக்கு ஒருத்தி என்ற திருமண உறவை இவர்கள் தவறுன தெனச் சொல்லி ஆண், பெண் இருவரும் திருமணத்திற்கு முன்போ பின்போ பல ஆண்களுடனும், பல பெண்களுடனும் செக்ஸ் வாழ்வை கோருகின்றனர். இது ஐரோப்பிய சமூகத்தில் சீரழிந்த கலாச் சாரமாக பரிணமமடைந்துள்ளதுடன், பொதுவாக பெரும்பாலான தலைநகரங்களில் மட்டும் காணப்படும் சிறப்பான தன்மையே. இதை எம்மவர்கள் (ஆண்கள், பெண்கள்) கோருவதென்பது ஒரு விடுதலைய ல்ல. மாறுக பெண் சீரழிவே. எமது சமுதாயத்திலுள்ள ஒருவனு க்கு ஒருத்தி என்ற உறவுமுறையில் ஒரு சில தவறுன அம்சங்கள் இரு ந்த போதிலும் அவ்வுறவுமுறையே சரியானது. இது இலங்கை, இந் தியாவில் மட்டுமல்ல ஐரோப்பியாவிலும் பெரும்பான்மையானேர் ஏற்றுக் கொண்டுள்ளனர்.

www.tamilarangam.net

இக்கூட்டத்தில் பேசிய பெண் தனக்கு காதல் ஏற்பட்டதாகக் கூறியிருந்தார். இவ்விவாதம் நாம் எடுக்கும் கருத்துடன் எந்தளவு முரண்பாடு கொண்டதெனப் பார்க்கலாம். அப்பெண் முன்பொரு கவிதை எழுதிய போது அதில் பயன்படுத்திய வசனங்களை இக்கட்டுரையில் பாவிப்பதைத் தவிர்த்து விடுகின்றோம். ஏனெனில் அச்சொற்றொடர்கள் எம்மத்தியில் பேசுவது தரக்குறைவானதென்பதால். கவிதையில் ஓர் ஆணின் ஆண்மையை ஆளுதிக்கத்தின் வெளிப்பாடெனக் கூறியிருந்தார். இவ்வாதத்தில் இவருக்குக் காதல் ஏற்பட்டதெனின் ஆண்மையில்லாத ஓர் ஆணையா விரும்புகிறார்?. அதையெப்படி அறிந்து கொண்டார். இவையெல்லாம் ஒன்றுக்கொன்று முரண்பாடு கொண்டவையே. இதில் ஓர் ஆணின் ஆண்மையை ஆளுதிக்கத்தின் வெளிப்பாடாகக் காட்ட முயன்ற இப்பெண்ணிலைவாதி பெண் ஒடுக்குமுறையை தவறுக்ப் பார்ப்பதை இங்கு நாம் பார்க்கலாம். இயற்கையின் பரிணாமத்துடனேயே ஆண், பெண் உருவமைப்பையும், அவர்களிடையே வேறுபாட்டையும் தோற்றுவித்தது. இதுவே ஆணுக்குரிய ஆண்மையையும் உருவாக்கியது. பெண்ணை ஒடுக்க வேண்டும் என்று ஆணால் உருவாக்கப்பட்டதல்ல. இதை ஆண் உருவாக்கியதாக பார்க்கும் இப்பெண்ணிலைவாதியின் கருத்துக்கள் உண்மையான பெண்விடுதலைக் கருத்துக்களல்ல. இது போன்றே ஒரு பெண் கருவை சுமக்கும் நிகழ்வென்பது ஆணால் திணிக்கப்பட்டதல்ல. ஒரு பெண் கருவைச் சுமப்பதென்பது பரிணாமத்தின் நிகழ்வுகளே. இதை ஆண்களால் திணிக்கப்பட்டதாக கருதுபவர்கள் பெண் கருவைச் சுமக்கும் இந்நிகழ்வை பெண்விடுதலையுடன் முடிச்சுப் போட்டு பெண்விடுதலையின் சரியான பக்கங்களைப் பார்க்கத் தவறுவதுடன் அதைத் தடுக்கின்றனர். ஓர் ஆணின் ஆண்மையும், ஒரு பெண் கருவைச் சுமக்கும் தன்மையும் ஒரு பரிணாம வளர்ச்சியே. இதைக் கொச்சைத் தனமாகப் பார்ப்பதென்பது பெண்விடுதலை தொடர்பான பார்வையின் குறைபாடுகளே. இப்படிப்பல.....

"நடுத்தர வர்க்கப் பெண்களாகிய நாம் எமக்குள்ளப் பிரச்சனைகளைக் கதைக்கக் கூடாதா? என்று குரல் எழுந்தன. இதில் நடுத்தர வர்க்கப் பெண்கள் மட்டுமின்றி அனைத்து வர்க்கப் பெண்களும் தமது பிரச்சனைகளை கதைக்க வேண்டும். ஆனால் இங்கு பிரச்சனைகளை கதைப்பது மட்டுமா? என்பதே நமது கேள்வி. இலக்கியச் சந்திப்பில் கலந்து கொண்டோர் பெண் எழுத்தாளர்கள் என அறிமுகமானவர்கள் இதற்கெதிரான ஒரு போராட்ட வடிவத்தைப் பற்றிக் கதைக்காமல் விட்டு, நீங்கள் பெண்கள் ஒடுக்கப்படுகிறர்களென சொல்வதால் எதையும் சாதிக்க முடியாது, போராட்டம் ஒன்றினூடாக மட்டுமே பெண் விடுதலையடைய முடியும். போராட்டம் மூலம் விடுதலையடைய ஒரு ஸ்தாபனம் வேண்டும். அந்த ஸ்தாபனம் நடுத்தர வர்க்கத்தை மட்டும் பிரதிபலிப்பின் விடுதலையைப் பெற்றுவிட முடியாது. ஏனெனில் ஒரு பெண் தான் மட்டும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

போராடி பெண் அடக்குமுறையை உடைக்க முடியாது. அதுபோல் நடுத்தர வர்க்கப் பெண்கள் தமக்கென உருவாக்கும் அமைப்புக்கூடாக ஒருபோதும் சமுதாயத்திலுள்ள அனைத்து வர்க்கப் பெண்களுக்கும் மட்டுமின்றி தனது வர்க்கத்திற்கும் விடுதலையைப் பெற்றுவிட முடியாது. எனவே அனைத்து வர்க்கப் பெண்களும் விடுதலையைப் பெற அனைத்து வர்க்கப் பெண்களின் பிரச்சனைகளை ஆராய்வதும், அதேநேரம் அதற்கான வேலைத்திட்டம் எப்படியிருக்க வேண்டுமெனவும் ஆராய வேண்டும். பெண் ஒடுக்குமுறை வெறும் சம்பவங்களினூடாக இனங்காண்பது என்பது பெண் ஒடுக்குமுறையை சரியாக இனம்காண முடியாமல் போய்விடும். பெண் ஒடுக்குமுறை என்பது பெண்ணின் உழைப்பு மதிக்கப்படுதல் தொடர்பானதே. உழைப்பு ஆண்களால் மட்டுமின்றி, ஆண்களுக்குச் சார்பாக உருவாகியுள்ள அரசமைப்பிலும் பெண்களின் உழைப்பை மதிக்கப்படுவதில்லை. உழைப்பு மதிக்கப்டாமல் விடுவதிலிருந்தே உருவாகிறது பெண்களின் அனைத்து ஒடுக்குமுறைகளும். பெண்களின் பிரச்சனைகளுக்காக மட்டும் தனித்துப் போராடியும் விடுதலையைப் பெற்றுவிட முடியாது. ஏனெனில் பெண் ஒடுக்குமுறை சமூக கட்டுமானமாக (அதாவது ஏகாதிப்பத்தியம் சார்பாக) உருவாகியுள்ள நிலையில் இதையுடைக்க அனைத்துப் பிரச்சனைகளுக்காக (சமூகக் கட்டுமானத்தையுடைக்க) போராடும் போது மட்டுமே பெண்களும் விடுதலையைப் பெற முடியும். இது ஒரு புரட்சியுடன் மட்டுமின்றி கலாச்சார மாற்றத்தினூடாகவே உழைப்புக்கு மதிப்புப் பெறுவதுடன் பெண் விடுதலையைப் பெறமுடியும். எனவே பெண்விடுதலை தொடர்பாக சிந்திப்பவர்கள் ஒரு ஸ்தாபனத்தின் (அனைத்து பெண்களையும் கவனத்தில் எடுதது) உருவாக்கம் பற்றியும், ஒரு சமூக மாற்றத்தைப் பற்றியும் சிந்திக்க வேண்டும்.

24பக்க தொடர்ச்சி ---

"யார் ஒரு விசயத்தை அறிய விரும்பினாலும் அவருக்கு அதனுடன் தொடர்பு கொள்வதைத் தவிர, அதாவது அதன் சூழ்நிலையில் வாழ்வதை (நடைமுறையில் ஈடுபடுவதை) தவிர வேறு வழியில்லை..... நீங்கள் அறிவு பெற விரும்பினால் யதார்த்தத்தை மாற்றும் நடைமுறையில் பங்கு பெற வேண்டும். பேரிக்காயின் சுவையை அறிய விரும்பினால் அதை நீங்கள் சொந்தமாக தின்று சுவைத்துப் பார்க்க வேண்டும்..... புரட்சியின் தத்துவமும், வழிமுறைகளும் பற்றி நீங்கள் அறிய விரும்பினால், நீங்கள் புரட்சியில் பங்காற்ற வேண்டும். உண்மையான அறிவு முழுவதும் நேரடி அநுபவத்திலிருந்தே பிறக்கின்றது."

நன்றி - 'நடைமுறை பற்றி'
(மாவோ ஜூலை 1937)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## இலக்கியச் சந்திப்பும் பிழைப்புவாதப் பிரமுகர்களும்

இன்று ஐரோப்பாவில் முற்போக்குகள் எனக் கூறிக் கொள்ளும் எல்லோரையும் நாம் முற்போக்குகளாக ஏற்காமையைப் பலசந்தர்ப்பங்களில் சுட்டிக்காட்டியுள்ளோம். இம்முற்போக்குகளே எம்மை நோக்கி, எமது விமர்சனத்தை "முற்போக்குக்குள் விமர்சனமா?" என்று கேள்விக்கணைகளுடன் தாக்குகின்றனர். முற்போக்கு எனச் சொல்லிக் கொண்டவர்கள் எம்மீதான தாக்குதலைத் தொடர்ந்து நாம் இது தொடர்பாக விளக்க முற்பட்டோம். 'சமர்' தனக்கென ஒரு அரசியல் கொள்கையைக் கொண்டுள்ளது. அதன் அடிப்படையிலிருந்தே எமது விமர்சனம் அமைகின்றது. நாம் எமது கருத்துக்களை அரசியலின்றி வெறும் தாக்குதலாகச் செய்யவில்லை. அப்படி அரசியலுக்கப்பால் தாக்குதல் செய்ததாக எழுத்திலோ, இதிலோ சுட்டிக்காட்டின் சுயவிமர்சனத்தை நாம் பூரணமாகச் செய்ய தயாராக இருக்கின்றோம். நாம் தனிநபர் மீது ஏன் இன்று விமர்சனத்தை முன் வைக்க வேண்டியுள்ளது என்பதை விளங்கப்படுத்தினோம். கடந்த 'சமர்' இதலில் ஆசிரியர் தலையங்கம், இவ்விதலின் ஆசிரியர் தலையங்கத்தின் ஒரு பகுதியின் அடிப்படையில் விளக்கம் கொடுக்கப்பட்டது. அப்போது உதாரணத்திற்கு ஓரிரு விடயங்களை சுட்டிக்காட்டப்பட்டது. ஒரு பெண்ணுடன் ஏழு பேர் தொடர்பு கொண்டதைச் சுட்டிக்காட்டி (NLFT யின் வரலாற்றைப் படிக்கவும்) இதை விமர்சிக்க கூடாதா? ஐந்தாறு பெண்களை அரசியலைப் பயன்படுத்தி ஏமாற்றின் விமர்சிக்க கூடாதா? என்ற கேள்விகளை எழுப்பியிருந்தோம்.

இதைத் தொடர்ந்து உடனடியாக ஜெயபாலன் எழுந்து கடுமையான வார்த்தைகளால் வாயில் வந்தபடி 'சம'ரைத் தாக்கினார். அத்துடன் மாவோவை உதாரணத்திற்கு எடுத்த அவர், 'சமர்' சார்பாகப் பேசியவரைக் குறிப்பிட்டு "உம்மை மாவோயிஸ்ட் என நம்பியதாகவும், மாவோவின் வாழ்வில் சம்பந்தப்பட்ட பெண்கள் தொடர்பாக மாவோ மீது அவதூறு சொல்வதாகக் கூறினார். ஜெயபாலன் கூறிய இக்கூற்று மாவோவுடன் ஒப்பிட்டு, அதை தனக்குப் பொருந்துவதை தாமாகவே ஏற்றுக்கொண்டார். மாவோ வரைமுறை மீறி பல பெண்களுடன் தொடர்பு கொண்டிருந்தால் அது அடிப்படையில் தவறானது மட்டுமின்றி அது விமர்சனத்திற்குட்பட்டதே. மாவோவின் தத்துவங்களை ஏற்கும் நாம் அவரின் தவறுகளை விமர்சிப்பவர்களே. அப்படி மாவோ செய்திருந்தால் அதைச் சொல்லி ஜெயபாலன் செய்யின் அது மாவோவைச் சொல்லிப் பிழைக்கும் பிழைப்புவாதமே. மாவோ பெண்கள் தொடர்பாக மத்திய குழுவில் விவாதம் நடை பெற்றதாக அறிகின்றோம். அங்கு விமர்சனம், சுயவிமர்சனம் இது தொடர்பாக நடைபெற்றிருக்கும். இது தொடர்பாகப் பெரிதாக தெரிந்து கொண்டிராத நிலையிலேயே


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

ள்ளேளோம். ஜெயபாலன் இதை நியாயப்படுத்தி தனது செயலை நியாயப்படுத்த முயன்றுர். கடந்தகாலப் போராட்டத்தில் ஜெயபாலன் பெண்களைச் சதைப்பிண்டங்களாகப் பயன்படுத்தியதை பலரும் அறிந்ததே. இவர் ஆண் பெண்ணுக்கிடையிலான உறவைத் தவருகப் பயன்படுத்திஞர். இவர் சமூக அரசியல் இயக்கத்தைப் பயன்படுத்தி அதில் பங்கு கொண்ட பெண்களுக்கு தன் மீதான நம்பிக்கையை ஏற்படுத்தி அவர்களின் தன்சகளை ரசித்தவர் தான். இதை மறுக்கமுடியாத வகையில் (உமாமகேஸ்வரன் கொலைகளை செய்தது போல்) கடந்தகாலத்தில் இவருடன் இயக்கத்தில் இருந்த அனைவரும் அறிவர். குறித்த பெண்கள் இவர் தம்மை திருமணம் செய்வார் (இவரின் பெண்விடுதலை தொடர்பான கருத்துக்கள் மீதான நம்பிக்கையில்) தம்மை இழந்தவர்கள் தான். நீர் மாவோவை வைத்து நியாயப்படுத்தாது சுயவிமர்சனத்தை மனப்பூர்வமாக செய்யும். இவர் பேசி முடிந்த பின் 'சமர்' ஆசிரியரை வெளியில் சந்தித்து தாம் தவருகப் பேசியதற்கு மன்னிப்புக் கோரிஞர். நாம் மன்னிப்புக் கொடுக்க என்ன கர்த்தாரா என நினைத்தாரா? ஏனெனில் இது சுயவிமர்சனமாக அமையவில்லை. அடுத்த நாள் நடந்த சம்பவம் இதை உறுதி செய்தது.

அன்று தொடர்ந்து ஜெயபாலன் பாசாங்கு தொடர்பாக இரு விடயங்களைச் சுட்டிக்காட்டிஞர். இது எம்மை மார்க்சிசத்தின் மீதும் தேசியத்தின் மீதும் பாசாங்கு செய்வதாகக் குற்றம் சாட்டிஞர். பாசாங்கு, மற்றும் மாவோ தொடர்பான கருத்துக்களைக் கூறி 'சமர்' மீது தாக்குதலை தொடுத்த போது சபையிலிருந்தோர் கைதட்டி ஆராவரித்தனர். மார்க்சிசத்தின் மீது எமது நிலையை பாசாங்கெனச் சொன்னதுடன் மார்க்சிசத்தின் மீதும் தாக்குதலைத் தொடுத்தார். மார்க்சிசம் இறந்துவிட்டது என்று சொன்னதுடன் எப்படி, ஏன் என்று சொல்லாமல்விட்டதுடன், எம்முடன் விவாதிக்க தயாரின்றி மார்க்சிசத்தைக் கதைப்பதைத் தடுக்கும் வகையில் நையாண்டி செய்து, தனிநபர் தாக்குதலாக மாற்றிஞர். தொடர்ந்து நடந்த கூட்டத் தொடரில் நாம் அனைத்து பிரச்சனைகளின் மீதும் அரசியலைக் கொண்டுவர முற்பட்டபோது (மார்க்சிசமல்ல) அவர் தாக்குதலை நடத்தியதுடன், எம்மைப் பேசவிடாது தடுத்தார்.

மார்க்சிசம் இறந்து விட்டதெனச் சொல்லி வர்க்கப் போராட்டம் தொடர்பாக கதைக்க முற்பட்ட போது வெறுப்பைக் காட்டும் ஜெயபாலன் எந்த அரசியல் ஆய்வில் நின்று இம்முடிவைச் சொன்ஞர் எனப் பார்ப்போம். ஜெயபாலன் PLOT அமைப்பில் இணைய முன் ஒரு சரியானவொரு அரசியலைக் கொண்டிருக்கவில்லை. அப்படி ஒரு சரியான அரசியலைக் கொண்டிருந்திருப்பின் PLOT அமைப்பில் இணைந்திருக்கவே முடியாது. PLOT இல் இணைந்திருந்த

www.tamilarangam.net

ஜெயபாலன் PLOT இன் உட்படுகொலைகள் நடக்கும்போது அதை நியாயப்படுத்தி PLOT க்கு மார்க்சிய முலாம் கொடுத்தவர். PLOT இன் உட்படுகொலைகளைத் தொடர்ந்து பலர் வெளியேறிய போதும் தொடர்ந்தும் PLOT க்கு மார்க்சிய முலாம் பூசி நியாயப்படுத்தி பதவிக்காக அலைந்தவர். அத்துடன் இவர் அவ்வரசியலைப் பயன்படுத்தி பல பெண்களைத் தவறுக்குப் பயன்படுத்தியவர். PLOT இன் இயல்பான அழிவுடன் தானகவே ஒதுங்கிக் கொண்ட ஜெயபாலன், தனது கடந்த காலத்தையோ, தான் நியாயப்படுத்திய மார்க்சிசத்தையோ சுயவிமர்சனம் செய்யவில்லை. மாறாக அதே அரசியலைத் தொடர்ந்து பிழைப்புவாத நோக்கில் இன்று கடந்தகாலத்தின் மீது எந்த சுயவிமர்சனத்தையும் செய்யாது தொடரும் ஜெயபாலன் மார்க்சிசம் இறந்துவிட்டதெனச் சொல்ல எந்த தார்மீகப்பலமும் கிடையாது.

அடுத்தநாள் பெண்விடுதலை தொடர்பான கருத்துக்கள் வெளிவந்தன அதில் கருத்துச் சொன்ன நான்கு பெண்களில் மூன்று பெண்களின் கருத்துக்கள் இன்று ஐரோப்பியாவிலுள்ள பெண்களின் பிரச்சனையைத் தொட்டு நின்றது. இது தொடர்பாக நாம் அவைகளைத் தீர்க்க என்ன மாதிரியான வேலைத்திட்டத்தை அதாவது என்ன வழிகளுக்கூடாகவெனக் கேட்க முற்பட்ட போது ஜெயபாலன் எம்மீது தாக்குதலைத் தொடுத்தார். தனிநபர் மீது அவதூறு செய்தார். குறித்த நபரின் மனைவி இதில் பங்கு கொள்ளாமையைச் சொல்லி அவர் மனைவியை அறையில் பூட்டி வைத்துவிட்டு வந்ததாகச் சொன்னார் நோர்வேயில் இருந்து வந்த ஜெயபாலனுக்கு வாயில் வந்தபடி கண்மூடித்தனமான குற்றச்சாட்டை முன்வைத்தார். அத்துடன் தனது மனைவி மனநோயாளியாக உள்ளரெனச் சொல்லி கண்ணீர் வடித்துக் கூட்டத்தின் அனுதாபத்தைப் பெற முயன்றார். மனைவியெனின் எந்த மனைவியெனத் தெரியாத நிலையில், மனைவி மனநோயாளியாவதற்கு தானே காரணம் என்பதை என்ன பேசுகின்றோமெனத் தெரியாமல் ஏற்றுக் கொண்டார். அத்துடன் தான் தற்கொலை செய்ய முயன்றதாகவும் சொன்னார். இவரின் கண்மூடித்தனமான உளறல்களுக்கூடாக தன்னைத்தானே அம்பலப்படுத்திக் கொண்டார்.

அதேநேரம் ஜெர்மனியிலிருந்து வந்திருந்த பெண் ஒருவரும் (இவர் ஜெயபாலனின் தங்கை) வேறொரு பெண்ணும் இதே அவதூறினை பொழிந்தனர். இவற்றிற்கும், அதற்கு முதல் நடந்த 'சமர்' இதல் மீதும், மார்க்சிசத்தின் மீதும் தொடுத்த தாக்குதலுக்கும் பதிலளிக்க முற்பட்ட போது எமக்கு அனுமதி மறுக்கப்பட்டதுடன் தாக்குதலாக மாறும் நிலையையும் அடைந்ததைத் தொடர்ந்து நாம் கருத்துச் சுதந்திரம் பறிக்கப்பட்டதைக் கண்டித்து சபையிலிருந்து வெளியேறினோம். நாம் வெளியேறிய பின் ஜெயபாலன் சபையில் மன்னிப்புக் கேட்டிருந்தாராம். இவரின் மன்னிப்பு என்பது அர்த்தமற்ற



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

றது. தாம் எதையும் வாயில் வந்தபடி கதைத்து விட்டு கர்த்தரிடம் மன்னிப்புக் கேட்பது போல் கேட்பது சுயவிமர்சனமாகாது. முதல் நாளும், இரண்டாம் நாளும் இரு முறை மன்னிப்புக் கேட்டு சுயவிமர்சனம் என்பதை பாவமன்னிப்பென்ற நிலைக்கு கேவலமாக்கியதைப் பார்க்க முடிகிறது. ஜெயபாலன் தன்னை தேவையான நேரத்தில் இடதுசாரியெனப் பறைசாற்றிக் கொள்பவர். அவர் மார்க்சிசத்தின் மீது தாக்குதலை தொடுத்ததுடன், மற்றவர்கள் மார்க்சிசத்தின் மீது தாக்குதலை தொடுத்த போது, அவர் அங்கீகரித்து கைதட்டி ஆராவரித்ததனூடாக மிகத் தெளிவாக ஒடுக்கப்படும் வர்க்கத்தைச் சுரண்டுவதை ஏற்றுக்கொண்டார்.

ஆரம்பத்தில் எமது கருத்துக்களை தொடர்ந்து பாரதி என்பவர் எம்மீது தாக்குதலை நடத்தினார். நாம் எமக்கென ஒரு கொள்கையிருக்கிறதென சொன்னதைச் சொல்லி இவர்கள் பயங்கரவாதிகள் எனச் சொன்னதும் தான் தாமதம் சபை கரஒலிகளால் நிறைந்தது. ஏகாதிப்பத்தியங்கள் முதல் மூன்றும் உலக நாடுகளை ஆளும் அரசுகளும், ஏன் புலிகளும் கூட அவர்களுக்கெதிராகப் போராடுபவர்களை பயங்கரவாதிகள் எனச் சொல்லி அழிக்கின்றனர். இக்கருத்தைக் கூறியவர்க்கும், கைதட்டி பாராட்டுக் கொடுத்தவர்களுக்கும், ஏகாதிப்பத்தியங்களுக்கும் என்ன வேறுபாடுண்டு. இவர்கள் அவர்களின் செல்லப்பிள்ளைகளாகவும், அவர்களின் இருப்பை அங்கீகரிப்பவர்களாகவும் இருந்தனர். தொடர்ந்து பாரதி அடுத்தநாள் பெண்கள் விட்டுத்தில் நாம் அரசியலுடன் பேசியதைப் பார்த்துக் கூறினார் இவர்கள் 'பேர்ப்' போன்ற சமயவாதிகள் என்றார். இப்படி அவர் கூறியவுடன் பலத்த கரகோசங்களுடன் சபை மகிழ்ச்சியை தெரிவித்தது. இன்று எமக்கு மட்டும் நடந்ததில்லை. யார் புரட்சியை நேசித்தார்களோ அவர்கள் மீது அரசுகள் மற்றும் பித்தலாட்டப் பேர்வழிகள் இது போன்ற குற்றச்சாட்டை அடுக்கியவர்களே. உளவாளிகள், சமயவாதிகள், பயங்கரவாதிகள், கொலைகாரார்கள்,.......என லெனின் முதல் யார் சரியான புரட்சிக்கு குரல் கொடுக்கிறார்களோ அவர்களுக்கு வழங்கப்பட்ட பட்டங்களே. இதைக் கூறிய பாரதியோ அதற்கு கைதட்டித் தமது மகிழ்ச்சியைத் தெரிவித் துக் கொண்டவர்களோ, எதைச் செய்கிறார்கள் என்பதை பயங்கரவாதிகள், சமயவாதிகள்.....என்ற கூற்றுக்களுடன் தம்மை இனம் காட்டிக் கொண்டார்கள்.

பாரதி பேசிய இரு முறையும் 'சமர்' மீது முரண்பாட்டுக்குள் முரண்பாடு கண்டதாகக் கருத்துக் கூறியவர் முரண்பாட்டை சுட்டிக்காட்டவில்லை. மீண்டும் கேட்டோம் என்ன சொல்லுகிறீர்களென்று ஆனால் அவரால் எதையும் விளங்கப்படுத்த முடியாமல் வெறும் வார்த்தைகளை மட்டும் கொட்டி உளறினார். கூட்டத்தில் ஒரிருவர் அரசியல் நிலையில் நின்று பிரச்சனைகளைப் பார்க்க முற்பட்ட போது எம்மை நோக்கி பார்த்தி கேட்டார் எத்தனை பேர்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வந்தீர்கள் என்று. இதற்கூடாக இவர்கள் மார்க்சிசத்தைக் கதைப்பதையோ, அதை நேசிப்பவர்களை வெறுப்புடன் பயங்கரவாதிகள், சமயவாதிகள் என அலறி தமது ஏகாதிபத்திய விசுவாசத்தைக் காட்டிக் கொண்டார்கள்.

பாரதி கார்த்திகை 92இன் 21ம், 22ம் திகதிகளில் ஜெர்மனியில் ஒரு கலந்துரையாடலை நடத்தினார். அதில் இடம்பெற்ற விடயங்களாவன,

1) தேசியவாதம்
2) தேசியவாதமும் மார்க்சிசமும் ஒரு தொடர்பற்றகூட்டு
3) தமிழ் தேசியம்

இந்நிகழ்ச்சிகளில் மார்க்சிசத்தை வெறுக்கும் பாரதி உட்பட சிலர் கலந்து கொண்டதுடன், வேறு சிலரும்(உண்மையைத் தேடுபவர்கள்) கலந்து கொண்டனர். இதில் மார்க்சிசத்தை வெறுக்கும் இவர்களின் கலந்துரையாடலின் நோக்கு எப்போதும் ஆரோக்கியமானதாக இருக்கப்போவதில்லை. ஏனெனில் இவர்கள் மார்க்சிசத்தை நேசிப்பவர்களை பயங்கரவாதிகள், சமயவாதிகள்....எனச் சொல்வதனூடாக இவர்கள் சரியான ஒரு தேசிய விடுதலையைச் சிந்திப்பவர்களைக் குழப்புவது அல்லது அழிக்கும் நோக்குடன் சில பிரமுகர்கள் தமது பிழைப்பை நடத்துவதற்கு வழியமைத்ததே இந்நிகழ்வு.

தொடர்ந்து நடந்த நிகழ்ச்சியில் சிவசேகரம் மாஸ்ரிசட், மனிதனும் மாசுபடும் சூழலும், ஐரோப்பிய இலக்கியங்களும் நாமும்.... எனப் பல நிகழ்ச்சிகளில் உரையாற்றினார். இவர் ஆற்றிய உரைகள் எதிலும் இடதுசாரி அரசியலை முற்றாக கைவிட்டு தனது போலி முகத்தைக்(அது அல்லது இதுவென) காட்டிக்கொண்டார். இவர் மார்க்சிசத்தைக் கதைத்த போது அதற்கெதிராக குரல் கொடுத்ததுடன் கதைப்பதைத் தடுப்பதில் முன்னின்று செயற்படுத்தினார். கலாமோகன் வாசித்த கதையைத் தொடர்ந்து அசோக் என்பவர் கேட்டார் ஒடுக்கப்பட்ட மக்கள் தொடர்பாக பிரஞ்சு மொழியில் சிறந்த இலக்கியம் இல்லையா? என்று. அக்கேள்விக்கு கலாமோகனே பதிலளிக்க வேண்டிய நிலையில் சிவசேகரம் கருத்துச் சுதந்திரத்தைப் மறுக்கும் வகையில் செயற்பட்டார். 'பிரஞ்சுப் புரட்சியும் சமகால இலக்கியமும்' என்ற தலைப்பில் நாளை ஒருவர் கட்டுரை வாசிப்பார் அப்போது அவர் இதற்குப் பதில் சொல்வார் என்றும், இப்பொழுது கேட்க முடியாதென்றார். அடுத்தநாள் கட்டுரை வாசித்தவர் அதற்குப் பதிலளிக்கவில்லை. கருத்துக்குப் பதிலளிப்பதைத் தடுத்ததுடன் நாம் சுட்டிக்காட்டி இதன் தலைப்பு 'ஐரோப்பிய இலக்கியமும் நாமும்' எனச் சொன்னதுடன், தெரியாவிட்டால் தெரியாதென சொல்வது தானே என்றும் நாம் அந்நேரம் இத்தலைப்பை மாறி உச்சரித்ததை சிவசேகரம் தலைப்பே சரியாகத் தெரியாமல் விமர்சிப்பதாகச் சொன்னதுடன் கேள்விக்குப் பதிலளிப்பதை வேண்டுமென்றே தவிர்த்துக்கொண்டார்.

சிவசேகரம் எப்போதும்தனது கருத்துக்களை நேரடியாகச் சொல்லாமல் நழுவல் போக்குடன் சொல்பவரே. இவர் இலங்கையிலுள்ள சீனச் சார்பு புதிய ஜனநாயகக் கட்சியின் ஒரு முக்கிய உறுப்பினராவர். இவர் அனைத்துப் பிரச்சனைகளையும் பாராளுமன்ற வழிகளூடாக தீர்க்கப்பட முடியும் எனக் கருதுபவர். அதாவது 1970 – 1977 க்கிடைப்பட்ட காலத்திலிருந்தே சிறீமா சார்பு அரசுக்கள் போன்ற வடிவங்களால் தீர்க்க முடியுமெனக் கருதுபவர். சிறீமாவின் காலம் பொற்காலம் எனக் கருதுபவர். இன்று U.N.P இடத்திற்கு மாற்றுத் தலைமையை (கூட்டு முன்னணியை) ஆதரிக்கத் தயாராகவுள்ளார். இவர்கள் தாம் அரசு அதிகாரத்தைக் கைப்பற்றுவதில் நம்பிக்கையற்றவர்கள். தொழிலாளர் வர்க்கத்தைச் சுரண்டுபவர்களுக்கு சேவை செய்யக் கோருபவர்கள். இக்கட்சியிலுள்ள சிவசேகரம் போன்றோரின் கருத்து எப்போதும் புதிய ஜனநாயகக் கட்சியின் சார்பானதாகவே உள்ளது. அக்கருத்துக்கள் சுரண்டலை அடிப்படையாகக் கொண்டவை. இவர்கள் இடதுசாரிக் கருத்துக்களை உச்சரித்துக் கொண்டு தொழிலாளர்களை தமது அதிகாரத்திற்குட்படுத்தி போராடுவதைத் தடுக்கும் பச்சோந்திகள்.

இவர்கள் பாட்டாளி வர்க்கக் கருத்துக்களை உச்சரித்தவர்களைக் கண்டு வெறுப்பதுடன், அவர்களின் கருத்துச் சுதந்திரத்தை மறுக்கத் தம்மால் இயன்றவரை முயல்வர். இதை நாம் 1971 –1977க் கிடைப்பட்டக் காலத்தில் சிறீமா மக்களின் கருத்துச் சுதந்திரத்தை பறித்ததுடன் ஒப்பிட்டுப் பார்க்கலாம். இவர் தனது கருத்துக்களை நேரடியாகச் சொல்லாமல், அடிப்படையைத் தொடாமலும், நசுக்கிவிடும் போலிகளே. இவர் வர்க்கப் போராட்டத்தை ஏற்பவரல்ல. இன்று ஒடுக்குபவர்கள் வன்முறைகளுக்கூடாக ஆள்கின்றூர்கள். ஒடுக்கப்படும் மக்கள் அதற்கெதிராக வன்முறைகளுக்கூடாகவே ஆட்சியைக் கைப்பற்ற முடியும் என்பதை ஏற்பது கிடையாது. இவர் பாராளுமன்ற வழிகளுக்கூடாக சமூகமாற்றிவிடமுடியும் எனச் சொல்லி தமது பிழைப்பை சீனவுடன் நடத்துகின்றார், சீன இலங்கைக்கு ஆயுதங்கள் வழங்குவதைக் கூடக் கண்டிக்க திராணியற்ற பிரமுகப் பச்சோந்தி பிழைப்புவாதிகளே.

டிசம்பர் 92இன் 'சுவடுகள்' இதலில் சிவசேகரத்தின் கருத்துக்களையொட்டிய விமர்சனம் வெளிவந்திருந்ததது. அக்கருத்துக்களுடன் உடன்படுகின்றோம். அதேநேரம் இது தொடர்பாக நாம் ஆராய்வோமாயின் தற்கொலை என்பதை வீரம், தியாகம் எனச் சிவசேகரம் வர்ணித்ததுடன் புலிகளின் பேச்சாளராகவும் மாறியிருந்தார். அண்மையில் பி.பி.சி யில் புலிகள் தொடர்பான ஒரு நிகழ்ச்சியில் பிரபாகரன் சயனைட் அருந்தும் தற்கொலைக் கொலையாளிகளின் வீரம், தியாகம் பற்றிச் சொன்ன கருத்துக்கும் சிவசேகரத்தின் கருத்திற்கும் வேறுபாடு கிடையாது. எதிரியிடம் சிக்காமலிருக்க தற்கொலை தான் ஒரே மார்க்கம் எனின் புலிகளிடம் இன்று சிக்கியுள்

www.tamilarangam.net

ள 5000க்கும் மேற்பட்ட கைதிகளும் சயனைட் அருந்தி இறந்திருக்க வேண்டும். புரட்சியெனக் கூறி சிவசேகரம் போன்ற தலைமைகளில் இருந்திருந்தால் இன்று புலிகளின் வதைமுகாமிலுள்ள 5000க்கும் மேற்பட்டவர்களும் மரணித்திருக்க வேண்டும். உண்மையான புரட்சிவாதி தற்கொலைக்குப் பதில் சிறை வாழ்வை எதிர் கொள்ளல் வேண்டும். அவ்வாழ்வை எதிர் கொள்வதே வீரம் மட்டுமின்றித் தியாகமுமாகும். சிவரமணி போன்றோரின் தற்கொலை என்பது அடிப்படையில் கோழைத்தனமானது, சிவரமணி வெறும் கவிதைகள் மட்டுமென்ற நிலையிலிருந்ததுடன், தனது அரசியல் பாதையை வகுத்துக் கொள்ளாத நிலையில் இருந்ததும் தற்கொலைக்கான காரணம் எனலாம். கலை கலைக்காக மட்டுமென்ற வாதம் உடையவர்கள் கூட சிலப் பிரச்சனைகளைக் கண்டு அதன் மீதான வெறுப்புடன் தற்கொலையை நாடுகின்றனர். அப்பிரச்சனைகளை மாற்றத் திராணியற்ற இவர்களின் மரணம் கோழைத்தனமானது. இதைத் தியாகம் வீரம் எனப் பிதற்றி சிவரமணியைச் சொல்லிப் பிழைக்கும் சிவசேகரத்தின் அரசியல் இதுவே.

ரதி உங்கள் வாதம் அடிபட்டு விட்டதெனத் தொடங்கிய நித்தியானந்தன் மார்க்சிசத்தை அவதூறு செய்து தனது கடந்தகால அரசியலின் தொடர்ச்சியை இனம் காட்டினார். உங்கள் வாதம் அடிப்பட்டு விட்டது என்பதனூடாக சமூக மாற்றத்தை விரும்பிய அனைவரின் கருத்துக்களையும் சுட்டிக்காட்டினார். எமது வாதம் இச்சபையிலும் சரி, உலகத்திலும் சரி இன்று உயிர் வாழ்வது மட்டுமின்றி அதுவே உலகத்தை மாற்றும் தன்மை கொண்டது. இன்று சோவியத் முதல் சீன வரை ஆட்சியிலுள்ள சீரழிந்த முதலாளித்துவமே (நித்தியானந்தன் விரும்புவது போல்) சமூகப் பிரச்சனையைத் தீர்க்க முடியுமெனக் கூறி ஆட்சியைக் கைப்பற்றியவர்கள் மூலம் அந்நாட்டின் மக்கள் முன்பு இருந்ததைவிட மிக மோசமான வறுமைக்குள் சென்றதுடன், மோசமான அடக்கு முறையையும் எதிர்கொள்கின்றனர். அந்நாடுகளில் மட்டுமின்றி அனைத்து நாடுகளிலும் கம்யூனிஸ்ட்கள் இன்று மீண்டும் வீறுநடை போடுவதை இவர் போன்றவர்கள் கண்ணிருந்தும் கண் தெரியாத அரசியல் குருடர்களுக்குத் தெரிய நியாயமில்லை தான். இன்று மார்க்சிசம் அதாவது வர்க்கப் போராட்டம் உலகை மாற்ற முடியாதெனின் இவரும், இவர் போன்றோரும் வைக்கும் தீர்வு தான் என்ன?. நித்தி, உமக்கு முதுகெலும்பு இருப்பின் நீரும், உமது சகபாடிகளும் சேர்ந்து வர்க்கப் போராட்டத்திற்கான மாற்றுத் தீர்வை (மாற்று வழியை) முன்வையுங்கள். உங்கள் அனைத்துக் கருத்தின் மீதும் அத்தீர்வையும், வழியையும் வையுங்கள். அதைவிடுத்து உங்கள் முகமூடிக்குள் நின்று பேசுவதைக் கைவிடுங்கள். எது உங்கள் அரசியல் வழியோ அதை முன்வையுங்கள்.

இவரும், இவர் போன்றவர்களும் அப்படி வைக்கப் போவதில்லையென நாம் நம்புகிறோம். ஏனெனில் வர்க்கப் போராட்டமே

www.tamilarangam.net

சுரண்டலை ஒழிக்கும். அது பிழையெனின் சுரண்டலை ஆதரிக்கும் இவர் போன்றவர்கள் எப்படி தமது அரசியல் கருத்துக்களை நேரடியாகச் சொல்லிப் பிழைக்க முடியாமல் போய்விடும். இவருடைய அரசியல் நிலையைச் சிறப்பாகப் புரிய வைக்க ஒரு சில உதாரணங்களைப் பார்க்கலாம். கடந்தகாலத்தில் இவர் விடுதலைப்புலிகளின் தத்துவவாதியாகவும், விடுதலைப்புலிகளின் பத்திரிகையாசிரியராகவும் இருந்தவர். அவற்றில் பல கட்டுரைகளையும், கவிதைகளையும் (இவைதாம் இவரின் இலக்கியங்கள்) எழுதியவர். (இன்றுவரை அதை சுயவிமர்சனம் செய்யவில்லை. எப்படிச் செய்வார் அதுவே இன்று அவரின் அரசியல்). அவற்றில் EPRLF ஐ வைச் செந்தோழர்கள் என நக்கலடித்து கவிதைகள் வடித்தவர். அன்று செந்தோழர்கள் மீதிருந்த வெறுப்பு (புலிகளின் அரசியல்) இன்று வர்க்கப் போராட்டத்தைப் பற்றிக் கதைத்தவுடன் அதே தொடருடன் தாக்குதலை நடத்துகிறார். இதைத் தொடரும் இவரின் நடவடிக்கைக்கு மேலுமொரு உதாரணம், பிரான்சில் நடந்தவொரு கூட்டத்தில் இராமையா தொடர்பாக நித்தி உரையாற்றினார். அந்நிகழ்ச்சியைப் புலிகள் குழப்ப முயன்றனர். பலர் குழப்பத்திற்கெதிராகக் குரல் கொடுத்தனர். இதில் ஒருவர் நித்தியானந்தனைப் பார்த்து "நீ யார்?" எனக் கேட்டதற்கு அவர் தான் ஒரு மனிதன் என்றும் சேட்டின் நிறத்தையும் சொல்லி தன் முகமூடியை இறுக்கப் போட்டுக் கொண்டார். அவனின் கேள்வியின் அர்த்தம் இதுவே நானும், நீயும் சேர்ந்தே பல கொலைகளைச் செய்ததுடன் அதை நியாயப்படுத்தினோம். அத்துடன் அன்று நடந்த கொலைகளை நியாயப்படுத்தி அரசியல் முலாம் கொடுத்து, எம்மை இயக்கத்தில் சேர்த்ததும் நீயே. அப்படியிருக்க இன்று என்ன நீ ஜனநாயகம் பற்றிப் புரட்டுகிறாய்? என்பதே அதன் அர்த்தம். அதற்கு அவர் சுயவிமர்சனத்துடன் (உண்மையில் கடந்தகால தன்னு அரசியலைக் கைவிட்டிருந்தால்) பதிலளிக்காமல் தனது போலி முகங்களைக் காப்பாற்றிக் கொண்டார்.

இந்நிகழ்ச்சி முடிந்தவுடன் நித்தியானந்தனை திலகர் வந்து சந்திக்க அழைப்பு விடுத்தார். அப்போது இவருக்கு ஒத்துழைப்பாக நின்ற பலரின் கருத்துக்களையும் மீறி திலகரைச் சந்தித்தார். நித்தியானந்தன், திலகர் இருவரும் தனியாகச் சந்தித்து சிற்றுண்டி உண்டு மகிழ்ந்தனர். இரு முரண்பட்ட அரசியல்களைக் கொண்ட இருவர் (உண்மையில் அப்படியல்ல) சுமூகமாக சிரித்துக் கதைத்து மகிழ்ந்தனர். இதில் அவர்கள் அரசியல் கதைக்கவில்லை என்று யாரும் வாதிட முடியாது. நித்தியானந்தனுக்கு அரசியல் நேர்மை இல்லாமலிருக்கலாம். ஆனால் புலிகள் தமது அரசியலில் நம்பிக்கையுள்ளவர்கள். அவர்கள் நித்தியுடன் பொழுது போக்குக்காக அழைத்துக் கதைக்கவில்லை. அவர்கள் தேவையுடன் மட்டும் அழைப்பவர்களே. சந்திப்பு முடிந்து வெளியில் வந்த நித்தியானந்தன் தாம் என்ன கதைத்தோமென தனது ஆதரவாளர்களுக்கு கூடச் சொல்லவில்லை.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இந்நிகழ்வு இந்திய இராணுவம் இலங்கையில் இருந்த போது புலிக ளுக்கும், பிரேமதாசாக்குமிடையில் நடந்த இரகசிய தேன் நிலவைப் போன்றதே. புலிகள் தமது உறுப்பினர்களுக்கோ, மக்களுக்கோ தாமுடைய இரகசிய தேன்நிலவு பற்றிச் சொல்லவில்லை. சொல்ல ப்போவதுமில்லை. அதே அரசியலின் தொடர்ச்சியே, நித்தி, திலகர் தேன்நிலவு பற்றி தமது ஆதரவாளர்களுக்கோ, மக்களுக்கோ சொல்லவில்லை, சொல்லப் போவதுமில்லை. இது புலிகள், பிரே மதாசா, தமக்கிடையே அரசியல் வேறுபாடு இல்லையென்பதையும், மக் கள் வர்க்கப் போராட்டத்தை நடத்தாமல் தடுக்கும் நோக்கில் இன்று யுத்தத்தை நடத்துவது போல் நித்தி, திலகர் சந்திப்பும் தமக்கிடையில் அரசியல் வேறுபாடின்மையையும், வர்க்கப் போராட் டத்தை தடுக்க (புலிகளின் அரசியலை ஒதுக்க முயலும் மூன்றாவது பாதையாளர்) தமக்கிடையில் முரண்பாடிருப்பது போல் காட்டிக் கொள்வதன் அவசியத்தை புலிகள்-பிரேமதாசா போல் புரிந்து கொண்டனர்.

நித்தியானந்தன் தொடர்ந்து இலக்கியச் சந்திப்பில் நாவலன் என்ப வர் சொன்ன கருத்தின் மீது அவை நாசிகளின் கருத்து என்று தனது தாக்குதலை நடத்தினார். இவர் நாசிகள் பற்றி ஓரிரு கட்டுரை களை எழுதிவிட்டால் (அரசியலின்றி சம்பவங்களை) மட்டும் தான் நாசி எதிர்பாளர்கள் என்ற முகமுடியைப் போட்டு விடுகிறார். நாவ லன் சொல்லிய கருத்து வெளிநாடுகளில் 90% மானோர் பொருளா தார அகதிகளே என்பது. இப்புள்ளி விபரம் சரியானதா என்ப தைவிட இங்கு புகழிடம் பெற்றோரில் பெரும்பான்மையானோர் பொ ருளாதார அகதிகளே. இவர்கள் இலங்கையில் ஏற்பட்ட யுத்தமும் பொருளாதார நெருக்கடியும் இவர்களை இங்கு வர வைத்தது. நித் தியானந்தன் இவர்கள் அனைவரையும் அரசியல் அகதிகளெனக் கருது பவரெனின் இலங்கையிலுள்ள அனைவரும் அரசியல் அகதிகள் தான். இவர்கள் அனைவரிலுமிருந்து அரசியல் ரீதியில் அரசு, மற்றும் விடுத லை இயக்கங்களின் கொலைப் பயமுறுத்தலுள்ளவர்களையே மிகுதி 10% அரசியல் அகதிகளுக்குள் நாவலன் குறிப்பிட்டார். இலங்கை யிலுள்ளோர் அனைவரையும் அரசியல் அகதிகளென ஏற்பின் நாட்டிலு ள்ள அனைவரும் (முழு தமிழ மக்களும்) நாட்டைக் கைவிட்டு இங்கு குடிபெயர்ந்து வந்திருக்க வேண்டும். இதைத் தான் இங்குள்ளவர்க ள் அனைவரையும் அரசியல் அகதிகளென நித்தி அங்கீகரித்துச் செய்ய நினைப்பது.

நாசிகள் சொல்லும் பொருளாதார அகதிகள் என்ற கூற்று வேறொ ரு நோக்கில் வெளிவந்ததே. நாசிகளின் பொருளாதார பிரச்ச னைகளைத் தீர்க்க ஒரு வர்க்கப் போராட்டத்தின் அவசியத்தைப் புறம் தள்ளி கறுப்பினத்தவர் என்று முகம் கொடுத்தே புரட்சியைத் தடுக்க முயல்கின்றனர். இங்குள்ள அகதிகளை வெளியேற்றுதேயென நாமும் கோருகின்றோம். எந்த அடிப்படையிலெனின் இன்று இலங் கையில் நடைபெறும் யுத்தம், மற்றும் மக்களின் வறுமைக்குக் கார



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

ணம் இந்நாடுகளே. யுத்தத்தை நடத்துபவர்களும் இவர்களே. இவ் யுத்தத்தை நடத்துவதனூடாக எம்மக்களை ஒட்டச் சுரண்டிக் கொழுப்பவர்களும் இவர்களே. அங்குள்ள நிலைமைக்கு இவர்களே காரணமாக இருக்கும் போது எம்மை வெளியேற்ற எக்காரணத்தையும் கூற முடியாது என்பதே. இதே நோக்கில் (அரசியல் ரீதியில்) நாசிகளுக்கெதிராக கருத்துக்களைக் கூற மறுத்து கருத்துக்களைத் திரிபு படுத்தி நித்தி போன்றோர் பிழைப்பதுடன் நாசிகளின் அரசியலை தொடர்கின்றனர். அதாவது புலிகளின் அரசியலுக்கும், நாசிகளின் அரசியலுக்கும் எந்த வேறுபாடும் கிடையாத நிலையில் கடந்த காலத்தில் புலிகளின் கொள்கைகளின் வகுப்பாளராகச் செயற்பட்ட நித்தி அதை சுயவிமரசனம் செய்யாததுடன், திலகருடன் தேன்நிலவுகளைநடத்தும் இவர், தான் சொல்லும் கருத்துக்களில் அரசியலை நேரடியாகச் சொல்ல மறுப்பவர், மார்க்சிசம் இறந்து விட்டதென சொல்வதன் அர்த்தத்தைப் புரிந்து கொள்ளக் கூடியதே.

1984இன் ஆரம்பத்தில் TELO அமைப்பிலிருந்து மேற்குறிப்பிட்ட நாவலும், நேருவும் (இவர் பின்னர் NLFT யில் வைத்துச் சுட்டுக் கொல்லப்பட்டவர்) மற்றும் வேறு சிலரும் தப்பியோடிய சமயம் இவர்களுக்கேற்பட்ட உயிராபத்தைத் தடுப்பதாகக் கூறி புலிகள் பாதுகாப்பு வழங்கினர். அப்போது இவர்களுக்கு பொறுப்பாக இருந்த நித்தியானந்தன் பாதுகாப்பு என்ற பெயரில் புலிகளுடன் இணையும்படி வற்புறுத்தியதும், அது சாத்தியமாகாமல் போக அவர்களை மிரட்டிய நித்தியானந்தன், பின் அவர்களை வேறு ஓர் இயக்கம் அமைக்கக் கூடாதெனச் சொல்லி எச்சரித்தார். இதன் இவர்களின் பாதுகாப்பிலிருந்தும் தப்பித்துச் செல்ல வேண்டிய நிலையேற்பட்டது. இதுவே நித்தியின் பாத்திரம் புலிகளுக்குள்.

நித்தியானந்தன் ஒரு கட்டத்தில் மார்க்சைக் கூட விபச்சாரத்திற்கு அழைத்துக் கொண்டார். மார்க்சியப் பெண்களின் உழைப்புப் பற்றி சொல்லவில்லை மாறாக ஆண் உழைப்பு பற்றி மட்டுமே கூறினொரென்றார். ஆண் உழைப்பு தொடர்பாக மார்க்சின் கருத்தை ஏற்காத நித்தி புலிகளின் பிரச்சாரக்காரராக நின்று மார்க்சித்தைக் திரிபுபடுத்தினர். மார்க்ஸ் எப்போதும் ஆண், பெண் உழைப்பைப் பிரித்த தனது தத்துவத்தைக் கூறவில்லை. முதலாளித்துவத்தின் தோற்றம் (இது நித்திக்குத் தெரியாது) உழைப்பின் தேவையுடன் பெண்களை உழைப்பில் ஈடுபடுத்தியது. முதலாளித்துவத்தின் வளர்ச்சி மீதே மார்க்சின் தத்துவம் உருவானது. அதாவது முதலாளித்துவ வளர்ச்சியில் உழைப்புத் தொடர்பாக விஞ்ஞான பூர்வமாக ஆய்வு செய்து வெளிவந்ததே. இன்றுவரை முதலாளித்துவ வாதிகளுட்பட (நித்தியானந்தன் போன்ற வகையறாகள் தவிர) மார்க்ஸின் தத்துவத்தையே ஏற்றுள்ளனர். உழைப்பு என்பது ஆண், பெண்ணுக்குப் பொதுவானதே. அதுபோல் சுரண்டலும் இருவருக்கும் பொதுவானதே. நித்தியானந்தன் போன்றோரே மார்க்ஸ்சை விபச்சரத்துக்கு கூப்பிட்டு பிழைக்க முயல்வதுடன், தனது புத்திசாலித்தனம் என்று தனது முட்டாள்தனமான அரசியலை வெளிப்படுத்தினர்.

www.tamilarangam.net

## நடைமுறைப் பிரச்சனையில் மார்க்ஸ் கோட்டை விட்டரா?

'சமர்' குழுவிலிருந்து ஒருத்தர் வெளியேற்றப்பட்டதையொட்டிய கடிதத் 'சமர்' 5,6 இதழ்களில் பிரசுரிக்கப்பட்டது. கருக்க லைப்பு சமூகத்தேவையை ஒட்டியதல்ல எனச் சமரால் முன்வைக்கப் பட்டதாக திரிபுபடுத்தி 'சரிநிகர்' நவ/டிச 1992 இற்கான இதழில் இதுபற்றிய விமர்சனம் அனிச்சா என்னும் பெயரில் வெளியா கியிருந்தது.

கருக்கலைப்புக்கும், கருத்தடைக்கும் உள்ளவேறுபாட்டை 'சரிநிகர் ஆசிரியர் குழு சரியாக ஆராயாமலோ என்னவோ "கருத்தடை ஒரு உயிர்க்கொலை" என்னும் வியாபாரநோக்குள்ள த லையங்கம் கொடுத்திருந்தும் ஒரு கசப்பான உண்மை எனச் சுட்டிக்காட்டுவ தோடு மேற்கூறிய நபருக்கும், சமருக்கும் இருந்தபிணைப்பும், பிரி வும் பற்றி தெளிவுபடுத்துவதன் ஊடாக தொடர்ந்து கருக்கலைப்புப் பற்றிய சமரின் கருத்தை தெளிவாக்க முனைகின்றது.

1). குறிப்பிட்ட கடிதம் மேற்படிநபருக்கு 'சமர்' குழுவின் ஏகம னதான முடிவோடு அனுப்பப்பட்டது.
2). 'சமர்' முன்வைத்த வேலைத்திட்டத்திற்கமைவாக, கருத் தொருமிப்பும், புரிந்துணர்வோடும், சமூகநோக்கம் கொண் டதாக சொந்த வாழ்க்கையில் கறாராக நடந்துகொள்ளுதல் ஆகிய உடன்பாடு இருந்தது.
3). மேற்குறிப்பிட்ட நபர், 'சமர்' குழுவில் இருந்த சிலர் மீது சொந்த வாழ்க்கையில் சமூகநோக்கற்று நடந்து கொண்டு நடைமுறைப்படுத்தப்பட்டது இங்கு குறிப்பிடத்தக்கது.
4). 'சமர்' இதழ் 2இல் "பெண்" என்னும் கட்டுரையையும் மேற்படி நபரே எழுதினார். (இக்கருத்தே இன்றும் சமருக்கு உள்ளது.
5). இவரது கருக்கலைப்பு அந்தரங்கம் இவராலேயே 'சமர்' குழுவுக்கு ஒரு முற்போக்கு வேடத்தில் அறிவிக்கப்பட்டு தனித் தனியாக விவாதித்தார்.
6). குழந்தை ஒன்று தேவை என்று தனது குடும்பம் விரும்புவதாக வும் தற்போதுள்ள பொருளாதார நெருக்கடியால் இதைச் செய்வதாகவும் குறிப்பிட்டார்.
7). இது முதற் தடவையல்ல, இரண்டாவது தடவை என்பதும் இவ ராலேயே அறிவிக்கப்பட்டது.
8). குறித்த காலத்தின் பின் தான் ஒரு குழந்தையைத் தத்தெடுத் து வளர்க்க விரும்புவதாகவும் கூறினார்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மேலே குறிப்பிட்ட இந்நபரின் கருத்துக்களை நிலை நிறுத்தி 'சமர்' குழுவிலிருந்தோர் (தனிநபர்களாக)

1). இச்சமகால பொருளாதார நெருக்கடியைக் கடந்து செல்ல பண உதவி மற்றும் ஏனைய உதவிகளைச் செய்ய முன்வந்தனர்
2). கருக்கலைக்க வேண்டாம் எனக்கோரி, குழந்தை பிறக்கும் வரைக்கும் உள்ள பண நெருக்கடியைக் கவனிப்பதாகவும், குழந்தை பிறந்தவுடன் தன்னிடம் தந்து விடும்படியும் குழுவில் ஒருத்தர் நட்போடு வேண்டுகோள் விடுத்தார்.
3). இக்கருச்சிதைவு பெண்ணின் விருப்பத்திற்கு மாறாக நெருக்குதலால் நடக்கின்றதா? என்பதை அறிய தோழமையோடு குறிப்பிட்ட நபரை அணுகிய போது அவர் கூறினார், "நீங்கள் எனது மனைவியை குழப்பிவிடுவீர்கள் என்று அனுமதிக்கவில்லை.
4). நெருக்கடி முற்றிய நிலையில் பெண்ணிலைவாதக் கருத்துக்களோடு உடன்பாடுள்ள மேற்படி நபரின் மனைவியை, 'சமர்' குழுவில் ஒருத்தர் தனது மனைவி சகிதம் சந்தித்து நட்புரீதியில் இதுபற்றிக் கதைத்த போது, இப்பெண்ணிலைவாதியானக் கருவைச் சுமந்து நின்ற தாய் எவ்விதமான பதிலும் கூறாமல் ஏக்கமான மௌனம் சாதித்தார்.
5). இதன் தொடர்ச்சியாக கருச்சிதைவு நடந்தது 'நாம்' 'சமர்' குழுவின் ஏகமனதான முடிவோடு வெளியேற்றினோம். அதற்குரிய கடிதமும் அவருக்கு கொடுக்கப்பட்டது.

இக்கருக்கலைப்பு நடைபெற முன்னர், இதுபற்றி குழுவாக விவாதிப்பதைத் தட்டிக் கழித்துவந்த இவர் கருச்சிதைவின் பின்னர் குழுவின் பெரும்பான்மை முடிவோடு செயற்படுமாறும், விவாதிக்கவும் கோரினார். ஆனால் 'சமர்' குழு இதை ஏகமனதாக நிராகரித்து விட்டது. இதை இவர் ஜனநாயகமற்ற செயல் எனக் கூறித் திரிந்தமையால் மாத்திரமே நாம் அக்கடிதத்தைப் பிரசுரிக்க வேண்டி ஏற்பட்டது.

இங்கே நாம் உறுதியாகக் கூறும் கருத்து என்னவெனில் நட்பு, புரிந்துணர்வு, தோழமை ஆகியவற்றால் கருத்தொருமித்திருந்த எம்மில் ஒருத்தருக்கு (குறிப்பிட்ட நபர்) சமூக முரண்பாட்டிற்கு முகம் கொடுத்து போராடி வாழும் சராசரி மனோபாவம் இல்லாமல் போனமை, நடுத்தர வர்க்கத்திற்கே சொந்தமான வறுமையிலும் வரட்டுக்கௌரவம் என்னும் தன்மையிலிருந்து யதார்த்தநிலைக்கு இறங்கி வராமல் சக நண்பர்களின் உதவியைத் தட்டிக்கழித்தமை, இக்கருக்கலைப்பில் இப்பெண்ணிற்கு எந்தளவு தூரம் உடன்பாடுண்டு என்பதை நேரில் பேசி அறிய எம்மைத் தடுத்தமை போன்ற பிற்போக்கு அம்சத்தை தனது சொந்த வாழ்க்கையில் கடைப்பிடித்துக்கொண்டு, முற்போக்குச் சாயம் பூசி சமரோடு இருப்பதை சரியாக இனங்கண்டு இவரை வெளியேற்றியமை ஒரு குழு நடவடிக்கையே.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இது விடயமாக 'சமர்' 5,6இல் வெளியாகியிருந்த கடிதம் எந்த விதத்திலும் கருக்கலைப்பு சம்பந்தமான சமரின் ஒட்டுமொத்த கருத்தை வெளியிட்டதில்லை. அனிச்சாவின் விமர்சனம் சமர் பற்றிய ஊகங்களின் அடிப்படையிலேயே அதிகம் எழுதியிருந்த . . பேர்திலும் தொடர்ந்து பதிலளிக்கின்றோம்.

வளர்முக நாடுகளிலும் சரி வளர்ச்சியடைந்த நாடுகளிலும் சரி கருக்கலைப்பு(சிசுக்கொலை) பெண்விடுதலையின் மையமாக சில பெண்ணிலைவாதிகளால் பூதாகாரமாக்கப்பட்டுள்ளதாயிட்டு உண்மையில் நாம் அனைவரும் வருத்தமடைய வேண்டியுள்ளது. . . பரந்துபட்ட துறையில் ஒதுக்கப்பட்டுள்ள பெண்ணின் உரிமையை ஒரு பாலியல் பிரச்சனையாகக் குறுக்கி வைத்துள்ளதும் இவர்களே தான். நிபந்தனையற்ற கருக்கலைப்பை எதிர்போர், பிற்போக்குவாதிகள் என்றும் ஆதரிப்போர் நவீன முற்போக்காளர்களாகவும் சித்தரிக்கப்படுகின்றனர்.

முன் நிபந்தனையற்ற கருக்கலைப்பு என்னும் கருத்துருவாக்கம்சொந்த நடவடிக்கைகளை நியாயப்படுத்தி, சமூகத்தீர்வாக முன் நிறுத்தும் சமூக நோக்கற்ற செயலே.

நிலப்பிரபுத்துவத்தின் இறுக்கமானக் கலாச்சாரக் கட்டிலிருந்து முதலாளித்துவத்தின் முற்போக்கு அம்சம் கல்வி, வேலைவாய்ப்புப் போன்ற குறிப்பிட்ட சில உரிமைகளைபெண்களுக்கு வழங்கியிருப்பது உண்மையே. ஆனால் இதுவே பெண்களின் பிரச்சனைகளைத் தீர்த்துவிடவில்லை. மாறாக முதலாளித்துவம் கொடுத்த உரிமைகளிலேயே பெண் இம்சைப் படுத்தப்படுவதும், அலங்காரப் பொருளாக சித்தரிக்கப்படுவதும் இயல்பாக்கப்பட்டுள்ளது. மேற்கத்திய நாடுகளில் இவையிலிருந்து ஒருபடி மேலே போய் வரையறையற்ற பாலுறவு, ஓரினச்சேர்க்கை, சமூக வரம்புகளை மீறிய குடும்ப அமைப்பு போன்றவற்றால் இந்நாடுகளில் மனநோயாளர்களையும், பாலியல் நோய்களையும் இவ்வுலகத்திற்குத் தந்ததோடு கணவன், மனைவி உறவுக்கே உலைவைக்கக்கூடிய AIDS எனும் கொடிய நோயையும் இவர்களே இவ்வுலகுக்குத் வழங்கினார்கள்.

நிலப்பிரபுத்துவக் கலாச்சார நாடான (பிற்போக்குக்கலாச்சார) இலங்கையிலிருந்து ஐரோப்பிய நாடுகளில் குடியேறி பெண்விடுதலை பேசும் இவர்களால் ஏகாதிபத்தியங்களின் சீரழிந்தகலாச்சாரத்தை உரிமையாகக் கோருவதற்கப்பால் வேறு எதுவும் செய்ய முடியாதுள்ளனர். இதனடிப்படையில் நாம் நோக்கும் போது நமது மரபுவழிப் பிற்போக்குக் கலாச்சாரத்துக்குப் பதிலாக மேற்கத்தைய நாடுகளே வெறுக்கும் சீரழிந்த கலாச்சாராத்தை முன் . . லைக்க முனைகின்றனர்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பெண்விடுதலைக்கு ஆண், பெண் உட்பட்ட ஒட்டுமொத்தச் சமூகமே ஓர் புரட்சிகரச் சூழ்நிலையில் கருத்தால் ஒருங்கிணைக்க வேண்டும் என்பதை நிராகரித்து மனித இயல்பை மீறிய ஆண் எதிர்ப்பு கோசம் வெளியாகின்றது. பெண்களின் விடுதலையைப்பிரதிபலிக்கும் கலை வடிவங்களாகவும், எழுத்து வடிவங்களாகவும் ஆண்களே அதிகப் பங்காற்றியுள்ளனர். பெண்களைத் தட்டிக் கொடுப்பவர்களும் இவர்களே.

பெண்கள் விசரமான பாத்திரங்களில் பெண் எழுத்தாளர்களால் சித்தரிக்கப்படுவதையும் நாம் இங்கே குறிப்பிட்டேயாக வேண்டும். நாம் இதை எழுதுவதால் தொடர்ந்தும் இந்நிலை இருக்கும் என்பது பொருளல்ல. ஆனால் இதுதான் தற்போதைய உண்மை. இன்று நாம் சார்ந்துள்ள, சமூகப்பொருளாதார, கலாச்சார, பண்பாட்டு விழுமியங்களின் பிரதிப்பலிப்பாகவே பெண் ஒடுக்குமுறை உட்பட்ட அனைத்து ஒடுக்குமுறைகளும் நடைபெறுகின்றன. (கருக்கலைப்பு உட்பட) சீதனக் கொடுமையால் பெண்கள் தீயில் எரிக்கப்படுதல் (மாமி-மருமகள்) குழந்தை பிறந்தவுடன் பெண் குழந்தையானால் கொல்லுதல் அல்லது அனாதரவாக விடுதல், நிபந்தனையற்றக் கருக்கலைப்பு ஆகியவை ஒரேப்பிரச்சனையின் பல்வேறு வடிவங்களே.

கரு உருவாகாமல் கருத்தடை மாத்திரை, கருத்தடைச் சாதனம், மற்றும் கருத்தடை அறிவியலூடாக கருத்தடைப்படுத்திக் கொள்வதும் கருத்தடையாகவே கருதலாம். கரு உருவான பின்னர் அதைக் கலைப்பது கருச்சிதைவாகும். (சிசுக்கொலை) 'சரிநிகர்' விமர்சகர் இவை இரண்டையும் குழப்பி இதை முன்னால் செய்தாலென்ன? பின்னால் செய்தாலென்ன? இரண்டும் ஒன்று தானே என்கின்றார். நாம் இவர் பாணியிலே கேட்கின்றோம், பத்து மாதத்தில் குழந்தை பிறக்கின்றது பிறந்த பின்னர் குடும்பத்தின் பழைய இருப்பைப் பேண முடியாமல் போகுமாயின் அக்குழந்தையைக் கொல்லலாம் தானே? உங்கள் பாணியில் இது மூன்றும் ஒன்று தான்.

ஒரு வருடத்திற்கு 10 லட்சம் பெண் குழந்தைகள் சீனாவில் பிறந்தவுடன் கொல்லப்படுகின்றார்கள். ஆண் குழந்தைகளே 'பிற்காலத்தில் பொருளாதார ரீதியில் உதவுவார்களென்று பெற்றோர் காரணம் கூறுவதாக சீனாவின் பிரபல பெண்ணிலைவாதியான சென் முகுவா கூறுகின்றார். (நன்றி - சுவடுகள் இதழ் 36)

இந்தியாவில் குறிப்பாக தமிழ் நாட்டில் அதிகமான கிராமங்களில் பெண் குழந்தை பிறந்தவுடன் பெற்றோர் கொன்றுவிடுவதாக செய்திகள் வருகின்றன. 1989ம் ஆண்டு தை மாதம் தொடக்கம் புரட்டாதி வரை 44 பெண்குழந்தைகள் உசிலம்பட்டிக்கிராமத்தில் பிறந்தவுடன் கொல்லப்பட்டார்கள். இவைஇறப்புப் பதிவில் குறி

www.tamilarangam.net

ப்பிடப்பட்டவை மாத்திரமே. பதிவு செய்யாதவை புலமடங்கு அதிகம் எனக் கூறப்படுகின்றது. இக்குழந்தைகளின் பெற்றோர் பத்திரிகைக்குப் பேட்டியளிக்கும் போது 10 பவுண் நகையும் 10 ஆயிரம் ரூபாய் பணமும் இல்லாமல் திருமணம் செய்து கொடுக்க முடியாது அதனாலேயே கொல்வதாகக் கூறுகின்றனர். நிபந்தனைய ற்ற கருக்கலைப்பை ஆதரிப்போர் பெண்குழந்தைகள் கொல்லப்ப டுவதையும் ஆதரித்தேயாக வேண்டும். ஏனெனில் இவை ஒரே பிரச்சனையும் ஒரே வடிவமுமேயாகும்.

ஒவ்வொரு தனிமனிதனும் சமூகத்தில் தனி அங்கமாயிருந்த போதி லும், தனிமனித அபிலாசைகளோடு பொருந்திய தேவை ஒருசமூ த்திற்குப் பொருந்தி வராது. ஒட்டுமொத்தச் சமூகத்துக்குப் பொருந்திய தேவை மாத்திரமே ஒருதனிமனிதனுக்குப் பொருந்தும்

நிபந்தனையற்றுக் கருவைக் கலைக்கலாம் எனும் வாதம் சமூகச்சீ ரழிவையே கொடுக்கும். கருவில் இருக்கும் குழந்தை குறைபாடா யிருத்தல், கருவுற்ற தாய் நோயுற்றிருத்தல், தாயின் உயிருக்காப த்தாயிருத்தல் போன்ற அத்தியாவசியத் தேவைகளை ஒட்டிய வைத் திய ஆலோசனையுடன் செய்து கொள்வது அவசியமானதே.

பலாத்காரத்தாலோ, இராணுவ பலாத்காரத்தாலோ உருவான கருக்களையும் சமூகம் ஏற்றுக் கொள்ளத் தயாராயில்லாத இந்நி லையில் கலைத்தேயாக வேண்டும். இவை போன்ற சமூகத்தேவை களையொட்டிய கருக்கலைப்புக்கள் மேற்கூறிய நிபந்தனைகளோடு ஏற்றுக் கொள்ளவே வேண்டும். இவை தவிர்ந்த கருக்கலைப்புக்க ளை சமூகம் வன்மையாகக் கண்டிக்க வேண்டும். ஆண்கள் எத்தனை பெண்களோடு தொடர்பு வைத்திருந்தாலும் இயற்கையின் சாதகத்த ன்மையால் அவர்கள் தப்பி விடுகின்றனர். இயற்கையாகவே பெண் கருப்பையைச் சுமந்து நிற்பதால் சமூகத்தின் கொடியப் பார்வைக் குள்ளாகி ஒதுக்கப்படுகின்றாள் என்பது உண்மையே.

மது அருந்துதல், போதைப் பொருள் பாவித்தல், பல பெண் களோடு பாலுறவு ஆகியவை ஆண்களின் உரிமையாக இருப்பின் இதே உரிமை பெண்களுக்கும் நிச்சயம் உண்டு. ஆனால் இவைகள் ஒட்டு மொத்தச் சமூகத்திலிருந்து முடிந்தவரை களையப்பட வேண்டி யவையே. மேற்குறிப்பிட்ட உரிமைகளையும் நிபந்தனையற்றக் கருக் கலைப்பையும் கோருவது எவ்விதத்தில் சமூகநோக்காகும். அனைத் து நாடுகளிலுள்ள அரசுகளாலும் சட்டரீதியாக தடை செய்யப்பட்டு ள்ள அனைத்து அம்சங்களும் ஏதோ ஒரு வகையில் நடந்து கொண் டே தானிருக்கின்றன. இவற்றிற்கு மூல காரணமாக அரசும் சமூக அமைப்புமேயுள்ளன. (கருக்கலைப்பு உட்பட) இவைகள் நடந்து கொண்டுதானிருக்கின்றன என்பதால் சமூகம் நடைமுறையில் தீர்வாக

www.tamilarangam.net

ஏற்றுக் கொள்ளமுடியாது. இதன் நிமித்தமே சமூகம் ஒட்டு மொத்தமான ஓர் சமூக மாற்றத்தை நாடி நிற்கின்றது.

அதன் மூலம் மாத்திரமே படிப்படியாக இவைகட்கு தீர்வு காணமுடியும். மற்றும் குறிப்பிட்ட சில பெண்ணிலைவாதிகள் திருமணம் செய்யாமலே ஒரு ஆணோடு சேர்ந்து வாழலாம் என்னும் ஐரோப்பிய நாடுகளில் பிரதி பண்ணிய (COPY) ஒரு கருத்தைக் கொண்டுள்ளதோடு மற்றவர்கட்கு போதிக்கவும் செய்கின்றனர்.

பொருளாதாரச் சார்பு நிலையும் ஆணாதிக்கமும் அற்ற ஒரு சமூக மாற்றம் ஏற்படும் பட்சத்தில் இயல்பான மனித தேவைகளையொட்டி ஒரு ஆணும் பெண்ணும் சேர்ந்து வாழும் நிலையில் யதார்த்தமான குடும்ப உருவாக்கம் உண்டு என்னும் விஞ்ஞான பூர்வமான ஆய்வினை நாம் மறுக்கவில்லை. மேற்கூறிய பெண்ணிலைவாதிகள் சமகால சமூக அமைப்பிலுள்ள அனைத்து அம்சங்களையும் விட்டுவிட்டு இவ்விடத்தில் மாத்திரம் மிகவும் வேகமாகப் போய்விட நினைக்கின்றனர். இவை தான் நாம் சமூகச் சீரழிவு என்கின்றோம்.

நாம் இருக்கும் சமூக அமைப்பின் அனைத்து வரையறையும் உடைத்து எறியப்படும் தறுவாயில் புரட்சிகரமான புதிய சமூக வரம்புகளின் ஊடாகவே பரிணாம வளர்ச்சி பெற்று பூரண விடுதலையை அனுபவிக்க முடியும்.

இதைத்தவிர இவர்களது இந்நடவடிக்கை இச்சமூக அமைப்பைமாற்றியமைக்கப் போராடுவதற்குப் பதிலாக, இச்சமூகத்தில் ஆண் ஒரு சரியான காரணி என்றே காட்ட முனைகின்றனர். இதன் அடிப்படை வக்கிரமான தனிநபர் சுயதேவையும், சமூக நோக்கற்ற ஆண்களின் நடவடிக்கையை பெண் உரிமையாகக் கோரும் பிற்போக்குவாதமேயாகும்.

ஐரோப்பிய சமூகப் பெண்கள் சுரண்டும் வர்க்கங்களால் நேரடியாகப் பல முனைகளில் ஒடுக்கப்படுகின்றனர். ஐரோப்பிய பெண்விடுதலை அமைப்புக்களால் கூட இவர்களை அணிதிரட்டி ஒருங்கிணைத்தும் போராடுவதற்குப் பதிலாக சுரண்டுவோரின் சுரண்டலுக்கு ஈடுகொடுக்கும் வகையில் கருக்கலைப்புக் கோசத்தையே முன்வைக்கின்றனர்

உதாரணமாக இங்குள்ள சந்தைப் பொருளாதார அமைப்பு முறையிலுள்ள சிறு முதலீட்டாளர்களின் தொழில் நிறுவனங்கள் உட்பட பல் தேசியக் கம்பனிகள் வரை பணிக்கு அமர்த்தியுள்ள பெண்களைப்பொருத்தவரையில், நிறுவனம் குறைவான லாபம் பெறும் போது, அல்லது ஆள்குறைப்புச் செய்யவேண்டிய தேவையேற்படும் போது 38 40 வயதைத் தாண்டியோர், குடும்பப் பெண்கள் ' போன்றோரே

www.tamilarangam.net

வேலை நீக்கம் செய்யப்படுகின்றனர். இவர்களில் பணிப்பெண்கள், உல்லாசப் பயணிகளோடு தொடர்புபட்ட வேலையாட்கள் (HOTELS) வரவேற்பாளர், காரியதரசி ( SECRETARY ), விற்பனைப்பகுதியிலுள்ள வெகுசனத் தொடர்பாளர் போன்றோர் முன்னணியிலுள்ளனர். இவற்றிற்குரிய காரணங்கள் கட்டான உடல்மைப்பு இழந்தமை, வசீகரமான இளமைத் தோற்றத்தை இழந்தமை போன்றவையே முன்னணிக் காரணங்கள். மேலே குறிப்பிட்ட வயதைத் தாண்டிய பெண்கள் மேற்கத்தைய நாடுகளில் இன்னுமோர் வேலை பெறுவது முயல்க்கொம்பாகவே இருக்கும். ஏகாதிபத்தியங்களின் கவர்ச்சிகரமான லாப நோக்கம் கொண்ட வேலைத்திட்டத்தால் பெண்கள் உழைப்பு உறிஞ்சப்பட்டு ஒடுக்கப்படுவதை இசைந்து, ஏற்று, பழக்கப்படுத்திக் கொள்ளவும் கருக்கலைப்பைக் கோருவது இவர்களுக்கு அவசியப்பட்டுள்ளது. சுரண்டலுக்கு துணை போகும் ஒரு நடவடிக்கையாகவே கருக்கலைப்பும் கோரப்படுகின்றது. சில ஏகாதிபத்திய நாடுகளில் இவ்வுரிமையைக் கொடுக்க மறுத்த போதிலும்அனேகமானக் கட்சிகள் இவ்வுரிமையை வழங்க முன் வருகின்றன. ஏகாதிபத்திய நாடுகளில் அனேக பெண்கள், திருமணம் செய்யாமல் ஒருத்தரோடு சேர்ந்து வாழுதல், அல்லது, தங்கள் உடலியல் தேவைகட்கு கணவனோடு சேர்ந்து கொள்ளுதல், குழந்தை பெற்றுக் கொள்ளாமல் வாழ்க்கையை ஓட்டுதல் போன்றவை இவர்களது தொழில் சார்பு வாழ்நிலையைப் பேணுவதற்காகவே.

வளர்முக நாடுகளில் பெண் ஒடுக்குமுறை முற்றிலும் மாறுபட்டதாகவேயுள்ளது. இதனடிப்படையில் தான் நாம் கூறுகின்றோம் பெண்விடுதலை என்பது பெண்கள் மாத்திரம் சம்பந்தப்பட்ட கோசமாக அமையமுடியாது. சுரண்டலுக்கெதிரான பாட்டாளி வர்க்கப் புரட்சியிலேயே உண்மையான பெண்விடுதலையின் கருத்துருவாக முடியும். வளர்முக நாடுகளிலும், வளர்ச்சியடைந்த நாடுகளிலும் உள்ள பெண்விடுதலை அமைப்புக்களின் பொதுவானதோர் கருத்து யாதெனில் பெண்கள் பிள்ளை பெறும் இயந்திரமாகப் பயன்படுத்தப்படுகின்றனர் என்பதே. இது உண்மைக்குப் புறம்பான கருத்தல்ல என்றபோதிலும் பெண்கள் தங்களைத்தாங்களே காட்சிப் பொருளாக நினைத்து அலங்கரித்து மற்றவர்களின் பார்வைக்காக பவனிவரும் காலம்மாறும் வரை பெண்விடுதலையின் முதல் படியையேனும் தொட முடியாது. தொடர்ந்து அனிச்சாவின் விமர்சனத்திலிருந்து பெறப்பட்டக் கேள்விகளுக்கு பதிலளிக்கின்றோம்.

1). குழந்தைக் கொலையையும், கருச்சிதைவையும் ஒன்றாகப்போட்டுக் குழப்பியுள்ளது. வர்க்கப்போராட்டமே எல்லாவற்றிற்குமான முடிந்த முடிவு எனக்கூறி நடைமுறைப் பிரச்சனையைக் கோட்டை விடுவது சமரின் பிரச்சனை என்றும் கூறியுள்ளார்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

உண்மையில் அனைத்து முரண்பாடுகளிற்கும் வர்க்கப் போராட்டத்தின் மூலமே தீர்வுகாண முடியும் என்பது சமரின் உறுதியான முடிவு. ஆனால் இவ்விடயத்தை எழுதுவது, விமர்சிப்பது, நிபந்தனைகளை விதிப்பது, சமூகச் சீரழிவை நோக்கித் தள்ளும் கருத்திலிருந்து விலகி ஆராய்வது, அனைத்துமே நடைமுறையைக் கருத்தில் கொண்டே ஈடுகொடுத்து நகர்வதுமாகும். இதை விளங்கிக் கொள்வது இந்தச் சமூக அமைப்பில் ஏகாதிபத்தியத்திற்குச் சார்பான வகையில் உள்ள உங்கள் நடைமுறை பிரச்சனையின் தீர்வை அங்கீகரிக்கக் கோரும் இவரது வாதம், இப்பிரச்சனையை இச்சமூக அமைப்பில் தீர்க்க முடியும் என்று கூறுவதாகும். அது எப்படி?

2). மூலிகைகளாலும், மற்றும் பல முறைகளாலும் ஆதிகாலத்திலும், கருக்கலைப்பு நடந்ததாகக் கூறி தற்போதைய சுயதேவைக்குரிய கருக்கலைப்புக்கு ஆதாரம் காட்டியுள்ளார்..?

இதிலிருந்து இவர கூற வருவது காலத்தின் புரட்சிகர வளர்ச்சிக்கேற்றவாறும், சமூக ஆரோக்கியமாகவும் ஆராய இவர் தயாராயில்லையென்பதே. மரபுவழிப் பழமைகள் யாவற்றையும் ஒதுக்கி அதிசிறந்த பெண்விடுதலைவாதியாக விமர்சனம் எழுதிய இவர் கருக்கலைப்பு விடயத்தில் மாத்திரம் பழமையையே பேண நினைக்கின்றார். இதையே தான் மேலே குறிப்பிட்டோம். இது சமூக நோக்கல்ல சுயதேவையென்று.

3). பெண்ணை ஆட்டக்காரி எனவும் அடக்கமற்றவள் எனவும் கூறி அவளை ஈரண்டாம் தரமாகக் கருதும் இந்த மனப்பான்மையிருக்கும் வரை கருச்சிதைவை எப்படித் தடுக்கமுடியும்?.

இக்கேள்வி பெண்விடுதலையை நிராகரிக்கும் கேள்வி மாத்திரமல்ல, ஆண் எதிர்ப்புக் கோசத்தையும் முன்வைக்கின்றது. மேலே குறிப்பிட்ட "ஆட்டக்காரி" என்னும் சொற் பிரயோகம் பிரயோகிப்போரின் அறிவின் அளவைப் பொறுத்தது. இதற்கு இன்னும் வேறு நாகரீகமான சொற்களும் பிரயோகிக்கப்படுகின்றன. இது பெண்களுக்கு மாத்திரமல்ல ஆண்களுக்கும் பிரயோகிக்கப்படுகின்றன. (பொருந்தும்) எந்தவொரு சமூகக்கட்டமைப்பிலும் குறைந்தபட்சம் தனக்குத்தான் எனும் ஒரு வரம்பமைத்து வாழாமல், மனம் போனபடி வாழ்வதும் (நடவடிக்கைகள்) பின்னர் அதன் பிரதிபலிப்பான கருவைக் கலைப்பதும் சமூகத் தேவையா? பெண்விடுதலை என்ற பெயரில் சமூகச் சீரழிவான நடவடிக்கையில் ஈடுபடும் பெண்களை ஆதரிப்பதோ அல்லது இதற்குச் சமமாக நடந்து கொள்ளும் ஆண்களை அவர்களின் ஆளுமை என்று கூறுவதோ அல்லது இதை ஆராய்ந்து நடைமு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

றையில் ஏற்பட்ட சூழ்நிலையில் தேவை என்று நியாயப்படுத்த முயற்சிப்பதோ ஒரு போதும் சமூக நியாயமாகாது.

4). வெளிநாடுகளில் வேலைவாய்ப்பை எதிர்பார்த்து பெருந்தொகையான ஆண்கள் கல்யாணம் முடிந்து ஒரு மாதத்தில் திரும்பவும் சென்றுவிடுவார்கள். ஆண், பெண் பாலியல் உறவுக்கே கேறிபடுத்தப்பட்ட சட்டரீதியான கல்யாண உறவில் கூட பெண்களுக்கு ஆண்களின் உறவு அற்றுப் போய்விடுகிறது. இந்நிலையில் பெண்களின் இரகசிய உறவுகள் வளர்வதற்கான சூழல் உருவாக்கப்படுகிறது. இரகசிய உறவினால் உருவாகும் பிள்ளையை சமூகம் ஒருபோதும் அங்கீகரிப்பதில்லை. இந்நிலையில் தனித்து வாழும் பெண்கள் எப்படி வாழவேண்டுமென்று சமூகம் எதிர்பார்க்கின்றது? என்றும் கேட்கின்றார்.

கணவன் வெளிநாடு செல்வது மத்தியதர வர்க்கத்தின் வாழ்நிலையை உயர்த்திக் கொள்ளவே. அவ்வர்க்க மனோநிலையில் இருந்து நோக்குமிடத்து குடும்பத்தின் முன்னேற்றம் முதன்மைபடுத்தப்படுகின்றது. கணவனுக்கும் மனைவிக்கும் உள்ள உறவு முழுக்க முழுக்க படுக்கையறை மாத்திரமே என்று நினைப்பது தவறு, ஆனால் அதை ஒட்டுமொத்தமாக நிராகரிப்பதும் குடும்ப அமைப்பையே தகர்த்துவிடும். அவரவர் சிந்தனை, அறிவு, சூழல் இவைகளைப் பொருத்து இவ்விடயம். கணவன் ஒருபக்க சார்பு முடிவோடு நீண்டநாள் வெளிநாட்டில் இருந்தால் தனது நிலையை விளக்கி அவரைத் திரும்பவும் அழைக்க முயற்சி செய்யவேண்டும். அவர் நியாயமற்று மறுத்தால் விவாகரத்துச்செய்துவிட்டு இன்னுமோர் திருமணம் செய்து கொள்ளவேண்டும். இதுவே பெண்ணின் உரிமை. இதைவிடுத்து யாரோடோ இரகசிய உறவு வைத்து பின்னர் கருவைக்கலைப்பது பெண்ணுரிமை இல்லை. சமூகநோக்குமல்ல. மூன்றாவது மண்டல நாடுகளில் மேற்குறிப்பிட்டவை போன்ற விவாகரத்துக்களால் கிடைக்கு நன்மைகளைப் போன்றே தீமைகளும் உண்டு என்பதையும் நாம் இங்கு குறிப்பிட்டேயாகவேண்டும்

உதாரணமாக நிலப்பிரபுத்துவ குடும்ப அமைப்பிலிருந்தும் சற்றும் மாறாத இந்நாடுகளில் அனைத்து வர்க்கங்களிலும் குடும்பம் சார்ந்த பொருளாதார பலத்தையே கொண்டுள்ளன. இதற்குரிய முக்கியக் காரணம் வேலையற்றோருக்கு உதவிப்பணமோ, வயோதிபர், அனாதைகள் போன்றோருக்கு உதவி செய்யும் திட்டம் எதுவும் அரசுகளால் செயமுறையில் இல்லாததும், பொது நிறுவனங்கள் கிடையாததுமாகும். இந்நிலையில் இளமைக் காலத்தில் ஏற்படும் விவாகரத்துக்களால் தங்கள் குழந்தைகள் நன்மைபெற தாய்தந்தையர் வாழ்வைத் தியாகம் செய்கின்றனர் அல்லது தாய்தந்தையர் வாழ்வு பெற குழ



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ந்தைகள் தங்கள் எதிர் காலத்தை சூனியமாக்கப்படுகின்றனர். இப்படியான சூழ்நிலையில் பெண் பூரண உரிமை பெற சமூக அமைப்பையும், அரசியல் அமைப்பையும் மக்களுக்குரியதாக மாற்றியமைக்க வேண்டும். மேலும் நடைமுறையில் நமது பெண்களை வெளிநாட்டு மாப்பிள்ளைமாரைக் கிராக்கிப்படுத்துவதும், விரும்புவதும் அதிகரித்தே வருகின்றது என்பதையும் இங்கு குறிப்பிட்டேயாகவேண்டும். நாட்டில் போர்ச்சூழல் ஏற்படும் முன்னரே இதே நிலையிருந்தது.

5). பொருளாதார ரீதியில் குழந்தை பெறுவது சாத்தியமற்றதாக இருப்பதுண்டு. குழந்தையை உருவாக்கிவிட்டு பட்டினியாலும், பசியாலும் சாகடிப்பதைவிட கருவில் சிதைப்பதை விளங்கிக்கொள்வது கடினமல்ல. மார்க்சிஸிலேயே தனது மகன் எட்காரை வறுமையிலிருந்து காப்பாற்ற முடியவில்லை. ஜென்னியின் முலையில் பாலுக்குப்பதிலாக ரத்தம் கசிந்த போதுள்ள வேதனையை விட பிறந்த பின் உணவூட்ட முடியாமல் சாகடிக்கச் செய்த துன்பத்தை விட கலங்களால் உருவாகிக்கொண்டிருக்கும் சிசுவை கருச்சிதைவு செய்வதை பாரதூரமானதாகக் கருதமுடியுமா? என்றும் குறிப்பிட்டுள்ளார்.

கருக்கலைப்பை சட்டபூர்வமாக்கக் கோருவது, நடுத்தர வர்க்கம் மாத்திரமே. இது முழுக்க முழுக்க நடுத்தர வர்க்கத்தின் பிரச்சனையும் கூட. சொத்து சேகரித்தல், பொருளாதார ரீதியில் உயர்ந்த நிலையடைதல், சமூகத்தில் நிலவும் சீதனம் போன்ற பிற்போக்கு அம்சங்களை பாதுகாத்தல் போன்றதாகும்.

வாழ்க்கைக்கு முகம் கொடுத்தல், அன்றடம் மனித வாழ்க்கையில் தொடரும் போராட்டத்தை வாழ்க்கையோடு இணைத்தல் போன்றவற்றை நிராகரித்து இயங்கிய நிலையில் மறுப்பதாகும். மேற்கூறியபடி இவரது கருக்கலைப்பு நியாய பூர்வமாகின், பொருளாதாரச் சிக்கலுக்கு முகம் கொடுக்கும் அனைத்துப் பெற்றோரும் தங்கள் பிள்ளைகளைக் கொல்லலாம் என்னும் உரிமையையும் கொடுக்கவேண்டும் ஜென்னியின் முலையிலிருந்து மாத்திரம் இரத்தம் கசியவில்லை,. யாழ்பாணத்து பங்கர்களில் குழந்தை பெறும் தாய்மார்களின் முலையிலிருந்தும் ரத்தம் கசிந்து கொண்டுதானிருக்கின்றது. குறிப்பாக மூன்றுவது மண்டல நாடுகளில் வறுமைக் கோட்டிற்குக் கீழ் வாழும் 80% மான தாய்மார்களின் முலைகளிலிருந்தும் ரத்தம் தான் கசிகின்றது. நடைமுறையில் கோட்டை விடுவதாகச் சமரைக் குற்றம் சாட்டிய அனிச்சா, நடைமுறையில் மூன்றுவது மண்டல நாடுகளில் வாழும் 80% மக்களின் வாழ்வை நிராகரிக்கின்றார். இது எந்தக்கோட்பாடு என்று புரியவில்லை. இதையே தான் அமெரிக்க ஏகாதிபத்தியமும் கூறுகின்றது. மேலும் அனைத்து முரண்பாடுகளுக்கும் வர்க்க



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ப்போராட்டமே தீர்வு என்றே கால்மார்க்ஸ் கூறினர். அனிச்சாவின் அகராதியில் மார்க்ஸும் வர்க்கப்போராட்டத்தைக்கூறி நடைமுறைப்பிரச்சனையில் கோட்டை விட்டவரே. மார்க்ஸ் வறுமையில் வாடியதற்கான காரணம் இச்சமூக அமைப்பை அவர் ஒருபோதும் ஆதரிக்கவில்லை. ஏகாதிபத்தியங்களிடம் கையேந்தும் தத்துவப்பிச்சைக்காரராகவும் இருக்கவில்லை. மாறாக இவ்வுலகை மாற்றும் மாபெரும் தத்துவவாதியாகவும், மனிதவாழ்வின் மகிமையை மதித்து முகம் கொடுத்தவராகவும் இருந்தார். இதன் காரணமாகவே ஜென்னியின் முலையில் ரத்தம் கசிந்தும் நீங்கள் கோரும் சுயதேவை கொலையைச் செய்யவில்லை.

6). கருச்சிதைவைக் கொலை என்று கூறும் 'சமர்' வர்க்கப்போராட்டம், புரட்சி எல்லாம் முடிந்து பொருளாதாரக் காரணிகள் சமூகமாக அமையப் போகிற சோசலிச சமுதாயத்தில் இத்தகையப் பிரச்சனைகள் வராதென்று கருதுகின்றதா?.

சோசலிச சமுதாயத்தில் புரட்சிகள் முடியுமேதவிர இவர் கூறுவது போல் வர்க்கப்போராட்டம் முடிவுக்கு வராது மாறாக அது தொடரும் என்பதே உண்மை. ஆனால் இச்சோசலிச சமுதாயத்தில் ஆணின் ஸ்தானங்களுக்காக பெண்கள் போட்டிப் போட்டு இன்றைய ஆணை ஒரு சரியான காரணி எனக்காட்ட ஒருபோதும் பெண்கள் முன்வர மாட்டார்கள். சமூகத் தேவை தவிர்ந்த, வக்கிரமான சுயதேவைகட்கு கருச்சிதைவு தேவை என்று கோரும் சமூகமற்றப் பெண் உரிமைகளைச் சரியாகப் புரிந்து செயல்படும் ஓர் ஆரோக்கியமான சமூகம் உருவாகும். குளப்பவாதிகள் தெளிவடைவார்கள்.

---


யார் புரட்சிகர மக்களின் பக்கத்தில் நிற்கிறரோ அவர் ஒரு புரட்சிவாதி ஆவார். யார் ஏகாதிபத்தியம், நிலபிரபுத்துவம், அதிகார வர்க்க முதலாளித்துவம் அகியவற்றின் பக்கத்தில் நிற்கிறரோ அவர் ஒரு எதிர்புரட்சி வாதியாவார். யார் சொல்லளவில் மாத்திரம் புரட்சிகர மக்களின் பக்கத்தில் நின்று, ஆனால் செயலளவில் வேறாக இருக்கிறரோ, அவர் சொல்லளவில் மாத்திரம் புரட்சி வாதியாவார். யார் சொல்லிலும் செயலிலும் புரட்சிகர மக்களின் பக்கத்தில் நிற்கிறரோ அவர்தான் முற்றான புரட்சிவாதியாவார்.

நன்றி – 'சீனமக்கள் அரசியல் கலந்தாலோசனை மகாநாட்டின் 1வது தேசிய கமிட்டியின் 2வது கூட்டத்தில் ஆற்றிய முடிவுரை' (23, ஜூன் 1950 மாவோ)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



www.tamilarangam.net

## மௌனத்தின் முடிவும் மரணமே

என் உணர்வுகள்
எங்கே செல்கின்றன
அன்னிய நாட்டில்
நடைப் பிணமாக நாம்
உணர்வுகளை இழந்து
இயந்திரமாக நாம்
சிந்திக்கும் என் உணர்வு
மீண்டும் எம்மண்ணை நோக்கி
சிந்திக்கும் என் உணர்வை அழிக்க
அமையும் ஒரு கூட்டம்
மண்ணில் சிந்திக்க முயன்றவன் மீது
இறுக்கப்பட்ட கட்டைகள்
மிஞ்சியது எது
மனிதப் பிணவடையே
மண்ணில் சொல்ல முடியாதை
சொல்ல நினைத்தேன்
இங்குமா மிரட்டல்
இது தான் வாழ்வா
ஒரு கணம் சிந்தித்தேன்
ஒரே ஒரு கனமே
மரணம் பயமுறுத்த கண்டேன்
மௌனத்தின் முடிவும் மரணமே
செயல் ஆற்ற புறப்பட்டேன்
எனது மரணம் வரை
அதுவே எனது சுதந்திரம்
அதுவே மக்கள் விடுதலை

— சிறி —

www.tamilarangam.net

## NLFT யின் வரலாறு தொடர்ச்சி....

### குமரன்

1983இல் மத்திய குழுவுக்கு தெரிவு செய்யப்பட முன்பே இவர் பிரதேசக் கமிட்டியில் இருந்தவர். இவர் தீவிர இயங்கு சக்தியாக செயல்பட்டவர். 1980/81 முதல் NLFT யில் வேலை செய்தவர். மார்க்சியத்தில் ஆழமான அறிவைக் கொண்டிருக்காவிட்டாலும் அனைத்து விடயங்களிலும் தீவிர விமர்சகராக இருந்தவர். சிலவேளைகளில் தன்னிச்சைப் போக்கை கடைப்பிடிப்பவர். இவர் ஒரு ஸ்தாபகர் என்ற நிலையை விட்டு இவர் ஒரு ஊழியராக எப்போதும் செயற்பட்டவர். எந்தப் பிரச்சனை மீதும் உடனடியாக விமர்சனத்தை முன்வைப்பதுடன், அமைப்பில் நெருக்கடி ஏற்படும் போது உடனடியாக முடிவுகளை எடுக்கக் கூடியவர். அமைப்பில் நெருக்கடியின் போது போராட்டங்களில் முன்னிலையில் நின்று போராடுபவர். இவர் 1987இன் ஆரம்ப காலங்களிலிருந்து படிப்படியாக ஒதுங்கிக்கொண்டவர்.

### ஜோர்ஜ்

இவர் 1980/81இற்கு முதலே NLFT யில் வேலை செய்தவர். இவர் 1983இல் மத்திய குழுவுக்கு தெரிவு செய்யப்பட முன் பிரதேசக் கமிட்டியில் இருந்தவர். இவர் மார்க்சியத்தில் ஆழமான அறிவை கொண்டிருக்காவிட்டாலும், ஒரு ஸ்தாபகர் என்ற நிலைக்கப்பால் ஒரு ஊழியராகவே கூடுதலாக செயற்பட முனைந்தவர். இவர் 1983 இல் மத்திய குழுவுக்குத் தெரிவு செய்ப்பபட்டவுடன் மத்திய குழு செயலாளராக தெரிவு செய்யப்பட்டார். இதற்கான தகுதியில்லாமலேயே இத்தெரிவு நிகழ்த்தப்பட்டது. இதைச் செய்வதில் விசு, ராகவன் என்ன நோக்கு நிலையில் நின்று செய்தார்கள் என்பதை கட்டுரையின் தொடர்ச்சியில் ஆராய்வோம். இவர் எப்போதும் நெருக்கடியின் போது முடிவுகள் எடுப்பதில் தயக்கம் காட்டுவார். மத்திய குழு அல்லது மத்திய குழுவில் வேறொருவரின் துணையுடனேயே எப்போதும் முடிவெடுப்பவர். அவர் தனக்கு என்ற வேலையில் தீவிர இயங்கு சக்தியாக செயற்பட்டவர். இவர் 1987இன் ஆரம்பத்திலிருந்து படிப்படியாக அமைப்பிலிருந்து விலகினர்.

### சண்முகம்

இவர் 1984இல் NLFT யின் மத்திய குழுவுக்குத் தெரிவு செய்யப்பட்டவர். இவர் 1984இன் ஆரம்பத்தில் அமைப்பில் இணைந்து கொண்டவர். இவர் முன்பு தமிழ் புலிகளின் (LTTE) உறுப்பினராகவிருந்தவர். அவ்வமைப்பின் ஆரம்பகால உறுப்பினர். இவர் இந்தியாவில் NLFT யின் நிதி இராணுவப் பொறுப்பாளராக இருந்தவர்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இவர் மார்க்சிய அறிவை பெரிதாகக் கொண்டிருக்காவிட்டாலும், தீவிர விமர்சகராக இருந்தவர். தீவிர இயங்கும் தன்மை கொண்டவர் ஊழியர்களின்பால் மிகுந்த அக்கறையுடைய இவர் அமைப்பை நிர்வகிக்கும் தன்மையைக் கொண்டிருந்தார். இவர் NLFT யில் இணைந்த பின் ஈழத்தில் வேலை செய்யாதமையினால் இவரின் அரசியல் வளர்ச்சி மட்டுப்படுத்தப்பட்டு விட்டது. இவர் 1988இல் அமைப்பிலிருந்து விலகினார்.

1983 இல் மேதினம் NLFT யினால் கிளிநொச்சியில் நடத்தப்பட்டது இது கிளிநொச்சி பொலிஸ் நிலையம் முன்பாக நடாத்தப்பட்டது. இக்கூட்டம் அன்று பொலிஸினால் சுற்றி வளைக்கப்பட்டு கடுமையான வாக்குவாதத்தைத் தொடர்ந்து கூட்டம் நடத்த அனுமதிக்கப்பட்டது.

1983இற்கு முந்திய காலத்திலிருந்தே மாணவர் அமைப்பு, பெண்கள் அமைப்பு என்பன கட்டப்பட்டன. இவற்றைக் கட்டுவதில் NLFT நேரடியாகவே செயற்பட்டது. இவ்வமைப்புக்களை கட்டுவதில் எந்தவொரு திட்டத்தையும் கொண்டிருக்கவில்லை. இப்படி திட்டமின்றி உருவான மாணவர் அமைப்பில் பலர் பின்னால் NLFT க்கு வேலை செய்தனர். தனியொரு பகுதியாக மாணவர் அமைப்பு இல்லாமையினால் அத்தொடர்புகள் படிப்படியாக அறுபட்டுப் போய்விட்டது. இன்னொரு பகுதியினர் பல்வேறு இயக்கங்களில் இணைந்தும் கொண்டனர் NLFT யில் இணைந்த மாணவர்கள் பின் NLFT உருவாக்கிய 'புதிய ஜனநாயக மாணவரமைப்'பில் வேலை செய்தனர். பாடசாலைகளை முடித்தவர்கள் NLFT யின் இளைஞரணியான 'முற்போக்கு இளைஞரணி' யில் இணைந்து செயற்பட்டனர். உருவாகிய பெண்கள் அமைப்பு பெண்விடுதலை தொடர்பான எந்தவொரு திட்டத்தையும் கொண்டிருக்கவில்லை. பெண்கள் கொண்டவொரு அமைப்பு வடிவத்தை மட்டும் கொண்டு பெண்கள் இணைக்கப்பட்டனர். இப்பெண்கள் அமைப்பு அரசியலறிவு எதையும் பெரிதாகக் கொண்டிராத நிலையில் அவ்வமைப்பை பிரபாவே கூடுதலாக வகுப்புக்களை மற்றும் நெறிப்படுத்தல்களைச் செய்தார். இதில் மூன்று, நான்கு பெண்கள் ஓரளவு வளர்ச்சி நிலையை அடைந்தனர். பின் இவர்களே யாழ் மாவட்டத்தின் பல பாகங்களில் பெண்கள் அமைப்புகளை உருவாக்கினர். அதேநேரம் 'சக்தி' என்ற ஒரு பெண்கள் சஞ்சிகையும் வெளியிடப்பட்டது. இது ஒரு இதழ் மட்டுமே வெளிவந்தது. இச்சஞ்சிகையில் வெளிவந்த கட்டுரைகளில் பெரும்பாலானவை ஆண்களாலேயே எழுதப்பட்டது. வடமராட்சியில் தெங்குப் பனம்பொருள் கூட்டுஸ்தாபனத்தில் வேலை செய்த பெண்கள் மத்தியில் ஒரு பெண்களமைப்பு உருவாக்கப்பட்டது. இவ்வமைப்பில் நடந்த ஒரு பொதுக்கூட்டத்தில் அரசியல் கதைக்க முற்பட்ட போது கூக்குரலிட்டுத் தடுக்கப்பட்டது. இந்நிகழ்வைத் தொடர்ந்து பெண்களமைப்பில் அரசியல் தரம் பற்றியும், திட்டம் தொடர்பாகவும் கேள்விகள் எழுந்தது. இப்படியான பெண்களமைப்பின் அவசியமின்மையைச் சுட்டிக்காட்டியதைத் தொடர்ந்து அரசியலில் முன்னேறிய பெண்கள் மட்டும் தொடர்ந்தும் அமைப்புட



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ன் இயங்கினர். உருவாகிய பெண்களமைப்பு கைவிடப்பட்டது. அது இயல்பாக செயலிழந்து போனது. எஞ்சிய பெண்கள்(10ற்குட்பட்ட தொடர்ந்து NLFT யுடன் இணைந்து வேலை செய்தனர். பின்னால் இவர்கள் ஒரு பெண்களமைப்பை உருவாக்கவில்லை. NLFT யும் உருவாக்கிக் கொடுக்கவில்லை. ஆனால் அமைப்பில் மத்திய குழுவில் இருந்த சிலர் தனியான பெண்களமைப்பின் தேவையை உணர்ந்தாலும் நாட்டில் தொடர்ந்து ஏற்பட்ட நெருக்கடிகள் தனியான பெண்களமைப்பின் உருவாக்கத்திற்கு தடையாகவும் இருந்தது.

1983இல் NLFT யின் உருவாக்கத்தின் முன்பே பகிரங்கமாக வெளியிடப்பட முடியாத கருத்துக்களைத் தாங்கிய ஒரு பத்திரிகை வெளிவந்தது. அப்பத்திரிகையின் பெயர் "பயணம்" ஆகும். அது NLFT யினுலேயே வெளியிடப்பட்டது. இப்பத்திரிகை NLFT க்குள்ளும், வெளியிலும் முன்னேறிய சக்திகளுக்கு விநியோகிக்கப்பட்டது இப்பத்திரிகைகளில் 4 இதழ்கள் மட்டுமே ளிவந்தது. 4ம் இதழ் வெளியிடப்படாமல் முற்றாக எரிக்கப்பட்டது. இவ்விதழ்(4ம் இதழ்) அமைப்பிற்கு வெளியிலிருந்த சேரனினுல் சேகுவாராவின் போராட்டத்தை ஆதரித்து கட்டுரை எழுதப்பட்டது. இவை தனிநபர் பயங்கரவாதத்தை நியாயப்படுத்துவதாக இருந்தது சுட்டிக்காட்டப்பட்டது. கியூபா புரட்சி தனிநபர் பயங்கரவாதத்தின் முலம் பெற்றுக் கொண்டதைநியாயப்படுத்துவது, ஈழத்தில் தனிநபர் பயங்கரவாதத்தை, அது சார்ந்த குழுக்களை அங்கீகரிப்பதில் இட்டுச் செல்லும் என்ற விமர்சனத்தினூடாக "பயணம்" 4ம் இதழ் எரிக்கப்பட்டது.

1983இல் மகாநாட்டைத் தொடர்ந்து ஒரு பத்திரிகை வெளியிடப்படுவதென முடிவெடுக்கப்பட்டதையடுத்து "இலக்கு" எனும் இதழ் இந்தியாவிலிருந்து வெளிவந்தது. இவ்விதழ்கள் 1986இல் 6 இதழ்களும் 1988இல் ஓரிதழும் வெளிவந்தது. இவ்விதழ்களின் கட்டுரைகள் ஒரு சில இலங்கையிலிருந்து எழுதப்பட்டாலும், பெரும்பாலானவை இந்தியாவிலிருந்து விசுவினுல் எழுதப்பட்டவையே. விசுவின் கட்டுரைகள் தொடர்பாக அமைப்புக்கு முரண்பாடுகள் கூட இருந்தன. "இலக்கு" இதழ்கள் விற்பனைக்கென்று அடிக்கப்பட்ட போதிலும் நடைமுறையில் இலவசமாகவே விநியோகிக்கப்பட்டது. 1984இல் இப்பத்திரிகைக்கப்பால் இலங்கையிலிருந்து செய்திகளைக் கூடுதலாகக் கொண்ட "முன்னணிச்செய்தி" எனும் பத்திரிகைவெளியிடப்பட்டது. இப்பத்திரிகையை அமைப்பினுல் வெளியிடும் பொறுப்பை சிறீ என்பவர் கொண்டிருந்தார். இப்பத்திரிகையில் 7 இதழ்கள் வெளிவந்தன. இவ்விதழ்கள் ரோனியோ செய்யப்பட்டே வெளியிடப்பட்டது. பின் 1986இன் ஆரம்பத்தில் NLFT க்குள்ளிருந்த கட்சியினுல் "லெனினிஸம்" எனஒரு பத்திரிகை வெளியிடப்பட்டது. இப்பத்திரிகையில் முழுமையாக அரசியல் கட்டுரைகளையே தாங்கி ஒரேயொரு இதழ் மட்டுமே வெளிவந்தது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

1983 முடிந்தவுடன் விசு, சிறீ உட்பட நான்கு பேர் இந்தியா அனுப்பப்பட்டனர். மற்றைய இருவரும் இராணுவத்தைச் சேர்ந்தோர் அவர்கள் இருவரும் ஆயுதம் சேகரித்தல், பயிற்சி முகாம் தயாரித்தல், . . . . . போன்ற வேலைகளுக்காக அனுப்பப்பட்டனர். சிறீ இந்தியாவில் பகிரங்க தொடர்புகளுக்கும், பகிரங்க வேலைக்கு என அனுப்பப்பட்டார். இவர்கள் இந்தியா செல்வதற்கு முன்பே விசு அங்கு நீண்டகாலம் இருந்தவர். இவர்கள் நால்வரும் நெடுந்தீவிலிருந்து வள்ளம் மூலம் இந்தியா செல்ல நெடுந்தீவு சென்ற போது நால்வரும் செல்வதற்கு வள்ளம் கிடைக்காமையினால் விசுவும், சுரேனும் முதலில் இந்தியா சென்றனர். சிறீயும், ரமேஸும் ஒரு வாரத்தின் பின்பே வள்ளம் மூலம் சென்றனர். இவர்கள் சென்ற வள்ளம் இடைநடுவில் பழுதுபட்டதனால் 4,5 மணிநேர தாமதத்தின் பின்பு இராமேஸ்வரம் கரையில் இறக்கப்பட்டனர். இவர்களின் உடமைகள் யாவும் அவ்வூரிலிருந்த சிலரால் வழிமறித்துப் பறிக்கப்பட்டன.

இந்தியாவில் விசுவுடன் இணைந்து கொண்ட இவர்கள் விசுவின் இந்திய நண்பர் ஒருவரின் வீட்டில் தங்கினர். அவருடன் மேலும் இருவர் இருந்தனர். அந்நண்பரின் பொருளாதார நெருக்கடிக்குள் நாம் அவரைச் சார்ந்திருந்தோம். எம் கைகளிலும் பெரிதாகப் பணம் இருக்கவில்லை. நாம் சாப்பிடுவதற்குக் கூட பணமில்லாத நிலையில் அவர்கள் சமைப்பதில் இரவில் தரும் உணவுடன் ஒரு மாதம் ஓடியது. எமது அடுத்த கட்ட வேலைகளுக்கு பணம் இலங்கையிலிருந்து (ஒரு கொள்ளையினூடாகவே) எதிர்பார்க்கப்பட்டது. அதாவது குறித்த திகதிக்கு முன் பணம் அனுப்புவதாக கூறிய உத்தர்வாதத்தை மட்டும் கொண்டு சில அடிகள் முன்னெடுக்கப்பட்டன. ஆனால் இந்தியாவிலிருந்தோர் பயிற்சி முகாம் போடுவதற்கென்று சில இடங்களைக் கூட சென்று பார்த்தனர். அங்கு செல்வதற்கா கையிலிருந்த அனைத்து பொருட்களும் விற்கப்பட்டன. ஊட்டி வரை சென்று சில காடுகள் தொடர்பாக ஆராயப்பட்டது. அங்கு விசுவுக்கு நண்பர்கள் பலர் இருந்தனர். இப்படிப் பார்க்கப்பட்ட காடு தொடர்பாக இராணுவம் சார்பாக வந்த ரமேஸ் 'இவ்வளவு தூரம் நடந்து சென்று பயிற்சி எடுக்க வேண்டுமா? கால் உளையுது.' என்று சொல்லி ஒரு கடினமான போராட்டத்திற்கு தயாரின்மையை நடைமுறையில் காட்டினார். இவர் ஒரு கமியூனிஸ்ட் கட்சி உறுப்பினருமாவார். இவரின் இச்செயற்பாடு தொர்டர்பாக விசு, சிறீ, சுரேன் ஆகியோரால் விமர்சிக்கப்பட்டது.

மேலும், விசு 'நக்சல்பாரி குழு'வான மக்கள் யுத்தக்குழுவுடன் தொடர்பு கொண்டிருந்தார். அவர்கள் மூலம் ஒரு வீடு எடுக்கப்பட்டு நால்வரும் அவ்வீட்டில் தங்கினர். இக்காலத்தில் மக்கள் குழுவைச் சேர்ந்த ஒருவர் NLFT யுடன் அடிக்கடி தொடர்பு கொண்டு விவாதித்தார். இந்நிலையில் முன்பு புலிகளிலிருந்த சண்முகம் என்பவருடனும் தொடர்ந்து விவாதித்தோம். அதைத் தொடர்ந்து அவர் NLFT யுடன் இணைந்து வேலை செய்ய முன் வந்தார். அங்கு

www.tamilarangam.net

ஏற்பட்ட பண நெருக்கடியைத் தொடர்ந்து இலங்கையிலிருந்து பணம் வராமையால் விசு நாடு திரும்ப முடிவு செய்தார். பணம் நெருக்கடியேற்படின் சண்முகத்திடம் கோரும்படி கூறிச் சென்றார். விசு நாடு திரும்பும் போது சிறீயையும் கூட்டிச் சென்றார். விசு, சிறீ நாடு திரும்பிய போது அங்கு எக்கொள் கைகளும் செய்யப்பட்டு இருக்க வில்லை. அமைப்பு மொத்தத்தில் நிதி நெருக்கடிக்குள் மூழ்கியிருந்தது.

விசு, சிறீ நாடு திரும்பியவுடன் கூட்டப்பட்ட மத்திய குழுக் கூட்டத்தில் மத்திய குழுவுக்கப்பால் ராகவனும், கலந்து கொண்டார். நிதிநெருக்கடியைத் தீர்க்க மிக விரைவில் கொள்கைகூடாகத் தீர்ப்பதாகக் கூறி உத்தரவாதம் அளித்தனர். மேலும் விசுவின் கருத்துக்க ளைத் தொடர்ந்து இந்தியாவிற்கு இராணுவப்பயிற்சி தொடங்கவென ஆட்களை இந்தியா அனுப்புவதென முடிவெடுக்கப்பட்டது. இராணுவப்பயிற்சி தொடர்பாக இந்தியாவிலிருந்து வந்த சிறீ அக்கூட்டத்தில் பெரிதாகக் கருத்துச் சொல்லாமல் அங்கீகரித்தார். மேலும் அங்கிருந்த உணவுப்பிரச்சனை, இடப்பிரச்சனை, மற்றும் நிதியின்மை போன்ற நெருக்கடிகள் தொடர்பாகவும் கருத்துச் சொல்ல தயங்கினார். சிறீ போன்றோர் விசு, ராகவன் போன்றோரின் வாதத் திறமைக்கெதிராக ஒரு கருத்தைக் கூட சொல்லி விடும் தகுதி அவர்களுக்கு இருக்க வில்லை. விசு இந்தியாவிலிருந்து ஒரு சில ஆயுதங்களை பணம் அனுப்பின் எடுத்துக் கொடுத்து விடுவதாக உத்தரவாதம் வழங்கினார். அதையடுத்து ரகு என்பவரை அனுப்புவதாக முடிவெடுக்கப்பட்டது. இதைத்தொடர்ந்து ரகு, மேலும் ஐவர் பயிற்சிக்காக புதிதாக சிறீயுடன் அனுப்பப்பட்டனர்.

இவர்கள் இந்தியா செல்வதற்கான வள்ளம் எமது அம்பிலிருந்த தவம் என்பவர் ஒழுங்கு செய்தார். இவர் சிறிய மீன்பிடி பிளாஸ்டிக் போட் ஒன்றை அவரின் நண்பரிடம் மீன் பிடிக்க செல்லவெனச் சொல்லி இரவல் வாங்கினார். அவ்வள்ளத்தின் எஞ்சின் வலு 15 குதிரைவலுவை மட்டுமே கொண்டிருந்தது. இச்செயற்பாட்டிற்குப் பொறுப்பாக இராணுவக்குழுவே இருந்தது. குறித்த நடவடிக்கையில் முன் அனுபவமற்ற நிலையில் இதில் அனுப்பவிருந்த தவம், மோகன் (இவர்கள் இராணுவப்பிரிவில் இருந்தவர்கள்.) ஆகியோரே வள்ளத்தை ஒழுங்கு செய்தனர். வள்ளத்தில் தவத்துடன் வேறொருவர் ஓட்டியாக வந்தார். சில புத்தகப் பார்சல்களுடன் (மாவோவின் நூல் திரட்டுக்கள். இவை பின் மக்கள் யுத்தக்குழுவுக்கு கொடுக்கப்பட்டது.) புறப்பட்ட வள்ளம் இடைநடுவில் எஞ்சின் கோளாறுக்குள்ளாகி நடுக்கடலில் கடும் மழைக்கும் காற்றுக்கும் மத்தியில் நீண்டநேரம் தத்தளித்தது. நீண்ட நேர முயற்சியின் பின் வள்ளம் மீண்டும் ஓடத் தொடங்கியது. வள்ளம் புறப்பட்டு இரு மணித்தியாலங்களின் பின் வள்ளம் இலங்கையை நோக்கி வருவதை காங்கேசன்துறை வெளிச்சக் கோபுரத்தைக் கொண்டு அறியமுடிந்தது. பின் மீண்டும் வள்ளம் திருப்பப்பட்டு இந்தியா நோக்கி செலுத்தப்பட்டது. விடியற்கா

 17பக்கம் பார்க்கவும் ---

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தேசிய சக்திகள் தொடர்பான விவாதம்.

சமர், தூண்டில், உயிர்ப்பு, மனிதம் இதழ்களில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் தேசிய சக்திகள் தொடர்பான விவாதத்தைத் தொடர்ந்து, கனடாவிலிருந்து வெளிவரும் தேடல் இதழில் தேசிய சக்திகள் தொடர்பாக கட்டுரை வெளிவந்துள்ளது. தேடல் இதழ் 10ல் சி. சிவசேகரம் எழுதிய கட்டுரையை நாம் விமர்சனத்திற்கு முன்னெடுக்கும் அதே நேரம் தேடல் இதழ் 10க்கு முந்திய இதழ்கள் எமக்கு கிடையாமையால் அதில் இது தொடர்பாக விவாதம் நடந்ததாவென தெரியாமல் உள்ளது.

"1970களிலும், 1980களிலும் உலக நிலைமைகள் இளைஞர் மத்தியில் மார்க்சிச, சோசலிச சிந்தனைகள் பற்றிய அக்கறையை ஓரளவு தூண்டின. பழைய அரசியல் தலைமைகள் வெற்றிகரமாகத் தமிழரின் பாராளுமன்ற அரசியலிலிருந்து ஒதுங்கிய இடதுசாரி சிந்தனைகள் 1970களுக்குப் பின் இளைஞர்களைக் கவர்ந்த காரணங்கள் நாட்டின் உள்ளேயும் இருந்தன. தமிழ் தேசிய வாதத் தலைமையின் வலதுசாரி அரசியலின் இயலாமையும் 1971 ஏப்பிரல் கிளர்ச்சியும் 1970களுக்கூடாக படிப்படியாக விரிவடைந்து 1977க்குப் பின் உக்கிரமடைந்த அரசு ஒடுக்குமுறையும் வலதுசாரி அரசாங்கத்தின் கீழ் தமிழர் முன்னெப்போதும் கண்டிராத இனவாத வன்முறைக்கு முகம் கொடுக்க நேர்ந்தமையும் இடதுசாரி முனைப்புக்கட்கு ஆதாரமாக இருந்தன." என்ற வாதத்தில் 1970களில் வளர்ச்சியடைந்த J.V.P மார்க்சிசத்தை சொல்லிக் கொண்டாலும், அவர்கள் எப்போதும் அடிப்படையில் மார்க்சிசத்தை ஏற்றுக்கொள்ளவில்லை. நாட்டில் ஏற்பட்டிருந்த பொருளாதார நெருக்கடியும், 1970ளில் எழுந்த உலகப் பொருளாதார நெருக்கடியும் இளைஞர்களை புரட்சியின் பக்கத்திற்கு தள்ளியது. புரட்சியை விரும்பிய இளைஞர்களை J.V.Pயும், அதே நேரம் சிறிமாவோ தலைமையிலிருந்த இடதுசாரிகளும் ஒரு புரட்சி நடைபெறாமல் தடுக்கும் வகையில் இடதுசாரிக் கருத்துக்களை உச்சரித்தபடி சுரண்டும் வர்க்கங்களைப் பாதுகத்தனர் முயன்றனர். "மற்றும் பழைய அரசியல் தலைமைகள் வெற்றிகரமாகத் தமிழரின் பாராளுமன்ற அரசியலிலிருந்து ஒதுங்கிய இடதுசாரிச் சிந்தனைகள்" என்ற வாதம் அடிப்படையில் தவறானது. 1970க்கு பின் தமிழ் அரசியல் தலைமைகளை இடதுசாரிகள் ஒதுக்கிறார்கள். எனின் யாரை?. 1970க்குப் பின் தமிழ்த் தலைமைகள் தீவிரமாக முன்பைவிட ஒன்றிணைந்து பலம் பெற்றனர். 1977களில் தேர்தல் வெற்றி இதை தீர்மானகரமாக பறைசாற்றுகிறது. 1980ளில் பாராளுமன்ற அரசியல் தலைமையை இடதுசாரிகள் ஒதுக்கவில்லை, மாறாக 1977 தேர்தலில் எந்த கோசத்தை முன் வைத்து வென்றார்களோ அதே கோசத்தை (வலதுசாரிகள்) முன்னெடுத்த ஆயுதம்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஏந்தியோரே அவர்களை ஒடுக்கினர். 1977லின் பின் தீவிரமடைந்த வன்முறைக்கு மூலகாரணமாக(சுரண்டல் பேர்வழிகள்) 1970 லில் ஆட்சிக்கு வந்த சிறிமாவோவுடன் இருந்த இடதுசாரிகளே பிரதானமாகவும் இருந்தனர். இடதுசாரி ஆட்சிக்காலத்தில் தரப்படுத்தலை அமுலுக்குகொண்டு வந்ததுடன் தமிழ் மக்களின் பிரச்சனையை இனவாத வன்முறைக்கூடாக அடக்கினர்.

1970களில் வலதுசாரிகளின் இயலாமையெனக் குறிப்பிடும் கட்டுரையாளர் 1970இன் பின் வந்த இடதுசாரிகள் மக்களின் பிரச்சனையைத் தீர்த்ததாகப் பறை சாற்றுகிறர். இடதுகள் கூட இயலாமையால் தான் தேசியப் பிரச்சனையை முன் தள்ளி தமது இயலாமையை வெளிக்காட்டினர். அத்துடன் 1977இல் இடதுசாரிகளின் இயலாமை மீண்டும் வலதுசாரிகளை ஆட்சியில் ஏற்றினர். எனவே கட்டுரையாளர் 1970க்கும் 1977க்குமிடையிலான அரசை(சுரண்டும் வர்க்கத்தை) நியாயப்படுத்துகின்றர்.

"இன்று புலிகள் அரசாங்கத்தின் இன ஒடுக்கல் யுத்தத்திற்கு முகம் கொடுக்கும் போராட்ட சக்தியாக உள்ளனர். ஆயினும் நிலைமை மாறக்கூடியது." என்ற வாதத்திலோ, தொடர்ச்சியான விவாதத்திலோ முக்கியமான ஒன்றைப்பற்றி ஆராயத் தவறியுள்ளார். வர்க்க நோக்குப் பற்றி சொல்லும் கட்டுரையாளர் தேசியத்தையும், பாசிசத்தையும்,வர்க்கத்துடன் ஒப்பிடத்தவறுவது ஏன்?. வர்க்கத் தன்மையுடன் ஒடுக்குமுறை மாறுபாட்டு தன்மையை ... பார்க்காமல் விடுவதன் ஊடாக இக்கட்டுரை தவறனதாகவுள்ளது. இது வர்க்கத் தன்மையிலிருந்து அழுக்கப்பட்டுமுள்ளது. புலிகள் ஏன் மறுக்கிறர்கள் ஏன் போராடுகிறர்கள் எனபது அவர்களின் வர்க்கத்தன்மையுடன் சம்பந்தப்பட்டது. அதைக் கட்டுரையாளர் சொல்லத் தவறி, தனது அரசியல் பார்வை தெளிவாக வாசகர்களுக்கு இனம் காட்ட தவறுகிறர்.

"இவ்வாறன பிறழ்வுகள் ஒரு விடுதலை இயக்கத்தின் முற்போக்கான தன்மையின் மழுதலிப்பாகும். இவற்றினூடு அந்த இயக்கத்தின் போராட்டம் தடம் புரளலாம். ஆயினும் இவை ஒரு இயக்கத்தின் தேசியத்தன்மையை மாற்றிவிடுவதில்லை. தேசிய முதலாளித்துவ வர்க்கம் ஒன்று எவ்வாறு மாறுபடும் தேசிய, சர்வதேசிய நிலவரங்கட்கேற்ப ஏகாதிபத்தியத்துடன் தனது நாட்டின் ஒடுக்கப்பட்ட வர்க்கங்களுடன் தனது உறவை மாற்றிக் கொள்கிறதோ அவ்வாறே பாட்டாளி வர்க்கத் தலைமையற்ற ஒவ்வொரு தேசிய விடுதலை இயக்கமும் ஊசலாட்டத்திற்கு உள்ளாகிறது." இதில் தேசிய முதலாளி வர்க்கம் ஒன்று எனச் சொல்லி அதைப் பொதுப்படையாக அரசு, மற்றும் விடுதலை இயக்கங்களுக்கு பொதுவாகப் பொருத்த முயன்றுள்ளார். இவ்விவாதம் புலிகளை தேசிய முதலாளிகள் எனச் சொன்னதாகவும் வாதிடலாம். சொல்லவில்லை எனவும் வாதிடலாம்

www.tamilarangam.net

அது அல்லது இது எனத் தேவைக்கு வசதியாக வாதிடும் வகையில் அமைந்ததே. ஏகாதிபத்தியத்தின் உறவுடன் ''.எப்போ தாவது அரசோ, விடுதலை இயக்கங்களோ, ஊசலாட்டத்திற்கும், ஒடுக்கும் வர்க்கத்துடன் உறவை மாற்றுகின்றதோ அன்றே குறித்த சக்தி தேசிய முதலாளித்துவம் என்ற நிலையிலிருந்து தரகு முதலாளிகளாக மாறிவிடுகின்றனர். இச்செயற்பாடு பற்றி ஒரு புரட்சியில் எதிரி பற்றிய விடயத்தை தெளிவாக சுட்டிக்காட்டப்படாவிடின் பாரிய தவறு இழைக்கப்படும். குறித்த இச்சக்திகள் போராட்டத்தில் எதிரி நிலைக்கு மாறிவிடுகின்றனர். இவர்கள் கூட '' தேசியத்தை முன்னெடுக்க முடியும், கிட்லர், காந்தி, அமிர்தலிங்கம்.....

என நீண்ட வரலாற்றில் அனைவரும் தேசியத்தை உயர்த்திப் பிடித்தனர். ஆனால் அவர்கள் ஏகாதிபத்தியத்தைக் காப்பாற்றச் சேவை செய்யவே முயன்றனர். இவர்கள் எப்போதும் ஒடுக்கும் வர்க்கத்திற்கு எதிரியே. தேசியத்தை முன்னெடுக்கிறார்கள் என்ற ஒரு வரையறையை மட்டும் கொண்டு இவர்களை தேசிய சக்தியாகப் பார்க்கக்கூடாது. இவர்களின் வர்க்கமூலம், அதிலிருந்து .. அவர்களின் நோக்குக்களை ஆராய்வதன் மூலம், ஆரம்பம் முதலே அம்பலப்படுத்தியழிக்க வேண்டும்.

"திராவிடப் பிரிவினை தமிழ் நாட்டின் சுயாட்சி போன்ற .கொள்கைகளைக் கைவிட்டதால் தி.மு.க போன்ற சக்திகள் தேசிய சக்திகளாக இல்லாமல் போய் விடவில்லை." என்ற விவாதத்தில் மேற்குறிப்பிட்டது போல் சுயாட்சி கோரினார் என்ற ஒரு காரணம் தேசிய சக்தியாக பார்க்க போதுமானதல்ல. அக்கட்சியின் வர்க்கமூலத்திலிருந்தே தேசிய சக்தியா என ஆராயமுடியும். சுயாட்சியைக் கை விட்ட பின்பும் தி.மு.க வை இன்று தேசியசக்தியாகக் காட்ட முனையும் சிவசேகரம் வர்கக அடிப்படையிலிருந்து 'விலகிய நிலையில் வெளிவந்த கருத்துக்களே. தி.மு.க ஆட்சி ஏறிய காலத்தில் கூட அவர்கள் தேசிய நோக்கில் சமுதாயத்தை 'மாற்றவில்லை. இந்தியாவிலுள்ள தமிழ் நாட்டில் ஆட்சி . ஆட்சியதிகாரத்திலுள்ள வர்க்கமான தரகு முதலாளித்துவ, நிலப்பிரபுத்துவத்திற்குச் சேவை செய்வதில் சிறந்த பிரதிநிதிகளாகவே இருந்தனர். அவர்கள் கூட பெரும் நிலப்பிரபுகளாகவும், தரகு முதலாளிகளாகவுமே உள்ளனர். அவர்களைத் தேசியவாதிகள் எனச் சொல்ல வரும் சிவசேகரம் ஏதேயோ நியாயப்படுத்த முயல்கின்றார்.

"இன்று விடுதலைப்புலிகளின் வர்க்கச் சார்பு பற்றிய .கேள்வியே நமக்கு முக்கியமானது. அவர்களது நேச சக்தி யார், எதிரிகள் யார் என்பதை வர்கக நலன்களே தீர்மானிப்பன." புலிகளின் வர்க்கத்தைப் பற்றி குறிப்பிட்டு கேள்வி கேட்பதுடன் விட்டுவிடுவதால் "தேசிய முதலாளித்துவ வர்க்கம் ஒன்று" என்ற ..சிவசேகரம் சொன்ன வரையறை புலிக்குப் பொருந்தாது எனக் கொள்ளலாம். புலிகளின் வர்க்கத்தைச் சுட்டிக்காட்டாமல் புலிகளின் தேசிய .தன்

www.tamilarangam.net

மை தொடர்பாக, தேசிய சக்திகளாக இனம் காணப் புறப்பட்ட சிவசேகரம் வர்க்க நோக்கிலிருந்து தேசிய சக்தியெனச் சொல்லாமை புலப்படுகிறது. இதன் பின் அவர்களின் நேசசக்திகள் எதிரிகள் பற்றி கதைக்க முற்படும் சிவசேகரம் புலிகளின் தத்துவவாதியாக நின்று ஆராய முற்படுகிறார்.

"அவர்களை (புலிகளை) ஆதரிப்பதற்கோ, எதிர்ப்பதற்கோ அவர்கள் தேசிய சக்தியா, இல்லையா என்ற கேள்வியை மட்டும் நாம் பயன்படுத்த முடியாது". இதில் "முடியாதெனின்" எதை வைத்துத் தீர்மானிப்பது. இதை சொல்லாமல் நழுவி விடும் சிவசேகரம் "முடியாது" எனச் சொல்லும் முறை விமர்சகர்களுக்கோ, எழுத்தாளர்களுக்கோ உரிய பண்பல்ல. புலிகளின் வர்க்கத்தில் இருந்தே தேசிய சக்தியா என முடிவுக்கு வரவேண்டும். இராணுவத்திற்கெதிராகப் போராடுகிறார்கள் என்ற ஒரு எடுகோளிலிருந்து முடிவுக்கு வர முடியாது. ஆனால் வர்க்க மூலத்திலிருந்து ஒரு சக்தியை தேசிய சக்தி என அறிந்து கொண்டால் அவர்கள் போராட்டத்தை ஆதரிக்கவேண்டும்.

"விடுதலைப்புலிகள் தேசிய சக்திகள்ல்ல என்போர் அவர்களைப் பாசிச சக்திகள் என்று அழைப்பதைக் கேட்டிருக்கிறோம். பாசிசம் என்பது தேசிய வாதத்தின் மிகவும் கொடூரமான வடிவமாக இருக்கையில் தேசிய சக்திகள் இல்லாதொரு இயக்கம் பாசிச சக்தியாக எவ்வாறு விருத்தியடைய முடியும்?" இவ்விவாதம் தேசிய சக்திகளை நிறுவும் நோக்கில் பாசிசம் தேசிய சக்திகளுக்கு மட்டும் உரிய பண்பென வாதிட முயல்கின்றனர். பாசிசம் என்பது தேசியத்தை முன்னெடுப்பவர்களும், தேசியத்தை முன்னெடுக்காதவர்களும் கூட பயன்படுத்த முடியும். தேசியத்தை முன்னெடுக்கும் சக்திகளுக்கெதிராக செயற்படும் அரசுகளும் பாசிசத்தையே பயன் படுத்துவதைப் பார்க்க முடிகிறது. இதை வியட்நாம், சீனு, இலங்கை.. என்று அனைத்து அரசுகளும் நாட்டில் எழும் தேசிய எழுச்சியைப் பாசிசத்தைக் கொண்டு அடக்குகிறது. எனவே தேசியத்தின் குணங்குறிகள் பாசிசமல்ல. பாசிசத்தை எந்த சக்தியும் கையாளும் எனவே பாசிசம் என்ற சொல்லை சிவசேகரமே ஆழமான அறிவில் நின்று சொன்னதாகத் தெரியவில்லை. தேச விடுதலைப் போராட்டம் தீவிரமடையும் நாடுகளில் அவ்வரசுக்கள் பாசிச அடக்குமுறையை மக்கள் மீது ஏவுகின்றனர்.

"பாசிசவாதி என்பது வசைச் சொல்லாக" பயன்படுத்துவதாகச் சொல்லும் சிவசேகரம் "அடாவடித்தனமும், எதேச்சையதிகாரமும் மட்டுமே பாசிசத்தின் அடையாளங்களாயின்" என்று கேட்பதனூடாக இதற்கப்பால் பாசிசத்தை இனங்காண என்ன வரையறையை முன்வைக்க முனைகின்றார். அது பற்றி விட்டுவிடும் சிவசேகரம் தம்முன்னுள்ள சக இயக்கங்களின் மோதலை காட்ட முயல்கின்றார். இயக்

www.tamilarangam.net

கங்களுக்கிடையிலான மோதல் என்பது ஒரு வர்க்க நலன் சார்ந்ததே. பாசிசம் தொடர்பானதல்ல. பாசிசம் என்பது ஒரு இயக்கத்தின், அரசின் பண்பாகவே இருக்கும். பாசிசவாதி என்பது வகைச் சொல்லல்ல. அதுவொரு சக்தியின் செயற்பாட்டை வகைப்படுத்தும் வகையில் அமைந்ததே.

"ஸ்டாலின்வாதி, ரொஸ்க்கிவாதி, குட்டிப்பூர்சுவா போன்ற பதங்கள் எவ்வாறு எதிரிகளை மட்டும் தட்டும் நோக்குடன் மட்டுமே பயன்படுகின்றனவோ" என்ற வாதத்தில் "மட்டுமே" பயன்படுத்தப்படுகிறது எனின் சரியாகப் பயன்படுகிறது என்பதை ஏற்றுக்கொள்கிறார். அப்படியிருக்க பொதுப்படையாக எதிரியை மட்டம் தட்டப் பயன்படுத்தப்படுகிறது என்று சொல்லி குட்டிப்பூர்சுவா கருத்துக்களை வெளியிடுபவர்களை பாதுகாக்க முற்படுகின்றார். ஸ்டாலினிஸவாதி என்ற கருத்துக்கள் எடுப்பின் அவர்கள் ஒவ்வொருவரும் தனியான தத்துவத்தை கொண்டிருந்தவரென அழைக்கப்படலாம். ஸ்டாலின் அப்படித் தனியான தத்துவத்தை மார்க்சிசத்திலிருந்து வேறுபட்டுக் கொண்டிருக்கவில்லையென நாம் கருதுகின்றோம். அந்த வகையில் ஸ்டாலினிஸவாதி என்ற பதம் அர்த்தமற்றது.

"பாசிசத்தின் பிரதான தன்மை வலதுசாரி, தேசியவாத சர்வாதிகார அரசியலாகும்". "பாசிச நடைமுறையில் சில கொடுஞ்செயல்களை சில விடுதலை இயக்கங்கள் வரித்துக் கொண்டுள்ளன. அத்தகைய பாசிசப் பண்புகளையும்" இப்படியான பண்புகளைக் கொண்டுள்ள இயக்கங்களும் பாசிசவாதிகளே. இவர்களை பாசிசவாதிகளெனச் சொல்ல முடியாதெனச் சொல்லி பாசிசவாதி என்ற சொல் வெறும் வகையாகப் பயன்படுத்தப்படுகிறது என்பது கற்பனையானது. பாசிசப் பண்பை ஏற்றுக்கொள்ளும் சிவசேகரம் அதைப் பாசிசமில்லை எனச் சொல்லி வகைச் சொல்லாக சொல்வது தவறானது. பாசிசப் பண்பு தேசியவாதம் இல்லாத பிரிவுகளிடத்தில் ஏற்படினும் அவைகளை பாசி சக்திகளாக இனம் காண முடியும்.

சமர், தூண்டில், உயிர்ப்பு, மனிதம் மற்றும் தனிநபர்களின் கடந்தகால விவாதங்களில் புலிகள் தமிழ் மக்களின் தேசவிடுதலைப்போராட்டத்தை தமது நோக்கில் பயன்படுத்துவதை ஏற்றுக்கொண்டுள்ளனர். இவர்கள் புலிகளைப் பாசிச சக்தியெனக் கூறுகின்றனர். ஆனால் சிவசேகரத்தின் விவாதம் தேசியசக்தியெனச் சொல்லாதவர்கள் (தேசியத்தைப் பயன்படுத்துவதை ஏற்றுக் கொள்ளாதவர்கள்) பாசிசம் எனச் சொல்வதாக சொல்கிறார். அப்படியான கருத்துக்களை யார் முன்வைத்தார்களெனத் தெரியாமல் உள்ளது. பழைய தேடல் இதழ்கள் அல்லது இது தொடர்பான கருத்துக்கள் கிடைப்பின் இவ் விவாதம் சிறப்பாக அமையும். அப்படி வெளிவந்த கருத்துக்கள் எதில் வந்ததென எமக்கு அறியத்தரின் விவாதத்தை தொடரமுடியும்

www.tamilarangam.net

## சமூகப் பிரச்சனைகளைக் கண்டறிவதெப்படி?

தமிழ் ஈழப் போராட்டத்தின் பாய்ச்சல் இன்று சீரழிக்கப்பட்டுப் பாசிசமாக பரிணாமம் பெற்றுள்ளது. இந்நிலையில் பாசிசம் முழுமையாக எந்த நிபந்தனையுமின்றி அம்பலப்பட்டு வரும் இன்றைய நிலையில், எழுந்து வரப்போகும் போராட்டத்தை வேறொரு பாதையில் சீரழிந்து விடும் போக்கை இன்று காணமுடிகிறது. இன்று வரட்டுவாதமும், திரிபுவாதமும், நவமார்க்சியமும் சமுதாயத்தைச் சீரழித்து வருகின்றது. எப்படி பாசிசம் மக்களின் விடுதலைக்கு எதிரானதோ அதற்கு எந்த விதத்திலும் திரிபுவாதமும், நவமார்க்சியமும், வரட்டுவாதமும் குறைவானதல்ல.

திரிபுவாதமும், நவமார்க்சியமும், வரட்டுவாதத்திற்கு எதிராகப் போராடும் அதேநேரம் மார்க்சியத்தை பொருள்முதல்வாத நோக்கில் ஆராய்வது அவசியமானது. நாம் அந்தவகையில் மார்க்ஸ், எங்கல்ஸ், லெனின், ஸ்டாலின், மாவோ போன்றோரின் அடிப்படைக் கோட்பாடுகளை மேற்கோள் காட்டுவது தவிர்க்க முடியாதது. அவர்கள் சொந்த நாட்டின் குறிப்பான நிலைமைகளையொட்டி வரைந்த கருத்துக்கள் எம் குறிப்பான நிலைமைகளுடன் பொருந்தாமலிருக்கலாம். ஆனால் பொதுவானவையும், அடிப்படை விதிகளும் என்றும் அடிப்படையானது. இதை மறுக்கும் சிலர் அடிப்படைக் கோட்பாடுகள் எந்த வகையில் தவறானது என்பதை ஆராய்வதை விடுத்து, தமது புதிய கருத்துக்களைத் திணிக்கும் வகையில் அடிப்படை விதிகளைப் பழைமைவாதமென கூச்சலிடுகின்றனர். புதிய கருத்துக்களை ஆரோக்கியமான விமர்சன வழியூடாக பழைய கருத்துக்களை நிராகரிக்கத் தவறுவதேன்?. அப்படி நிராகரிக்காமல் பழைமைவாதம் என்ற ஒரு சொற்றொடராக நிராகரிப்பதென்பது கற்பனாவாதமே. இன்றைய சோவியத், சீன நிலைமைகளைக் கொண்டே புதியதென ஒன்றை எட்டிப் பிடிப்பது என்பதும் கற்பனாவாதமே. அங்கென்ன நடந்ததென ஆராய்வதும், கடந்தகால தத்துவம் தவறெனின் அதை தெளிவாக முன்வைத்தே புதியதை நோக்கிச் செல்லவேண்டும். இதுவே மார்க்சிய அணுகுமுறையாகும்.

முரண்பாடுகளைக் கையாள்வது பற்றிய அடிப்படை விடயத்திலிருந்தே சமூகப் பிரச்சனைகளைக் கண்டறிய முடியும். இன்று ஐக்கிய இலங்கை, தமிழீழம் மற்றும் பல விடயங்களை ஆராய்வதெனின் முரண்பாடுகளின் செயற்பாட்டை தெளிவாக புரிந்து கொள்ள வேண்டும். அடிப்படை முரண்பாட்டை கண்டறிய மாவோவினால் எழுதப்பட்ட "முரண்பாடுகள் பற்றி...." என்ற நூலிலிருந்து சில பகுதிகளைத் தொகுத்து முன்வைக்கின்றோம்.

www.tamilarangam.net

அறிவதில் இரு போக்குகள் உள்ளன. ஒன்று குறிப்பிட்ட தனி இயங்கிலிருந்துபொதுவானதைப் பற்றி அறிவது. மற்றொன்று பொவானதிலிருந்துகுறிப்பிட்ட தனி இயல்பு வாய்ந்ததை அறிந்து கொள்வது. இவ்வாறு அறிவு எப்போதுமே சூழல் வட்டங்களாக இயங்குகின்றது. அறிவியல் முறை நெறிபிறழாமல் கடைபிடிக்கப்படும் வரை ஒவ்வொரு சுற்று வட்டமும் மனித அறிவை மேலும் ஒருபடி உயர்த்தி அதை மேன் மேலும் ஆழமானதாக்குகிறது. இப்பிரச்சனையில் நமது வறட்டு தத்துவவாதிகள் எங்கே தவறுகிறார்கள் தெரியுமா? ஓர்புறம் முரண்பாட்டின் எங்கும் நிறைந்த இயல்பையும் பொருட்களின் பொது உட்சாரத்தையும் போதிய அளவு அறிந்து கொள்ளாமல், அதற்கே உரிய குறிப்பிட்ட தனி இயல்பையுடைய உட்சாரத்தையும் ஆராய வேண்டும் என்பதை அவர்கள் புரிந்து கொள்ளவில்லை. மற்றோர் புறம் பொதுவான உட்சாரத்தையும் புரிந்து கொண்ட பிறகு, நாம் தொடர்ந்து சென்று, இதுவரை முற்றாக ஆராய்ந்தறியப்படாத அல்லது இப்போது புதிதாகத் தோன்றியுள்ள திட்டவட்டமான பொருட்களையெல்லாம் ஆராய வேண்டும் என்பதையும புரிந்து கொண்டுள்ளாததிலும் தான் அவர்கள் தவறு இழைக்கின்றனர். நமது வரட்டுத் தத்துவவாதிகள் முழுச்சோம்பேறிகள். அவர்கள் திட்டவட்டமான விசயங்களைப் பற்றி ஆராய எவ்வித முயற்சியையும் எடுக்க மறுக்கிறார்கள். பொது உண்மைகள் வெறும் மையத்திலிருந்து — சூனியத்திலிருந்து — தோன்றுவதாகக் கருதுகிறார்கள். அவர்கள் அவற்றைச் சிறிதும் புலனற்ற அருவமான ஆழங்காணமுடியாத ஒட்டை வாய்ப்பாடுகளாக ஆக்கிவிடுகிறார்கள். அதாவது குறிப்பிட்டதிலிருந்து பொதுவானதிற்கும் பொதுவானதிலிருந்து குறிப்பிட்டதிற்குமுள்ள, ஒன்றுக்கொன்றான தொடர்பைப் பற்றியும் அவர்கள் புரிந்து கொள்ளவில்லை.

பண்பால் வேறுபட்ட முரண்பாடுகளைப் பண்பால் வேறுபட்ட முறைகளாலேயே தீர்க்க வேண்டும். எடுத்துக்காட்டாக பாட்டாளி வர்க்கத்திற்கும் முதலாளிவர்க்கத்திற்கும் இடையிலுள்ள முரண்பாடு சோசலிசப்புரட்சி முறையால் தீர்க்கப்பட வேண்டும். பரந்துபட்ட மக்களுக்கும், நிலவுடமை அமைப்புக்குமிடையில் உள்ள முரண்பாடு ஜனநாயகப்புரட்சி முறையால் தீர்க்கப்பட வேண்டும். குடியேற்ற நாடுகளுக்கும் ஏகாதிபத்தியத்திற்குமிடையில் உள்ள முரண்பாடுதேசியப் புரட்சி முறையால் தீர்க்கப்பட வேண்டும்....

நமது வரட்டு வாதிகள், இக்கோட்பபட்டைக் கடைப்பிடிப்பதில்லை வெவ்வேறு வகையான புரட்சியில் அதன் நிலைமைகள் வேறுபடுகின்றன என்பதை அவர்கள் புரிந்து கொள்ளவில்லை. எனவே வேறுபட்ட முரண்பபாடுகளைத் தீர்க்க வேறுபட்ட வழிமுறைகளைப் பயன்படுத்தப்பட வேண்டும் என்பதை அவர்கள் உணர்ந்து கொள்வதில்லை. அதற்கு மாறாக தாம் கற்பனை செய்து கொண்ட மாற்ற முடியாத வாய்ப்பாடொன்றை எப்போதும் எல்லா இடங்களிலும் தம் மனம் போனபடி எதிலும் கையாளுகின்றனர்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஒரு பிரச்சனையை ஆராயும் போது அகநிலைப் போக்கு, ஒருதலைப்பட்ச போக்கு, மேலோட்டமான போக்கு ஆகியவற்றைத் தவிர்த்தல் வேண்டும்.

ஒருதலைப்பட்சப் போக்கு என்பது பிரச்சனைகளை முழுமையாகப் பார்க்கத் தவறுவதாகும். எடுத்துக் காட்டாக ஜப்பானைப் புரிந்து கொள்ளாமல் பொதுவுடமைக் கட்சியை மட்டும் புரிந்து கொள்வது; கோமிடாங்கைப் புரிந்து கொள்ளாமல் பொதுவுடமைக் கட்சியை மட்டும் புரிந்து கொள்வது; முதலாளிய வர்க்கத்தைப் புரிந்து கொள்ளாமல் பாட்டாளி வர்க்கத்தை மட்டும் புரிந்து கொள்வது, பெரு நிலஉடமையாளர்களைப் புரிந்து கொள்ளாமல் விவசாயிகளை மட்டும் புரிந்து கொள்வது, முழுமையை புரிந்து கொள்ளாமல் தனிப் பகுதியை மட்டும் புரிந்து கொள்வது ---------

லெனின் கூறினார் "ஒருபொருளை உண்மையாக அறிய வேண்டுமானால், நாம் அப்பொருட்களின் அனைத்துப் பகுதியையும், எல்லாத் தொடர்புகளியும் "இடைத் தொடர்பு" களியும் தழுவிய வகையில் ஆராய வேண்டும்."
ஒருதலைப்பட்ச போக்கு, மேலோட்டப் போக்கும் கூடஅகநிலை நோக்கு தான் காரணம். புற நிலையில் உள்ளவை அனைத்தும், உண்மையில் ஒன்றுக் கொன்று தொடர்புடையவை, அதுவிதிகளின் நியதிக்குப்பட்டவை. ஆனால் ஒரு சிலரோ, உள்ளவை உண்மையில் எவ்வாறு உள்ளனவோ அவ்வாறே அவற்றைச் சிந்தனைக்கு உட்படுத்தும் கடமையைச் செய்வதற்குப் பதிலாக, அவற்றை ஒரு தலைப்பட்சமாகவும், மேலோட்டமாகவும் மட்டும் பார்க்கிறார்கள். அவை ஒன்றுக் கொன்று கொண்டுள்ள தொடர்புகளையோ, அவற்றின் அகவிதிகளையோ அறியாதிருக்கின்றனர். எனவே அவர்கள் முடிபு அகநிலை போக்காக உள்ளது.

ஒரு பொருளின் வளர்ச்சியிலுள்ள எதிரானவைகளின் இயக்கத்தின் வளர்ச்சி போக்கு முழுவதும் சிறப்புத் தன்மைகளைக் கொண்டிருக்கிறது. இச்சிறப்பு தன்மை, அவை ஒன்றுக் கொன்று கொண்டுள்ள தொடர்பிலும், அவற்றின் ஒவ்வொரு கூறிலும் காணப்படுகிறது. அத்தோடு அவ்வளர்ச்சிப் போக்கிலுள்ள ஒவ்வொரு கட்டமும் அக்கட்டத்திற்கே உரிய சிறப்புத் தன்மைகளைக் கொண்டுள்ளது.

ஒரு நீண்ட வளர்ச்சிப் பாதையிலுள்ள ஒவ்வொரு கட்டத்திலும் நிலைமைகள் வேறுபடுவது இயல்பு. ஏனெனில் ஒன்றின் வளர்ச்சிப் போக்கில் உள்ள அடிப்படை முரண்பாட்டின் தன்மையும் மாறாமல் இருந்த போதிலும், இந்நீண்ட போக்கில் ஒரு கட்டத்திலிருந்து அடுத்தக்கட்டத்திற்குச் செல்லும் போது அடிப்படை முரண்பாடானது மேன்மேலும் கடுமையானதாகிறது. கூடவே அடிப்படை முரண்பாட்டால் நிர்

www.tamilarangam.net

யைிக்கப்பட்டுகிற அல்லது தாக்கப்படுகிறபல்வேறு பெரிய அல்லது சிறிய முரண்பாடுகள் சில கடுமையாகின்றன. சில தற்காலிகமாகவோ, அல்லது அரைகுறையாகவோ தீர்வு பெறுகின்றன. அத்துடன் சில புதிய முரண்பாடுகளும் தோன்றுகின்றன.

நாம் எவ்வகையிலும் அகநிலைப் போக்குடையவர்களாக இருக்கக் கூடாது. தன்னிச்சைப் போக்குடையவர்களாகவும் இருக்கக்கூடாது. இந்த நிகழ்ச்சியில் போக்குகளின் மெய்யான புறநிலை இயக்கத்தில் உள்ள திட்டவட்டமான பருண்மையான நிலைகளிலிருந்து அவற்றின் திட்டவட்டமான முரண்பாடுகளைக் கண்டறிய வேண்டும். முரண்பாடுகள் ஒன்றுக்கொன்று கொண்டுள்ளதிட்டவட்ட உறவுகளையும் கான வேண்டும்

அதாவது இயக்கம், பொருட்கள், நிகழ்ச்சிப்போக்குகள், சிந்தனை இவையெல்லாமே முரண்பாடுகள் தான் முரண்பாட்டை மறுப்பது என்பது அனைத்தையும் மறுப்பது ஆகும். இது எல்லாக் காலத்துக்கும் எல்லா நாட்களுக்குமுரிய, விதிவிலக் பொதுமை தழுவிய உண்மையாகும்..

ஒவ்வொரு முரண்பாடும் குறித்த தன்மை கொண்டிருப்பதாலேயே தனிப்பண்பு தோன்றுகிறது. தனிப்பண்புகள் யாவும் நிலைமைக்குட்பட்டவையாகவும், தற்காலிகமானவையாகவும் இருக்கின்றன. ஆகவே அவை சார்புடையவையாகவும் இருக்கின்றன.

சீனு போன்ற அரைக் காலனிய நாட்டில் முதன்ம முரண்பாட்டிற்கும் முதன்மையல்லாத முரண்பாடுகளுக்குமிடையே உள்ள உறவு ஒரு சிக்கலான கட்சியை நமக்கு வழங்குகிறது.

இத்தகையதொரு நாட்டின் மீது ஏகாதிபத்தியம் ஆக்கிரமிப்புப் போர் தொடுக்கும் போது, ஒரு சில தேசத் துரோகிகளைத் தவிர, நாட்டின் பல்வேறு வர்க்கங்கள் அனைத்தும் ஏகாதிபத்தியத்திற்கெதிரான தேசியப் போரொன்றில் தற்காலிகமாக ஐக்கியப்படமுடியும். அத்தகையவேளையில் ஏகாதிபத்தியத்திற்கும் குறிப்பிட்ட நாடுகளுக்குமிடையேயுள்ள முரண்பாடு முதன்மை முரண்பாடாகிறது. நாட்டின் பல்வேறுவர்க்கங்களுக்குமிடையேயுள்ள முரண்பாடுகள் அனைத்தும் (ஈவற்றில் முன்பு முதன்மை முரண்பாடாக இருந்ததே அதுவும் அடங்கும். அதாவது நிலவுடமை அமைப்பு முறைக்கும் பந்தப்பட்ட மக்கள் திரளினருக்கும் இடையிலான முரண்பாடும் இவற்றில் அடங்கும்.) தற்காலிகமாக ஓர் இரண்டாம் தர கீழ்ப்பட்ட நிலைக்குத் தாழ்த்தப்படுகின்றன

எது நிகழ்ந்த போதிலும், ஒவ்வொரு கட்டத்திலும் தலைமைப் பாத்திரம் வகிக்கும் முதன்மை முரண்பாடு ஒன்றே ஒன்று தான் இருக்கும் என்பதிலும் யாதொரு ஐயமுமில்லை.

www.tamilarangam.net

ஆகவே எந்தவொரு வளர்ச்சிப்போக்கிலும், ஒன்றுக்குமேற்பட்ட முரண்பாடுகள் இருக்குமேயானால், அவற்றில் ஒன்று தலைமைப் பங்கை, நிர்ணயம் செய்யும் பங்கை வகிக்கும் முதன்மை முரண்பாடாகவே இருக்கும். மற்றவை, இரண்டாம் நிலையில், கீழ்ப்பட்ட நிலையிலிருக்கும். எனவே, இரண்டோ அல்லது இரண்டுக்கு மேற்பட்ட முரண்பாடுகளுடைய எந்த ஒரு சிக்கலான வளர்ச்சிப் போக்கையும் நாம் ஆராயும் பொழுது அதன் முரண்பாட்டைக் காண நாம் அனைத்து வழிகளிலும் முயல வேண்டும். ஒரு முறை இம்முதன்மை முரண்பாட்டை இறுகப் பற்றியதும் எல்லாப் பிரச்சனைகளும் எளிதில் தீர்வு காண்கின்றன. இந்த முறையான முதலாளியச் சமுதாயம் பற்றிய தமது ஆய்வில் மார்க்ஸ் நமக்கு கற்றுத் தந்துள்ள முறையாகும்.

ஒரு வளர்ச்சிப் போக்கிலுள்ள அனைத்து முரண்பாடுகளையும் ஒன்றுக்கொன்று சமமானவையாகக் கருதக் கூடாது. முதன்மை முரண்பாட்டிற்கும் இரண்டாம் நிலை முரண்பாட்டிற்குமிடையிலுள்ள வேறுபாட்டைக் காண வேண்டும். முதன்மை முரண்பாட்டை இறுகப் பற்றுவதில் சிறப்புக் கவனம் செலுத்த வேண்டும்.

முரண்பாடுக் கூற்றுக்களின் இரண்டில் ஒன்று முதன்மையானது. மற்றொன்று இரண்டாம் நிலையானது. முதன்மைக்கூற்றே முரண்பாட்டிடல் தலைமைப் பாத்திரம் வகிக்கிறது. ஒரு பொருளின் இயல்பை நிர்ணயிப்பதில் முதன்மைப் பங்கு வகிப்பது ஒரு முரண்பாட்டிலுள்ள முதன்மைக் கூறுகும். இது ஆதிக்க நிலையைப் பெற்றுள்ள கூறுகும்.

ஆனால் இந்நிலைமை நிலையானதன்று. முரண்பாட்டின் முதன்மைக் கூறும் முரண்பாட்டின் முதன்மையல்லாத கூறும் அவற்றின் எதிர் மறைகளாகத் தாமே மாறி விடுகின்றன. இதற் கேற்பவே ஒரு பொருளின் இயல்பும் மாறுகிறது.

குறிப்பிட்ட கட்டத்தில் "அ" என்பது முதன்மைக் கூறுகவும் "ஆ" என்பது முதன்மையல்லாதக் கூறுகவும் இருக்கின்றன. மற்றொரு கட்டத்தில் அல்லது மற்றொரு வளர்ச்சிப் போக்கில் பாத்திரங்கள் இடம் மாறுகின்றன. ஒரு பொருளின் வளர்ச்சிப் போக்கிலுள்ள இரண்டு கூறுக்குமுள்ள சக்தி எந்த அளவுக்குக் கூடுகிறதோ அல்லது குறைகிறதோ அந்த அளவுக்கு இடமாற்றம் நிகழ்கின்றது.

www.tamilarangam.net

தொடர்பு முகவரி :-

"SAMAR"
87,RUE DE COLOMBES
92600 ASNIERES S/SEINE
FRANCE

சந்தா அனுப்பவேண்டிய தபாற்கணக்கு :-

2.674.73
CENTRE DE CHEQUEES POSTAUX
75900 PARIS CHEQUES
FRANCE

சந்தா விபரங்கள் :-

| | | | |
|---|---|---|---|
| பிரான்ஸ்.................... | 6 | பிரதிகள்....... | 60 |
| | 12 | பிரதிகள்....... | 120 |
| ஐரோப்பியநாடுகள்........ | 6 | பிரதிகள்....... | 100 |
| | 12 | பிரதிகள்....... | 200 |
| ஏனைய நாடுகள்......... | 12 | பிரதிகள்....... | 225 |

வாசகர்களே ! உங்களிடமிருந்து ஆக்கங்களையும்,ஆரோக்கியமான விமர்சனங்களையும் எதிர்பார்க்கின்றோம்.

www.tamilarangam.net



வெளியீடு – தமிழ் அகதிகள் இலக்கிய வட்டம்

(பதிவு செய்யப்பட்டது – 3/16956)